

பொதுநலவாயப் பளுதூக்கு தலில் பங்குபற்றும் முன்னாள் அழகுராணி
பக்கம் 19


# உதயன்

சுடர்: 29 கதிர்: 242 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 10, சனி 26.07.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# திரைப்படம் வெளியிடவும் யாழ்ப்பாணத்தில் தடை

## தணிக்கைக் குழுவாக பொலிஸார் அதிரடி மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
புலம்பெயர் தமிழர்களால் யாழ்ப்பாணத்திலும் சுவிஸ் நாட்டிலும்தயாரிக்கப்பட்ட திரைப்படத்தை யாழ். நகரில் வெளியிடுவதற்குப் பொலிஸார் தடைவிதித்துள்ளனர். ராஜா திரையரங்கில் நேற்று மாலை 'மாறுதடம்' திரைப் படம் திரையிடப்பட்ட 5 ஆவது நிமிடத்தில் அங்கு வந்த பொலிஸார் அதிரடியாக படத்தைத் தடை செய்தனர்.

படத்தின் இறுவட்டை இயக்குநரிடம் கேட்டுப்பெற்ற பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு அதனை எடுத்துச் சென்று பார்த்தனர். தாம் படத்தைப் பார்த்து அனுமதித்தால் மட்டுமே அதனைத் திரையிட முடியும் என்று பொலிஸார் கூறினர் என்று இயக்குநர் ரமணதாஸ் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

உரிய அனுமதி பெறாமல் குறித்த படம் திரையிடப்படுகிறது என்று கூறியே பொலிஸார் அதனைத் தடை செய்துள்ளனர். ஆனால், "இந்தத் திரைப்படத்தை இங்கு திரையிடுவதற்கு இலங்கைத் திரைப் படக் கூட்டுத்தாபனத்திடம் கடந்த வருடம் அனுமதிகோரியிருந்தோம். இதற்கு அனுமதி தேவையில்லை என்று அவர்கள் கூறிவிட்டனர்" என்று தெரிவித்தார் இயக்குநர்.

உரிய நடைமுறைகளைப்

22 ஆம் பக்கம் பார்க்க

## கிராம அலுவலருக்கு மிரட்டல்; கப்பமும் பெற முயற்சி

முல்லைத்தீவு, ஜூலை 26
முல்லைத்தீவு செம்மலை கிராம அலுவலர் தொலைபேசியில் மிரட்டப்பட்டுள்ளார். அவரிடம் கப்பமும் கோரப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிராம அலுவலர் கடமையில் இருக்கும்போது இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது:- கிராம அலுவலரின் தொலைபேசிக்கு அழைப்பெடுத்த அடையாளம் தெரியாத நபர் ஒருவர் தான் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவிலிருந்து கதைக்கிறார் என்று கூறியிருக்கிறார். நீங்கள் 2007ஆம் ஆண்டு ஒருவருக்கு களவான அடையாள அட்டை தயாரித்து கொடுத்துள்ளீர்கள் என கிராம அலுவலர் மீது குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அவர் அந்த அடையாளஅட்டையைவைத்து பல குற்றச்செயல்களில் ஈடுபட்டார் என்றும் அதற்காக

22 ஆம் பக்கம் பார்க்க

## விவசாய போதனா ஆசிரியர்கள் 100 பேர் விரைவில் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
வடக்கிலுள்ளவிவசாய போதனா ஆசிரியர்களின் வெற்றிடத்தை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வை நடத்த வடக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழுள்ள பல்வேறு வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் விவசாயத் திணைக்களத்தின் கீழ் முக்கியமாக நிரப்பப்பட வேண்டிய வெற்றிடமாக இருந்த, விவசாயப் போதனா ஆசிரியர் பதவிகளை முதலில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கில் 100 விவசாயப் போதனாசிரியர்களை உடன் நியமிப்பதற்கான அனுமதி வடக்குமாகாண அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொதுச் சேவை ஆணைக் குழுவினால் பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பம்

22 ஆம் பக்கம் பார்க்க




காரைநகரில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமிகள் தொடர்பான வழக்கு நேற்று யாழ்.சிறுவர் நீதிமன்றில் நடந்தது. அதேநேரம், குறித்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெண்கள் அமைப்பால் நீதிமன்றத்தின் முன் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.(ற-21)

## சர்வதேச நிபுணர் குழு அடுத்தவாரம் வருகிறது

கொழும்பு, ஜூலை 26
போர்க் குற்றங்கள் குறித்தும் ஆராயவுள்ள, காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு அடுத்த வாரம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க 3 சர்வதேச வல்லுநர்களை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் நியமித்தார். தேவைப்பட்டால் அவ்வப்போது இன்னும் பல சர்வதேச வல்லுநர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தார்.

சேர் டெஸ்மன் டி சில்வா, சேர் ஜொப்ரி நைஸ், பேராசிரியர் டேவிட் கிறேன் ஆகியோரை உள்ளடக்கிய இந்த ஆலோசனைக்குழு தனது பணிகளை ஆரம்பிக்கும் நோக்குடன் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது. இந்தக் குழுவினர், தமது விசாரணைகளில் பங்கெடுப்பது கூடுதல் வெளிப்படைத் தன்மையையும், சர்வதேச அங்கீகாரத்தையும் வழங்கும் என்று விசாரணைகளை

22 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன் ரயில் நிலைய புனரமைப்புப் பணி ஆரம்பம்

### உயர் பாதுகாப்பு எல்லைக்குள்ளும் ரயில் பாதை அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26
வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் காங்கேசன் துறை ரயில் நிலையத்தை புனரமைப்புச் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பொதுமக்கள் யாருமே நுழைய முடியாதவாறு நிரந்தர பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு வேலியை, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள வீமன்காமம் பகுதியால் ரயில் பாதை ஊடறுத்துச் செல்கிறது. அதையும் மூடியே நிரந்தர பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டிருந்தது.

இதனால் நிரந்தர பாதுகாப்பு வேலியின் உட்புறத்தில் ரயில் பாதை புனரமைப்பு இடம் பெறுமா என்ற சந்தேகம் நிலவி வந்தது.

எனினும் தற்போது ரயில் பாதைப் புனரமைப்பு பணிகள் அந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழைப் பிரதேசத்தில் ரயில் பாதைப் புனரமைப்புப் பணிகள் முடிவடையும் நிலையில், காங்கேசன்துறை வரையிலான பாதையைப்புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரயில் பாதை ஊடறுக்கும் பகுதி

22 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் சிறுமிகளின் வழக்கு; சம்பவ இடத்தில் சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26
காரைநகரில் சிறுமிகள் இருவர் கடற்படையினரால் வன்புணர்வு செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கில், சம்பவ இடத்திலிருந்து சைக்கிள் ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர். நேற்று அந்தச் சைக்கிள் சான்றுப் பொருளாக நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது.

நீதிமன்றப் பணிப்பின்பேரில் விசாரணைக்காக சிறுமிகளைச் சம்பவ இடத்துக்கு கடந்த திங்கட்கிழமை அழைத்துச் சென்ற சமயம் அவர்கள் காட்டிய இடத்தில் இருந்து இந்தச் சைக்கிளைத் தாம் மீட்டனர் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார் பதில் நீதிவான்.

சிறுமியை வன்புணர்வு செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கடற்படையினர் 7 பேரும் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய இரண்டு கடற்படைச் சிப்பாயினரை பொலிஸ் நிலையத்துக்கு வந்து வாக்குமூலம் தருமாறு பணித்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

22 ஆம் பக்கம் பார்க்க

உதயன்
26.07.2014

# உயிரைத் தவிர அனைத்தையும் மீளத் தருவேன் என்றவரே ஏன் எங்களை இன்னும் மீளக்குடியமர்த்த முன்வரவில்லை?

## ஜனாதிபதியிடம் சம்பூர் மக்கள் உருக்கமான கேள்வி



யாழ்ப்பாணம், ஜூலை 26

போரில் தமிழ் மக்கள் இழந்த உயிர்களைத் தவிர அனைத்தையும் மீண்டும் பெற்றுத் தருவேன் என்று தான் வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாகத் தங்களைத் தமது சொந்த இடத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீளக்குடியமர்த்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர் சம்பூர் மக்கள்.

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 8 வருடங்களாக நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்கின்றனர். தமது அவல நிலை தொடர்பாக அவர்கள் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்து விட்ட பின்னரும்கூட அகதி முகாம்களில் வாழும் எமது துயரத்தை தங்களின் நேரடிக் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம். கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதியுடன் நாம் இடம்பெயர்ந்து எட்டு வருடங்கள் முடிவடைந்து விட்டன. கடந்த இரண்டு வருடங்களாக எமக்கான உலர் உணவும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் எமது பிள்ளைகளும் நாமும் பசி, பட்டினி, வறுமையுடன் தகரக் கொட்டில்களுக்குள் வாடுகின்றோம். வெப்பத்தால் நோய்வாய்ப்பட்டு மிகுந்த துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இதுவரை எங்கள் துயரங்கள் தங்களின் கவனத்திற்கு எட்டவில்லையோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சம்பூர் பிரதேசத்தில் அனல் மின் நிலையம் உட்பட பல்வேறு திட்டங்களுக்கென ஆயிரத்து 458 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுவீகரிக்கப்பட்டுள்ள பகுதிக்குள் 219 குடும்பங்கள் வாழ்ந்தன. அந்தக் குடும்பங்களுக்கு அங்கு சொந்தமான குடியிருப்பு நிலங்கள் உள்ளன. சுவீகரிக்கப்படாத எஞ்சிய பகுதியில் ஏனையோரைக் குடியேற்றுவதற்கான வாய்ப்பிருந்தும் இதுவரை அதற்கான முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை.

அவ்வாறு சுவீகரிக்கப்படாத பகுதியில் சுமார் 700 குடும்பங்கள் வாழ்ந்தன. அங்கு இப்போது சம்பூர் மகா வித்தியாலயத்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு கடற்படை முகாம் மட்டுமே உள்ளது. அந்த முகாமுக்கு என்று கடற்கரையோரமாக குறிப்பிட்டளவு நிலத்தை ஒதுக்கீடு செய்து ஏனைய பகுதிக்குள் மக்களை குடியேற்ற முடியும். அவ்வாறு சம்பூரின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஆறாம் வட்டாரங்களை முழுமையாகவும் ஐந்தாம், ஏழாம் வட்டாரங்களின் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் எம்மைக் குடியேற்ற முடியும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் 2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக உரையாற்றும்போது, அனல் மின் நிலையத்துக்கு தேவைப்படாத காணிகள் மீள வழங்கப்பட்டு மக்கள் குடியேற்றப்படுவர் என்று உறுதி கூறினார்.

அவ்வாறு அந்தப் பகுதிக்குள் வாழ்ந்த குடும்பங்களை முதலில் குடியேற்றினால் சுவீகரிக்கப்பட்ட பகுதிக்குள் வாழ்ந்த 219 குடும்பங்களும் மாற்றிடங்களை தேடிக்கொள்ள முடியும். ஆனால் இது குறித்து ஆராய்ந்து எமது மீள் குடியேற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

தமிழ் மக்கள் போரில் இழந்த உயிர்களைத் தவிர ஏனைய அனைத்தையும் பெற்றுத் தருவேன், என்று தாங்கள் முன்னர் தெரிவித்த கருத்து எங்களுக்கு நம்பிக்கையை தருகின்றது. அந்த அடிப்படையில் தாங்கள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு தகுதி வாய்ந்த ஒரு அதிகாரியை நியமித்து நீண்ட நாள்களாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் எமது பிரச்சினையைத் தீர்த்து, போரின் பின்னரான அமைதியும் இயல்பு வாழ்வும் எமக்கு கிடைப்பதற்கும், எட்டு வருடங்கள் பின் தள்ளப்பட்டு விட்ட எமது சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சியை மீண்டும் முன் னெடுப்பதற்கும் நாமும் இந்த நாட்டில் சமாதானத்தையும் சக வாழ்வையும் அனுபவிக்கும் குடிமக்கள் என்ற உணர்வுடன் வாழ்வதற்கும் உதவவேண்டும் - என்று குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

## விடுவிக்கப்பட்ட மீனவர்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் 41 பேரும் அவர்களது சொந்த இடங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.


மாத்தறை, நீர்கொழும்பு மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த மீனவர்களும், அவர்களது 8 படகுகளுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்தியக் கடற்படையினர் குறித்த மீனவர்களை காங்கேசன் துறைக்டற்படையினரிடம் நேற்று முன்தினம் இரவு கையளித்தினர். அதையடுத்து அவர்கள் யாழ். நீரியல் வளத்துறை அதிகாரியிடம் கடற்படையினரால் நேற்று ஒப்படைக்கப்பட்ட னர். (ற)



வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் அதில் கலந்துகொண்டு மாவைக் கந்தன் அருள் பெற்றனர். (ற-86)

## யாழ். - கொழும்பு ரயில் ஆரம்பம் செப்ரெம்பரில்

### அதிகாரிகள் நம்பிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரயில் பாதை அமைப்புப் பணிகள் முடிவுற்றமைக்கான அறிவித்தல் இன்னும் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெறவில்லை என்று வட மாகாண ரயில்வே திணைக்கள அதிகாரி அபேரத்ன தெரிவித்தார்.

வடக்கில் ரயில் பாதைகள் முற்றாக இல்லாதிருந்த நிலையில் அவை வேகமாக அமைக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை கடந்த ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்வு கூறப்பட்டு வந்தது. எனினும் அது சாத்தியமாகவில்லை. எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கிடையே முடிவுறுத்தும் வகையில் பணிகள் இப்போது விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் கூறுகின்றனர். "யாழ்ப்பாணம் வரைக்குமான ரயில் தண்டவாளங்கள் அனேகமாகப் பொருத்தப்பட்டு விட்டன. ஆங்காங்கே ரயில் நிலையங்களை அமைக்கும் பணிகளும் நிறைவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. முதலில் பரீட்சார்த்தமாக சேவை நடைபெற்ற பின்னர் வழமையான சேவை ஆரம்பிக்கப்படும்" எனத் தெரிவித்தார் அபேரத்ன. (உ-14)

## இலங்கையர் கொலை; பிரிட்டன் பிரஜைகளுக்கு சிறை

கொழும்பு, ஜூலை 26

இலங்கை பிரஜை ஒருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் பிரிட்டன் பிரஜைகள் இருவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு பிரிட்டன் சென்ற 25 வயதான தவிச பீரிஸ் என்பவரை கொலை செய்த வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இரு பிரித்தானியர்களுக்கே சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளுக்கு 23 மற்றும் 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளில் ஒருவரான கஜீப் அகமட் என்ற 18 வயது இளைஞன் தாம் கொலை செய்தார் என்பதை நீதிமன்றில் ஒப்புக் கொண்டிருந்தார். (ற)

## ஆறு மாத காலப்பகுதியில் ஆயுதமுனைக் கொள்ளைகள் 14

கொழும்பு, ஜூலை 26

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஆயுதமுனையில் கொள்ளையிடப்பட்ட 14 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்த சம்பவங்களையொத்த இன்னுமொரு சம்பவம் நிட்டம்புவையில் பதிவாகியுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். நிட்டம்புவையில் நகைக்கடையொன்றினுள் ஆயுதங்களுடன் நுழைந்த கொள்ளையர்களை பிடிப்பதற்காக அதன் உரிமையாளர் மற்றும் பாதுகாப்பு ஊழியர்கள் சிறந்த முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குற்றச்செயல்களை தவிர்ப்பதற்காக வர்த்தக நிலையங்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், கடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களின் போது, கொள்ளையர்கள் முகங்களை முற்றாக மறைக்கும் வகையில் தலைக்கவசம் அணிந்திருந்தனர் என்றும் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட 14 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பிலும் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 10 சனிக்கிழமை (26.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 242

# சிறிய சம்பவத்தைக் கூட்டமைப்பு பெரிதுபடுத்த முயற்சி செய்கின்றது

### சபையில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

**இந்தியா உட்பட உலகில் தினமும் எத்தனையோ வல்லுறவுச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆயினும் காரைநகரில் நடைபெற்ற சம்பவத்தை – ஒரு சிறிய சம்பவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்துக்குப் பெரிதுபடுத்திக் காட்ட முயற்சித்து வருகின்றது. – இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் பிரதமர் டி.எம்.ஜயரத்ன.**

**நாடாளுமன்றில் காரைநகர் சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் விடுத்த விசேட கூற்றுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"கடந்த 15ஆம் திகதி காலை 7 மணியள

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சி செய்வது இனவாத அரசு எனில் மு.கா. ஏன் பங்காளியாக இருக்கிறது?

### உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் சாட்டை

கொழும்பு, ஜூலை 26

இலங்கை அரசை இனவாதி என்றும் அட்டூழியம் புரிவது என்றும் பகிரங்கமாகச் சாடிக்கொண்டே அதில் பங்காளியாக முஸ்லிம் காங்கிரஸ் இருப்பது பெரும் முரண் நிலை என்று காரசாரமாக விமர்சித்துள்ளார் உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அரசியல் நிலைப்பாடு குறித்து அவர் கருத்துத் தெரிவித்தார். அவர் கூறியதாவது:-

அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் மாநாட்டில் கலந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசனலி, எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இணைந்து செயற்படுவதன் மூலமே இரு இனங்களும் தம்மை காப்பாற்றிக்கொள்ள முடியும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். இந்தக் கருத்து உண்மையில் அவரது உள்ளத்திலிருந்து வந்ததா? அல்லது போக்கிடமில்லாததால் ஏற்பட்ட ஞானமா? என்பது தெரியவில்லை. ஆனாலும் சட்டி

(22ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் பட்டியலில் பதிய தவறியோருக்கு மறுவாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

2014ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் தமது பெயர் விவரங்களைப் பதிவதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள், அதனைச் செய்வதற்கான சந்தர்ப்பம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாடு முழுவதும் 2014 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் மீளாய்வு நடத்தப்பட்டது. இதில் தமது பெயர்களையும் சேர்த்துக்கொள்ளும் தகைமை கொண்டவர்கள், பதிவு நடைபெற்ற சமயத்தில் தற்காலிகமாக வீட்டிலிருந்து வெளியேறியிருந்தான் காரணமாக அல்லது வெளிநாடு சென்றிருந்தன் காரணமாக பதிவுகளைத் தவறவிட்டிருந்தால் மாவட்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மதுக் கடைகளுக்கு மூடுவிழா புனித ரம்ழான் நோன்பன்று

யாழ்ப்பாணம், ஜூலை 26

புனித ரம்ழான் பெருநாளை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் சகல மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும் என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் ஜி.என்.டி.கப்பு ஆராய்ச்சி அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ரம்ழான் பெருநாளுக்கு மதுபான நிலையங்கள் மூடப்பட வேண்டும் என்று மதுவரித் திணைக்களத்துக்கு இதுவரையில் அறிவுறுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வழக்கமான நடைமுறையின் ஊடாக தமது பெருநாளை தாம் கடைப்பிடிப்பதாக முஸ்லிம்கள் கருதியிருந்த

(22ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவில் வாள்வெட்டு: விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

கோண்டாவிலில் இளைஞன் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சகோதரருக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி வரையும் விளக்கமறியலை நீடித்தார் நீதிவான்.

வாளால் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டவருக்கு எதிர்வரும் 8ஆம் திகதிவரை மறியல் நீடிக்கப்பட்டது.

நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கோண்டாவிலைச் சேர்ந்த பாடசாலை

(22ஆம் பக்கம் பார்க்க)

## இராசபுரம் மக்களுடைய காணிகளை மீளவும் அவர்களிடம் ஒப்படையுங்கள்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. வலியுறுத்து

வவுனியா, ஜூலை 26

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சின்னடம்பன் கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்படும் குடியேற்ற முயற்சிகளைக் கைவிட்டு, அந்தக் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"சின்னடம்பன் கிராம அலுவலர் பிரிவிலுள்ள இராசபுரம் கிராமத்தில் வவுனியா நலன்புரி முகாம்

(22ஆம் பக்கம் பார்க்க)



## சீட்டுப் பணத்துடன் வர்த்தகர் தலைமறைவு

மன்னார், ஜூலை 26

மன்னார், பெரியகமம் பகுதியில் பிரபல வர்த்தகர் ஒருவர் பெருமளவு சீட்டுப் பணத்துடன் தலைமறைவாகிவிட்டார் என்று அவரால் ஏமாற்றப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறித்த வர்த்தகர் முன்னர் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றை நடத்தி வந்துள்ளார். பின்னர் இரும்பு வாணிபத்தில் ஈடுபட்டார். தொடர்ந்து மேலும் பல வர்த்தகங்களிலும் ஈடுபட்டார். அத்தோடு சீட்டுப் பிடிப்பதிலும் ஈடுபட்டார்.

வர்த்தகர்கள், அரச அதிகாரிகள், தனியார் நிறுவன ஊழியர்கள் எனப் பலர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## நின்ற பஸ்ஸை மோதியது ஹை-ஏஸ் முன் ஆசனத்தில் இருந்தவர் சாவு

### சாரதியின் கால் முறிந்தது

முல்லைத்தீவு, ஜூலை 26

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸுடன் ஹை-ஏஸ் வான் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். நேற்று அதிகாலை மருதனார்மடம் பகுதியில் சம்பவம் இடம்பெற்றது.

முன் ஆசனத்தில் இருந்த ஹை-ஏஸ் உரிமையாளரான பத்திநாதர் ஜெராட் - ஜொய்ஸ்லி பயஸ் (வயது-51) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் நிதி மோசடி

### தனியார் வங்கி வியாபார அபிவிருத்தி முகாமையாளர் விசாரணையில்

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடமராட்சி நெல்லியடியில் இயங்கி வந்த தனியார் வங்கி ஒன்றின் வியாபார அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் நிதிமோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனால் தற்காலிகமாக நிலையம் யாழ்ப்பாணக் கிளைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த வியாபார அபிவிருத்தி நிலையத்தில் சுயதொழில் கடனுக்காக விண்ணப்பித்து கணக்குகளை வைத்திருந்த வாடிக்கையாளர்களின் பணத்தை மோசடி செய்துவிட்டார் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்த வியாபார அபிவிருத்தி நிலையத்தில் சுயதொழில் கடனாக 2 லட்சம் ரூபாவை பெற்றுக் கொள்வதற்காக 5 பேர் கொண்ட குழுக்களாக இணைந்து 60 இற்கும் மேற்பட்டோர் 2 ஆயிரத்து 500 ரூபாவை வைப்பிலிட்டு கணக்கினை ஆரம்பித்துள்ளனர்.

2 மாதங்களில் கடன் வழங்கப்படும்

(22ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் ஊழியர் நெல்லியடியில் தாக்கப்பட்ட வழக்கு கிடப்பில்

நெல்லியடி, ஜூலை 26

உதயன் பத்திரிகையின் விநியோக ஊழியர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்ட வழக்கில், ஒரு வருடம் கடந்த நிலையிலும் பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்யவில்லை என்பதால் விசாரணைகளைக் கிடப்பில் போடுவதாக நீதிவான் நேற்று அறிவித்தார்.

சந்தேகநபர்களைக் கைது செய்யாத நிலையில் பாதிக்கப்பட்டவர் ஒவ்வொரு தவணையும் நீதிமன்றத்துக்கு வந்து செல்வதில் உள்ள சிக்கலை அவரது சட்டத்தரணி சுட்டிக்காட்டியதை அடுத்து "சந்தேகநபர்களைக் கைது

(22ஆம் பக்கம் பார்க்க)

## கிராமத்தினுள் புகுந்த யானை தூக்கியடித்ததில் ஒருவர் சாவு

### மட்டக்களப்பில் நேற்றுப் பரிதாபம். மேலும் இருவர் காயம்

மட்டக்களப்பு, ஜூலை 26

படுவான்கரையில் யானை தாக்கி நேற்று ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படுவான்கரை போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவின் பலாச்சேனை கிராமத்தினுள் புகுந்த யானை கண்ணில் பட்டவர்களை எல்லாம் தாக்கி

(22ஆம் பக்கம் பார்க்க)

# மட்டுவிலில் நாளை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

கைதடி, ஜூலை 26

கைதடி கிழக்கு, கலைநகர் துர்க்கா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட ரீதியிலான மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மட்டுவில் சத்தினம் கிராய் சவாரித்திடலில் நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற காளைகள் இந்த மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியிலே கலந்து கொள்ளவுள்ளதாகவும் இந்தப் போட்டிகள் பல பிரிவுகளாக இடம்பெற இருப்பதாகவும் சனசமூக நிலையத்தின் தலைவர் எஸ்.தங்கராஜா தெரிவித்துள்ளார். (ஓ-288)

## மரண அறிவித்தல்



### முருகேசு சண்முகநாதன்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சண்முகநாதன் 21.07.2014 திங்கட்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் சிவனேஸ்வரியின் (டென்மார்க்) அன்புக் கணவரும், தனுஷா, தனேஷன், நிருஷ்ரிகா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கனகரெட்ணம் (வவுனியா) மற்றும் திருச்செல்வம் (மன்னார்), விஜயதேவி (ஹற்றன்), குணபாலசிங்கம் (பிரான்ஸ்), மகாதேவி (சுதுமலை), உதயகுமாரி (ஜேர்மனி), அருட்செல்வம் (வடலியடைப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரஞ்சோதி, ஜான்சிநிமலராணி, கந்தசாமி, தயா, மகாதேவன், துரைமணி, கலாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (28.07.2014) திங்கட்கிழமை டென்மார்க்கில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதேவேளை ஆத்மசாந்திப் பிரார்த்தனையானது மதவடிலேன், சுதுமலை வடக்கு, ஈஞ்சடியில் அமைந்துள்ள அன்னாரது சகோதரியின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடிலேன்,
சுதுமலை வடக்கு, ஈஞ்சடி,
மானிப்பாய். 021 225 6019 (50272) (12.3.6)

தகவல்: சகோதரர்கள், மைத்துனர்கள்.

## மரண அறிவித்தல்



### சரவணமுத்து மகாதேவன்

சரசாலை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சிறாம்பியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மகாதேவன் 24.07.2014 வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து-பொன்னம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாதேவியின் அன்புக் கணவரும், பிருந்தா, திவாகர் (லண்டன்), தனுஜன், வேணு கோபன் (Blue ocean and link EN-RA), சங்கீதன் (தினக்குரல்-Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யுகன், தயாளினி (ஜனா-லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், இந்திராதேவி (ஜேர்மனி), சியாமளாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சபாலிங்கம், விக்னராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஸ்ணதாஸ், இரவீந்திரநாதன், தனபாலசிங்கம், அருமைநாயகம், பற்குணராஜா, V.S.பாலச்சந்திரன்(V.S.B) ஆகியோரின் அன்புச்சகலனும், நகுலேஸ்வரி, லக்சுமிதேவி, சறோஜினிதேவி, றஞ்சினிதேவி, அம்பிகாதேவி, ஜெகதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான பாமதி, மாலதி மற்றும் மைதிலி, சுமனா, துளசிகா, சிவதர்ஷிகா, சிந்துஜன், தீபிகா ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்துக்கு தகனக்கிரியை களுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15/14, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9699, 077 694 9826 (49642)(4.3.6)

தகவல்: குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### ஐயாத்துரை லோகேஸ்வரன்



பிறப்பு 26 . 12 . 1949

இறப்பு 19 . 07 . 2012

திதி : அமாவாசை (26.07.2014)

இமைகள்
மூடித் திறப்பதற்குள்
வருடங்கள்
இரண்டாகிவிட்டன
நாம் வாழும் நாள்களில்
உம் நினைவுகள்
எம்முடன்
என்றென்றும் வாழும்.....

ஐ.தவமணி (சகோதரி)
26, பிரதான வீதி, சங்கானை.

(50282)(7.6.3)

# சிறுபான்மை மக்கள் குறித்து அசமந்தமாகவே உள்ளது அரசு

## கல்வாரி திருத்தலம் மீதான தாக்குதல் குறித்து செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

இந்துக்களின் ஆலயங்கள், முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் என்ற வரிசையில் தற்போது கத்தோலிக்க மதத்தவர்களின் ஆலயங்கள் மீதும், சொரூபங்கள் மீதும் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது. - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

வவுனியா பெரியகோமரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள கல்வாரி திருத்தலத்தில் இருந்த சிலைகள் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளன. அதுதொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"சிறுபான்மை மக்கள் மீதும் அவர்களின் வழிபாட்டுத்தலங்கள் மீதும் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நாட்டில் மதச் சுதந்திரம்கூட இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசு சிறுபான்மையின மக்களையும்- அவர்களின் வழிபாட்டுத்தலங்களையும் பாதுகாப்பது தொடர்பில் அசமந்தப்போக்குடன் செயற்படுகின்றது.

வடக்கு, கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்த சில சக்திகள் செயற்பட்டு வருகின்றன. அதற்கு நாம் இடமளிக்கக்கூடாது."- என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-101)

# ரயில்வே கடவைப் பணிகளுக்காக நாளை முழுநாளும் பாதை மூடப்படும்

## யாழ். செயலக ஏ-9 வீதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 26

பளை - காங்கேசன்துறை ரயில்வே கடவை வேலைகளுக்காக கண்டி - யாழ்ப்பாண வீதியில் 318 ஆம் கி.மீ. இல் - யாழ். மாவட்ட செயலகத்துக்கு அருகிலுள்ள - ரயில்வே கடவை பகுதி நாளை ஞாயிறு காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மூடப்பட்டிருக்கும் என்று மத்திய பொறியியல் உசாவுத்துறை பணியகம் அறிவித்துள்ளது.

கனரக வாகனங்களும், பஸ்களும் நாவலர் வீதி ஊடாக யாழ். நகர வீதியை அடையலாம் அல்லது புங்கங்குளம் வீதி-கொழும்புத்துறை வீதியை அடைந்து நகரப் பகுதியை அடையலாம்.

சிறிய வாகனங்கள் பாரதி வீதி, பேரின்பநாயகம் வீதி என்பவற்றினூடாக, கச்சேரி - நல்லூர் வீதியை அடைந்து, கச்சேரி நல்லூர் வீதி ஊடாக கச்சேரி ஏ-9 வீதியை அடையலாம்.

இந்த பாதை மூடப்படுவதால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது. (ஓ)

# கர்நாடக இசை விருந்து

நல்லூர், ஜூலை 26

அறிமுக இளங்கலைஞர் தேனுகா கருணாகரனின் கர்நாடக இசை விருந்து இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் இளம் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

# சமய சந்நிதிகளில்

வவுனியா சிதம்பரபுரம் திருப்பழனி முருகனின் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. வை.சிவசங்கரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் இந்த உற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். கொடியேற்ற தினமாகிய நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் ஆலய முன்றலில் 'ஈழத்துப் பழனி முருகன்' எனும் நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெற்றது. (ஓ-421)

◆◆◆

வசாவிளான் கோணாவளையம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயில் வருடாந்த உற்சவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 9ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளனஎன ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-11)

# நகுலேஸ்வரத்தில் இன்று சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஆடி அமாவாசையை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவொன்று இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் 'பிதிர்க்கடனும் சிவ வழிபாடும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (ஓ)

# குறிஞ்சிச் சாரல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

குறிஞ்சிச்சாரல் என்னும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதித் துணை வேந்தர் பேராசிரியர் சந்த கே.சேனநாயக்க, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உட்பட பலர் கலந்து கொள்வார்கள். (க)

# நாடகப் போட்டியில் ஸ்கந்தா முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற தமிழ்த் தின நாடகப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. 'மர்மமுடிச்சு' என்ற தலைப்பிலான இந்த நாடகத்தை நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் பு.கணேசராஜா நெறியாள்கை செய்திருந்தார்.

இதேவேளை தேசிய ரீதியாக கடந்த வருடம் இடம்பெற்ற தமிழ்த் தினப் போட்டியிலும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 'ஒய்யாரக் கொண்டை' என்ற நாடகம் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் ஆயுள்வேத திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை www.ayurveda.gov.lk இணையத்தள முகவரியில் பார்வையிடலாம்.

ஒரே சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களாகக் கடமையாற்றும் சகல ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்களும் கட்டாயமாக இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப் பங்களை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர், டாக்டர் (திருமதி) சிதுரைரட்ணம் தெரிவித்துள்ளார்.(ஓ)

யா/இமையாணன்
அ.த.க. வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

காலம்: 27.07.2014
ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணி
இடம்: வித்தியாலய மண்டபம்
தலைமை: சி.வசந்தகுமார்

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சி.வசந்தகுமார் தலைவர்
த.விஜயசங்கர் செயலாளர்



# சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம்



கோப்பாய் வடக்கைச் சேர்ந்த கந்தையா பரமானந்தராசா யாழ். மாவட்ட நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் கடந்த 15ஆம் திகதி சமாதான நீதிவானாகச் சத்தியப் பிர மாணம் செய்துகொண்டார்.

வடகோவை சித்திரவேலாயுதசுவாமி கோயில் தரும பரிபாலன சபை உறுப்பினர், கோப்பாய் அந்தியகால சேவைச் சபைத் தலைவர், கோப்பாய் பாலர் பகல் விடுதித்தலைவர் போன்ற பதவிகளின் ஊடாக சமூகசேவை ஆற்றிவரும் இவருக்கு அகில இன நல்லுறவு ஒன்றியம் அண்மையில் 'சாமஶ்ரீ' தேசிய பட்டம் வழங்கிக் கௌரவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

♦♦♦



ஆவரங்கால் இந்துமன்ற வீதியைச் சேர்ந்த பொன்.கஜேந்திரன் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் கடந்த 14ஆம் திகதி சமாதான நீதிவானாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

மந்திகை ஆதார வைத்தியசாலையின் இயந்திரப் பிரிவு பணியாளராகக் கடமையாற்றும் இவர், அச்சுவேலி ப.நோ. கூ.சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினரும், ஆவரங்கால் இந்து இளைஞர்மன்றம், விவேகானந்தா சனசமூக நிலையம் ஆகியவற்றின் பொருளாளரும், ஆவரங்கால் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார். (க-108-173)

♦♦♦



புத்தூரைச் சேர்ந்த ஜெகநாதன் தற்பரன் தீவு முழுவதற்குமான அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் யாழ்.மாவட்ட நீதிபதி அ.ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

சமூகவியல், சட்டவியல் ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்றிருக்கும் இவர் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, யாழ்.இந்து, கொழும்பு இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார்.

மனித உரிமை ஆர்வலராகவும், சிறுவர் உரிமைகள் செயற்பாட்டாளராகவும் கடந்த 15 வருட காலம் செயற்பட்டு வரும் இவர், ஜெனிவா ஸ்கண்டிநேவியா, ஆப்கன், ஈராக் உட்பட 47 நாடுகளில் சேவை அனுபவத்தைப் பெற்றிருப்பதுடன் பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், ஆக்கங்களையும் எழுதியுள்ளதுடன் சர்வதேச சட்டம், மனித உரிமை மீறல் தொடர்பான அறிக்கைகளையும் தயாரித்து பரப்புரை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ)

# நிறை குறைத்து மீன் விற்ற இருவருக்கு அபராதம்

யாழ்.கொட்டடி மீன் சந்தையில் தராசில் நூதனமாக 200 கிராமை குறைத்து மீன் விற்பனை செய்துவந்த இருவருக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று.

இதுகுறித்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. மீனாட்சி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த இருவரே அவ்வாறு திருட்டுத்தனமாகச் செயற்பட்டுள்ளனர்.

அங்கு சென்று விசாரணை மேற்கொண்ட நிறுவை அளவீட்டுஅலகுகள் நியமத் திணைக்களத்தினர் அதனைக் கண்டறிந்து இருவருக்கும் எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இருவரும்தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதனை அடுத்து நீதிவான் இருவருக்கும் தலா 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ-4)




தமிழின வரலாற்றில் ஆறாத ரணமாகிப்போன கறுப்பு ஜூலையின் 31 ஆவது வருட நினைவு நாளான கடந்த புதன்கிழமை இலங்கை அரசின் அராஜகத்தை எதிர்க்கும் வகையில் பிரிட்டன் தமிழர் பேரவை யின் ஏற்பாட்டில் பிரிட்டன் பிரதமரின் அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. (வ)

# சுகாதார மேம்பாடு தொடர்பான வதிவிடச் செயலமர்வு இன்று

புங்குடுதீவு, ஜூலை 26

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10 இல் கற்கின்ற ஆண், பெண் இருபாலாரிலும் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கான வதிவிடச் செயலமர்வு இன்று சனிக்கிழமை முதல் திங்கள் வரை மூன்று தினங்கள் புங்குடுதீவு சர்வோதய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் வளவாளர்களும், துறைசார் வளவாளர்களும் இந்தக் கருத் தரங்கில் 23 தொனிப் பொருளில் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இந்தச் செயலமர்வில் பொறுப்பு வழங்கப்பட்ட ஆசிரியர்கள் 10 பேரும், மாணவர்கள் 100 பேரும் கலந்து கொள்ள வேண்டும் என வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார். (ஒ)

# 4,980 வீடுகளில் டெங்கு சோதனை

## சண்டிலிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவில்

வலி.தென்மேற்கு, ஜூலை 26

நுளம்புக்கட்டுப்பாட்டுவாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 ஆயிரத்து 980 வீடுகள் சுகாதாரப் பிரிவினரால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 19 இடங்களில் நுளம்புக் குடம்பிகளும், 747 இடங்களில் நுளம்பு பெருகக் கூடிய தடயப் பொருள்கள் இருப்பதும் இனங்காணப்பட்டன.

கடும் வெப்ப காலத்திலும் குடாநாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வடமாகாண சுகாதார அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நுளம்புக்கட்டுப்பாட்டுவாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதாரப் பிரிவினரால் கடந்த ஒரு வார காலமாக வீடு வீடாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நட வடிக்கையின் போது 4 ஆயிரத்து 980 வீடுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவற்றில் 19 இடங்களில் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டதால் அவர்களை எச்சரிக்கை செய்துள்ள சுகாதாரப் பிரிவினர், நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய தடயப் பொருள்கள் இருந்த 747 இடங்களையும் கண்டுபிடித்து அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது 32 அரச நிறுவனங்களும், 41 பாடசாலைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் ஓர் அரச நிறுவனத்திலும், 8 பாடசாலைகளிலும் நுளம்பு பெருகக் கூடிய தடயப் பொருள்கள் இருப்பது இனங்காணப்பட்டன. (வ-115)

# நீத்தார் நினைவு நிகழ்வு கீரிமலையில் இன்று

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பணியாற்றி இறைபதம் அடைந்தவர்களை நினைவு கூரும் வகையில் நீத்தார் நினைவு நிகழ்வு ஆடி அமாவசை தினமான இன்று சனிக்கிழமை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயலாளர் திருநீலகண்டன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு கீரிமலையில் அமைந்துள்ள இந்து மாமன்றத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-86)

# நூல் வெளியீடு

தென்மராட்சி, ஜூலை 26

மிருசுவில் தமிழ்த்தாசன் எழுதிய "யதார்த்தம்" நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் இடம்பெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் செல்வி ச.தாட்சாயினியும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரத்தினமும் கலந்து கொள்வர். (ஒ-9)

♦♦♦

மாணிக்கம் ஜெகன் எழுதிய "கூவாதே கூடு கட்டு" கவிதை தொகுப்புநூல்வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்மணி அகளங்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், எஸ்.விநோநோகராதலிங்கம், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோரும்கலந்து கொள்வர்.

இந்த நூலுக்கான வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கலாநிதி கந்தையா ஶ்ரீகணேசன் நிகழ்த்துவார். (ஒ-421)

♦♦♦

புத்தூர் கு.குகனின் 'நிதர்சனம்' என்ற கவிதை வெளியீட்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் கலந்து கொள்வர். (வ-108)

# ஆன்மிக எழுச்சி கூட்டம்

குருநகர், ஜூலை 26

நல்லூர் பரி.யாக்கோபு தேவாலயத்தின் 186 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆன்மிக கூட்டம் நடைபெறும் என்று போதகர் அருட்பணி எம்.கே.ஞான காருண்யன் அறிவித்துள்ளார்.

ஆன்மிக எழுச்சிக் கூட்டத்தில் கலந்து அருளைப் பெற்றுக் கொள்ளுமாறும் இந்த எழுச்சி வழிபாடுகளை இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள மத போதகர் ஜே.எச்.சந்திரசேகரம் நிகழ்த்த உள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-51)

## குணமளிக்கும் வழிபாட்டு ஆராதனை

(கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர் - II சாமுவேல் : 22:29)

விசுவாச வாழ்வு திருச்சபையும் தேவவார்த்தை மிசனறி சபையும் இணைந்து நடத்தும் சுவட்டம்



காலம் : 26,27.07.2014 (சனி, ஞாயிறு)
நேரம் : மாலை 4.30 மணி
இடம் : ஐயனார் விளையாட்டு மைதானம் செட்டிப்புலம், வேலணை.

இறைவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டு வரும் தேவமனுஷன் இவரை தேவன் பலமக்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றியுள்ளார்.

பாடல்கள், இறைசெய்திகள், எல்லா வியாதிக்காரர், பிசாசின் பிடியில் உள்ளவர்கள், சாபக்கட்டுகளில் இருந்து விடுதலைபெற

உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(50215) (7.6.3)

தேவவார்த்தை மிசனறி சபை வேலணை 077 600 0937

## பெயர்மாற்றம்

கெருடாவில் தெற்கு, தொண்டமனாறு என்னும் முகவரியில் வசிக்கும் முருகன் பாலசுந்தரம் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை பாலேந்திரா எனப் பெயர்மாற்றம் செய்வதோடு, இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(49712)
(12.3.6)

மு.பாலேந்திரா

## இடமாற்றத்தை முன்னிட்டு.....

யாழ். நகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!

இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே



- பட்டு சாறிகள் - 2250/=
- சல்வார் - 800/=
- இந்தியன் ஸ்கேட் - 300/=
- இந்தியன் ரொப் - 750/=
- சேட் - 250/=
- ஜீன்ஸ் - 650/=

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

(49911)(10.6.3)

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9393

# ஒருபுறம் இஸ்ரேலுக்கு கடும் கண்டனம் மறுபுறம் தமிழ் மக்களின் நிலம் சுவீகரிப்பு

## அரசைச் சாடுகின்றது கூட்டமைப்பு


மாவை சேனாதிராஜா

கொழும்பு.ஜூலை 26
பலஸ்தீனத்தில் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கும் இந்த அரசுதான், வடக்கு, கிழக்கு ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ்பேசும் மக்களின் காணிகளை பகற்கொள்ளை போல் சுவீகரித்து வருகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.
அத்துடன், பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதலைக் கண்டித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பலஸ் தீன மக்களுக்கு ஒத்த இன்னல்களையே தமிழ்பேசும் மக்கள் இங்கு அனுபவித்து வருவதாகவும் தெரிவித்தது.
நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற காலவிதிப்பு (திருத்தச்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா மேற்கண்ட வாறு கூறினார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பலஸ்தீன காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப் பட்டன. அப்போது ஜனாதிபதியுடன் இணைந்து நாமும் அதனைக் கண்டித்தோம். இன்று அங்கு பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது. உலக நாடுகளின் பார்வையும் பலஸ்தீனம் நோக்கித் திரும்பியுள்ளது.
எனவே, உடனடியாகத் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். குண்டு வீச்சுகள் நிறுத்தப்பட வேண்டும். பலஸ்தீனத்தில் இஸ்ரேல் முன்னெடுக் கும் நில ஆக்கிரமிப்பு தடுக்கப்பட வேண்டும். அதேவேளை, பலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை ஒத்த வகையில்தான் தமிழ்பேசும் மக்களும் இங்கு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.
வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் பகற்கொள்ளை போல் இராணுவம் தமிழ் மக்களது நிலங்களை ஆக்கிரமிப்பதானது தமிழ்பேசும் மக்களின் இருப்பிடத்துக்கு மட்டுமல்ல, பெண்களினதும் சிறுமிகளினதும் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. யாழ்.காரைநகர் சம்பவம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட் டாகும். ஆகவே, தமிழ் பேசும் மக்களின் நிலப்பரப்புகளிருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும்.
நிலங்கள் என்பது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மிகவும் முக்கியமான தொன்றாகும்.
எனினும், வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் பகற்கொள்ளைபோல் தமிழ் பேசும் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன.
இதற்காக அரசுதான் இராணுவத்தை ஊக்குவிக்கின்றது. சொந்த இடங்களை இழந்து சொந்த மண்ணிலேயே எமது மக்கள், நண்பர்கள் வீடுகளிலும், முகாம்களிலும் வாழ்கின்றனர். இந்தியாவிலும் பலர் இருக் கின்றனர்.
காணிகளை மீளப்பெற நூற்றுக் கணக்கான போராட்டங்களை நடத்தி னோம். நீதிமன்றத்தை நாடினோம். எனினும், இடைக்கால உத்தரவுகளைக் காட்டி ஆக்கிரமிப்பு இடம் பெறுகின்றது. எமது மக் களின் காணிகளில் இராணு வம் விவசாயம் செய்வதால் எமது மக்கள் பட்டினியால் வாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
காணி அபகரிப்புக்கு எதிராக நீதி மன்றில் 2 ஆயிரத்து 176 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. நீதி கிடைக்கு மானால் மேலும் பல வழக்குகளைத் தொடுக்க மக்கள் தயாராகவே இருக்கின்றனர். எனவே, காணிப் பிரச்சினை யைக் கையாள்வதற்கு அரசு விசேட ஆணைக் குழுவொன்றை அமைக்க வேண்டும் - என்றார். (ஓ)

## ஆடி அமாவாசையை முன்னிட்டு கீரிமலையில் விசேட ஏற்பாடு

வலி.வடக்கு, ஜூலை 26
ஆடி அமாவாசையை முன்னிட்டு பிதிர்க்கடன் கழிக்கும் வகையில் கீரிமலை தீர்த்தத்தில் நீராட அதிக எண்ணிக்கையானோர் இன்று கீரிமலையில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
கடந்த காலங்களை விட இந்தமுறை போக்குவரத்து வசதிகள் அதிகரித்துள்ளமை மற்றும் வீதிகள் உரியமுறையில் செப்பனிடப் பட்டுள்ளமை போன்ற காரணங்களால் தென்னிலங்கையில் வாழும் மக்கள் தொடக்கம் பலரும் இன்று காலையில் கீரிமலையில் சங்கமிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.
இதே வேளை இந்தமுறையும் வழமைபோன்றுவலி. வடக்குப் பிரதேச சபையால் கீரிமலைப் பகுதியில் சுகாதார ஒழுங்குகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொது மக்களின் நன்மை கருதி மலசலகூட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூசை, வழிபாடுகள் நடை பெறவுள்ளதுடன் அன்னதானமும் இடம் பெறவுள்ளது. அருகில் உள்ள கீரிமலை சிவபூமி மடத்திலும் காலை 9 மணி முதல்பிற்பகல் 4 மணி வரை அன்னதானம் இடம் பெறவுள்ளது.
கீரிமலையில் பிதிர்க்கடன் கழிக்கவரும் அடியவர்களின் நலன் கருதி அதிகாலை முதல் இரவுவரை கீரிமலைக்கான தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் விசேட பஸ் சேவைகள் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் நடத்தப் படவுள்ளன.
பொலிஸார் சீருடையிலும் சிவில் உடையிலும் கீரிமலைக்கு வரும் மக்களின்நலன் கருதி பாதுகாப்புக் கடமையில் ஈடுபட வுள்ளனர். அத்துடன் கீரிமலைக் கடலில் குளிப்பவர்களின் பாதுகாப்புக் கருதி கடற்படையினரும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

## ஹெரோயின் சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டனர்

மூன்று பேப்பர் மோல்டிங் இயந்திரங்களுக்குள் நூறு கிலோ எடையுள்ள ஹெரோயினைபதுக்கி வைத்து இலங்கைக்குள் கடத்திவந்த சம்பவத்தின் சூத்திரதாரிகள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
மருதானையில் புடைவை வர்த்தகம் செய்யும் ராஸிக் மொகமட் இம்ரான் என்பவரும் மரத்தளபாடங்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள சேது அப்துல் ரஸாக் என்பவருமே இந்தக் கடத்தல் சம்பவத் தின் பிரதான சூத்தி ரதாரிகளாக இனங்காணப்பட்டுள்ளனர். (ஓ)

## மரண அறிவித்தல்

### கந்தையா தேவராசா (சின்ரன்)



''தூதாவளை'' கரணவாய் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தேவராசா (சின்ரன்) 23.07.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், சாந்தியின் அன்புக் கணவரும், தேவராஜினி, சயந்தன், சஜீபன், சர்வேந்தன், சகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், த்யாவின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் வெல்லன்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தூதாவளை'
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. 077 263 0313
077 951 8253

(50251) (45.6.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் நீண்டகாலம் பணி செய்து இளைப்பாறி 26.06.2014 அன்று இறைபதம் எய்திய
**அமரர் தம்பையா சண்முகலிங்கம்**
அவர்களுக்கு எமது நினைவஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பாடசாலைச் சமூகம், யா/இணுவில் மத்திய கல்லூரி.
(கி15208)(12.3.6)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



தோற்றம் 06.12.1912 — மறைவு 22.06.2014

கடந்த 22.06.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்
அமரர்
**பொன்னையா செல்லப்பா**
அவர்களின்
ஆத்மசாந்திப்பிரார்த்தனை நாளை (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் **தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னசத்திர மண்டபத்தில்** நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

8ஆம் கட்டை, துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.
021 321 4480

(50180)(5.6.3)

## 82ஆவது ஜனன நாளும் விண்ணக வாழ்வின் 20ஆவது ஆண்டு நினைவு நாளும்

ஜனனம் 22.05.1932 — மரணம் 26.07.1994



திருமதி
**திரவியம் பரமானந்தன்**
(இளைப்பாறிய ஆசிரியை - மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி)

"கர்த்தர் கொடுத்தார் கார்த்தர் எடுத்தார்"
கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்
(யோபு 1:21)

என்றும் எம் வாழ்வில் நல் வழிகாட்டியாய் இருந்து எல்லோரது உள்ளங்களிலும் இன்றும் நிலைத்திருக்கும் உங்கள் அன்பை நன்றியுடன் நினைவு கூரும்
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிமார் மற்றும் பெறாமக்கள்.**

குறிப்பு: நாளை [27.07.2014] ஞாயிற்றுக்கிழமை மன்னார் மெதடிஸ்த திருச்சபை ஆலயத்தில் காலை 7.30 மணிக்கு ஞாயிறு ஆராதனையைத் தொடர்ந்து அன்னாரின் நன்றி செலுத்தும் ஜெப வழிபாடு நடைபெறும்.

திருமதி புஸ்பலதா தனேஸ்வரன் (ஜெசி) - 023 222 2711
(50250) (12.6.3)

# பதவி விலகினார் உக்ரைன் பிரதமர்

## கூட்டணிக் கட்சிகளுக்குள் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து

கீவ், ஜூலை 26

உக்ரைன் ஆளும் கூட்டணிக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை அடுத்து அந்த நாட்டுப் பிரதமர் ஆர்செனி யாட்சென்யுத் தனது பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

அதையடுத்து அவரது அமைச்சரவையும் பதவி விலகவுள்ளது.



கோப்புப்படம்

ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள இரு கட்சிகள் தமது ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்ததை அடுத்தே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். அந்த நாட்டு முன்னாள் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் பதவி விலகிய பின்னர் அங்கு கூட்டணி ஆட்சி அமைக்கப்பட்டது.

தற்போது அந்தக் கூட்டணியில் உள்ள தேசிய வாதக் கட்சியான ஸ்வபோதா கட்சியும், முன்னாள் குத்துச் சண்டைவீரர்விதாலிகிளிட்ச்கோ தலைமையிலான உதர் கட்சியும் தமது ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறி வித்துள்ளன. அதையடுத்து பிரதமர் தனது பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

உக்ரைனில் தற்போது நிலவி வரும்நெருக்கடியானநிலைமையில், 'இந்தப் பதவி விலகல் அந்த நாட்டு அரசியலில் கடும் சிக்கல் நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் தற்போது டொனட்ஸ்க் நகரின் மத்திய பகுதியை நோக்கி முன்னேறி வருகின்றனர். அதையடுத்து உக்ரைன் இராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. உக்ரைன் இராணுவத்தின் இரு விமானங்கள் கிளர்ச்சியாளர்களால்சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே பிரதமரின் பதவி விலகல் இடம்பெற்றுள்ளது. (ற)

## நாடு திரும்பினார் சீன ஜனாதிபதி

பீஜிங், ஜூலை 26

கியூபாவில் இரண்டு நாள் உத்தியோகபூர்வப் பயணத்தை முடித்த சீன ஜனாதிபதி சி ஜிங் பிங், நாடு திரும்பியுள்ளார்.

நாடு திரும்பும் முன் கியூபாவில், வரலாற்று நகரமான, சாண்டியாகோ-வில் உள்ள போர் நினைவு சின்னங்களை, அந் நாட்டு ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோவுடன் சி ஜிங்பிங் பார்வையிட்டார்.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரேஸில் சென்ற சீன ஜனாதிபதி, ஆர்ஜென்ரீனா, வெனிசுலா மற்றும் கியூபா ஆகிய நாடுகளுக்கு சென்றார். வெனிசுலா, கியூபா உள்ளிட்ட நாடுகளில் கச்சா எண்ணெய் இறக்குமதி குறித்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார். (ற)

## அல்ஜீரிய விமானத்தின் சிதைவுகள் கண்டுபிடிப்பு

பாமகோ, ஜூலை 26

கட்டுப்பாட்டுப் பிரிவுடனான தொடர்புகள் அற்றுப்போயிருந்த அல்ஜீரியர்ஸ் நாட்டு விமானமான ஏ.எச். 5017 பயணிகள் விமானத்தின் சிதைவுகள் தமது நாட்டின் வடக்குப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார் மாலி ஜனாதிபதி இப்ராகிம் பவ்பக்கர் கீட்டா.

"நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள பாலைவனப் பிரதேசத்தில் விமானத்தில் சிதைவடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதுகுறித்த விவரம் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. தற்போது அந்தப் பகுதியை நோக்கி மீட்புக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அதன்பின்னரே முழுமையான விவரங்கள் கிடைக்கப்பெறும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஃபாஸோ நாட்டில் இருந்து அல்ஜியர்ஸ் நோக்கிப் பயணித்த ஏ.எச்.5017 விமானம் பறப்பை மேற்கொண்ட 50 ஆவது நிமிடத்தில் தரையுடனான தொடர்புகளை இழந்தது. அதில் 110 பயணிகளும், 6 பணியாளர்களும் பயணித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து விளக்கமளித்துள்ள ஏர் அல்ஜீரிஸ் விமான நிறுவனம், "விமானம், புர்கினா ஃபாஸோ நாட்டுத் தலைநகர் ஔகாடுகு விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு, அல்ஜீரியத் தலைநகர் அல்ஜியர்ஸுக்கு பறப்பை மேற்கொண்டிருந்தது. அல்ஜீரிய எல்லையில் இருந்து 500 கிலோமீற்றர் தொலைவில், மாலியின் காவ் பகுதியில் அந்த விமானம் பறந்துகொண்டிருந்த சமயம், மோசமான வானிலை காரணமாக வழித்தடம் சரிவரத் தெரியவில்லை.

அதனால், அல்ஜியர்ஸில் இருந்து புறப்பட்டு மாலி தலைநகர் பமாகோ நோக்கி அதே வழித்தடத்தில் பயணிக்கும் மற்றொரு விமானத்துடன் அந்த விமானம் மோதிவிடக்கூடும் என்று கருதப்பட்டதால், பயணிக்கும் பாதையை மாற்றுமாறு அந்த விமானத்தின் விமானிக்கு அறிவுறுத்தப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் அந்த விமானத்துடனான தொடர்புகள் திடீரெனத் துண்டிக்கப்பட்டன. விமானம் புறப்பட்ட 50 நிமிடங்களுக்குப் பின்னர், கட்டுப்பாட்டு அறையுடனான அதன் அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன."- என்று தெரிவித்துள்ளது. (ற)





நேற்றுமுன்தினம் மட்டும் காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 100க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய நாடுகள் சபை காஸாவில் நடத்திவரும் பாடசாலை ஒன்றும் இஸ்ரேலின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. அதில் பாடசாலையில் தங்கியிருந்த 15 பேர் கொல்லப்பட்டதுடன், 200க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். காஸா மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் இதுவரை 800 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

*படங்கள்: (1) இஸ்ரேலின் தாக்குதலில் காயமடைந்த குழந்தை ஒன்று. (2) இஸ்ரேல் விமானத் தாக்குதலால் புகை மண்டலமாகக் காட்சியளிக்கும் காஸா பிரதேசம்.* (ற)

## ஜப்பான் பிரதமர் சுற்றுப் பயணம்

டோக்கியோ, ஜூலை 26

ஜப்பான் பிரதமர் ஷின்நோ அபே ஐந்து நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நேற்றுக்காலை தனது பயணத்தை ஆரம்பித்த அவர் மெக்ஸிக்கோ, டிரினிடாட் டொபாகோ, கொலம்பியா, சிலி மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகளுக்குத் தனது சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு எதிர்வரும் 4 ஆம் திகதி ஜப்பான் திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## அமெரிக்காவில் கடும் புயல்

டென்னஸி, ஜூலை 26

அமெரிக்காவின் டென்னஸி மாநிலத்தில், வீசிவரும் கடும் புயல் மற்றும் மழை காரணமாகப் பல்வேறு பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. புயல் காரணமாக 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். (ற)

## உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி

அம்ஸ்டர்டாம், ஜூலை 26

உக்ரைனில் வீழ்த்தப்பட்ட மலேசிய விமானத்தில் பயணித்ததன் மூலம் உயிரிழந்தவர்களுக்குத் நெதர்லாந்து மக்கள் அஞ்சலி செலுத்தினர். மத்திய சதுக்கத்தின் முன்பு கூடிய மக்கள் அமைதியான முறையில்பேரணிநடத்தினர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் அதில் பங்குபற்றினர்.

குறித்த விமானம் உக்ரைன் கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் 298 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 193 பேர் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்களாவர். (ற)

## ஆபாசத்தை நாங்கள் தவிர்க்கவே மாட்டோம்

### அடம்பிடிக்கும் பிரிட்டன் மக்கள்

லண்டன், ஜூலை 26

பிரிட்டனில் இணையத்தளம் உபயோகிப்பவர்கள் ஆபாச வடிகட்டிகளைப் பயன்படுத்த மறுக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

மக்கள் ஆபாசத்தை தவிர்க்க வேண்டும் என்னும் நோக்கில் அந்த நாட்டுப் பிரதமர் டேவிட் கமரூன் ஆபாச வடிகட்டிகளை உபயோகிக்குமாறு வலியுறுத்தியுள்ளார். அதற்காகயவீ, விர்ஜீன்மேடியா, ஸ்கை, மற்றும் டாக்டாக் என 4 மென்பொருள்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

ஆயினும் இந்தத் திட்டத்தை மொத்தம் 13 சதவீதம் மக்கள் மட்டுமே இதுவரை பின்பற்றியுள்ளனர் என்று தற்போது தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. அதனால்மென்பொருளை அறிமுகப்படுத்திய நிறுவனங்கள், எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் குறைந்த அளவு வடிகட்டிகளை மட்டுமே அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளன. (ற)

## 'கோஸ்டா கன்கார்டியா' சொகுசுக் கப்பலை துண்டுகளாக்கத் தீர்மானம்

லண்டன், ஜூலை 26

மிகப் பெரும் சொகுசுக் கப்பலான கோஸ்டா கன்கார்டியாவை உடைத்துத் துண்டுகளாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காயிரம் பயணிகளுடன் இத்தாலிக் கடற்பரப்பில் பயணித்த கோஸ்டா கன்கார்டியா விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கியது. அந்த விபத்தில் 32 பேர் உயிரிழந்தனர்.

அதன்பின்னர் மூழ்கிய கப்பலை மீட்கும் பணிகள் பல மாதங்களாக நடைபெற்றன. கடும் முயற்சியின் பின்னர் ஒருவாறாக அந்தக் கப்பல் மீண்டும் நேராக நிலைநிறுத்தப்பட்டது. ஆயினும் கப்பலின் ஒரு பகுதி மோசமாக சேதமடைந்துள்ளதால், கப்பலை மீண்டும் பயன்படுத்த முடியாது என்று கூறப்படுகின்றது. அதையடுத்தே கப்பலைத் துண்டுகளாக உடைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

தற்போது அந்தக் கப்பல் ஜெனியோ துறைமுகத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு வருகின்றது. விபத்து நடந்த இடத்தில் இருந்து துறைமுகம் 25 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. துறைமுகத்தை அடைய ஒருவாரம் ஆகும் என்று கூறப்படுகின்றது. இந்தக் கப்பலின் பெறுமதி சுமார் 48 ஆயிரம் கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ற)



*விபத்தில் சிக்கி சேதமடைந்த கப்பல்*



இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள பில்லா என்ற சிறிய கிராமத்தில் இந்தக் காட்சி படம்பிடிக்கப்பட்டது. ஒரு மலைப்பாம்பு, பெரிய அளவிலான மான் ஒன்றை முழுமையாக விழுங்குகின்றது. நிதிஷ் பாம்பனியா என்பவரும் அவரது குழுவினரும் இந்தக் காட்சியைப் படமாக்கியிருந்தனர். (ற)

## இமாச்சல பிரதேசத்தில் நிலநடுக்கம்



கோப்புப்படம்


சிம்லா, ஜூலை 26
இமாசல பிரதேசத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. சம்பா-தோடா எல்லைப் பகுதியில், ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில், 3.9 ஆகப் பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரம் குறித்த தகவல்கள் வெளிவரவில்லை. (ற)

## நேபாளம் செல்லவுள்ளார் மோடி

புதுடில்லி, ஜூலை 26
இந்திய பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் முதல் வாரத்தில் அரசு முறை பயணமாக நேபாளத்துக்குச் செல்லவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
நேபாள பிரதமர் சுஷில் கொய்ராவின் அழைப்பை ஏற்றுள்ள மோடி எதிர்வரும் 3ஆம், 4 ஆம் திகதிகளில் தமது நாட்டுக்கு வர உள்ளார் என்று அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் மகேந்திர பாண்டே கூறியுள்ளார்.
அந்த நாட்டுப் பிரதமர் கொய்ராலாவைச் சந்தித்து ஆலோசனை நடத்திய சிறிது நேரத்திலேயே மோடியின் பயணம் குறித்த அறிவிப்பை பாண்டே வெளியிட்டுள்ளார்.
18 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக இந்திய தலைமைப் பதவியில் உள்ள ஒருவர் நேபாளத்துக்குச் செல்வது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# அரசியல்வாதிகள் மீதான வழக்குகளை விரைந்து நடத்துமாறு மோடி உத்தரவு

புதுடில்லி, ஜூலை 26
அரசியல்வாதிகள் மீதான குற்ற வழக்குகளை ஓராண்டுக்குள் விசாரித்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.
இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் சட்டத்துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்துடன் ஆலோசனை நடத்திய பிரதமர், அரசியல்வாதிகள் மீதான வழக்குகளின் நிலை குறித்து கேட்டறிந்தார்.
அப்போது, அரசியல்வாதிகள் மீதான குற்ற வழக்குகளை ஓராண்டுக்குள் விரைந்து விசாரித்து தீர்ப்பு வழங்க தேவையான செயற்றிட்டங்களை வகுக்குமாறு அமைச்சர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.



நரேந்திர மோடி

நடப்பு நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ள 186 பேர் மீது குற்ற வழக்குகள் இருக்கின்றன என்று ஆய்வு ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையின்போது, ஊழலற்ற ஆட்சி நிர்வாகத்தை வழங்குவதாக மோடி கூறியிருந்தார். இதன் அடிப்படையிலேயே, அரசியல்வாதிகள் மீதான வழக்குகளில் விரைந்து தீர்ப்பு வழங்க அவர் நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்று டில்லி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நடப்பு நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ள 186 பேர் மீது குற்ற வழக்குகள் இருப்பதாக ஆய்வு ஒன்றில் கூறப்பட்டுள்ளது. (ற)

## கறுப்புப்பணம் விரைவில் மீட்கப்படும்

### நிதி அமைச்சர் அருண் ஜேட்லி உறுதி

புதுடில்லி, ஜூலை 26
வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கறுப்புப் பணம் விரைவில் மீட்கப்படும் என்று உறுதியளித்துள்ளார் நிதி மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜெட்லி.
வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கியுள்ள கறுப்புப் பணம் குறித்து வெளிநாட்டு வங்கிகள் அளிக்கும் தகவல்கள் உடனுக்குடன் உயர் நீதிமன்றத்துக்கு அளிக்கப்படுகிறது.
கடன் வட்டி விகிதங்களை உயர்த்துவதன் மூலம் பணவீக்கத்தைக் குறைக்க முடியாது- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## ஓடும் ஓட்டோவில் சுகப்பிரசவம்; கேரளாவில் சம்பவம்

கொச்சி, ஜூலை 26
கேரளாவின் கொச்சியில் கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு ஓடும் ஓட்டோவிலேயே சுகப் பிரசவம் நடந்துள்ளது.
கொச்சியின் அருகேயுள்ள தலவாச்சப்பரா என்ற குக் கிராமத்தைச் சேர்ந்த கர்ப்பிணி ஒருவருக்கு பிரசவ வலி எடுத்ததையடுத்து, அவரது கணவர் அவரை அழைத்துக் கொண்டு பல கிலோ மீற்றர் தூரம் நடந்தே வந்து ஒரு ஜீப்பைப் பிடித்து நதிக்கரையை அடைந்துள்ளனர்.
பின்னர் படகு மூலம் சிறிது தூரம் சென்று பின்னர் ஓட்டோ ஒன்றின் மூலம் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள கொத்தமங்கலம் மருத்துவமனையை அடைந்தபோது அங்கு மருத்துவர்கள் எவரும் இருக்கவில்லை. அதையடுத்து மீண்டும் ஓட்டோவில் சென்றபோது அவருக்கு ஓட்டோவிலேயே சுகப்பிரசவம் நடந்துள்ளது. அவருக்கு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது.
அருகில் இருந்த பொலிஸார் உடனடியாக மருத்துவமனைக்குத் தொடர்பு கொண்டு அந்தப் பெண்ணுக்கு உதவும்படி கோரியுள்ளனர். பின்னரே அப்பெண்மணியும், குழந்தையும் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டனர். (ற)



கோப்புப்படம்

## பாகிஸ்தானுக்காக உளவு; சென்னையில் ஒருவர் கைது

சென்னை, ஜூலை 26
பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த வழக்கில், சென்னையில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
பாகிஸ்தான் நாட்டுக்கு உளவு பார்த்தனர் என்ற குற்றச்சாட்டில் சென்னையில் ஜாகீர் உசேன், சலீம் உட்பட 3 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். உசேன், இலங்கையைச் சேர்ந்தவர். இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் வேலை பார்க்கும் அதிகாரிகள் இருவர் இந்த வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அண்மையில், சென்னை வியாசர்பாடியைச் சேர்ந்த ரபீக் (வயது -29) என்பவரை ரூபா 8.9 லட்சம் (இந்திய நாணய மதிப்பு) கள்ள நோட்டுகள் மற்றும் கைத்துப்பாக்கியுடன் பொலிஸார் கைது செய்திருந்தனர். கைது செய்யப்பட்ட ஜாகீர் உசேனுக்கு, ரபீக் கள்ள நோட்டுகள் கொடுத்திருந்தமையும், அவர்கள் இருவரும் சேர்ந்து செயற்பட்டமையும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
அதையடுத்து ரபீக்கை பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த வழக்கில் தேசிய புலனாய்வு பிரிவுப் பொலிஸார் நேற்று முன்தினம் இணைத்துள்ளனர். தற்போது புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவரை விரைவில் நீதிமன்றத்தில் முற்படுத்தி பொலிஸ் காவலில் எடுத்து விசாரணை நடத்தப்படவுள்ளது என்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



கோப்புப்படம்

# ஊவா மாகாண உறுப்பினர் விவகாரம் ஐ.தே.க. தாக்கல் செய்த மனு தள்ளுபடி

**32 உறுப்பினர்களை கொண்ட ஊவா மாகாண சபைக்கு, பதுளை மாவட்டத்திலிருந்து இதுவரை காலமும் 21 உறுப்பினர்களும் மொன ராகலை மாவட்டத்திலிருந்து 11 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.**

கொழும்பு.ஜூலை 26

ஊவா மாகாண சபைத் தேர்தலில் மாவட்டங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்பட்டமைக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு உயர் நீதிமன்றால் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எச். டபிள்யூ. டி. மிஹிமால் முனசிங்க ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதில்லை எனத் தீர்மானித்த மூவர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு அதனைத் தள்ளுபடி செய்தது.

கடந்த 21 ஆம் திகதி உயர் நீதிமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மிஹிமால் முனசிங்கவும் இணைந்து தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான பூர்வாங்க விசாரணை நேற்றுமுன்தினம் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலை மையில் நீதியரசர்கள் ஸ்ரீ பவான் மற்றும் பிரியந்த ஜயவர்தன ஆகிய மூவர் கொண்ட குழு முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மிஹிமால் முனசிங்க ஆகியோர் தாக்கல் செய்திருந்த குறித்த இரு அடிப்படை உரிமை மீறல் தொடர்பிலான மனுக்களையும் நீதியரசர்கள் குழு பரிசீலித்தது.

இதனை அடுத்தே அந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதில்லை எனத் தீர்மானித்துத் தள்ளுபடி செய்வதாக நீதியரசர்கள் குழு அறிவித்தது.

மனுதாரர்களான ஹரீன் பெர்னாண்டோ, மிஹிமால் முனசிங்க ஆகியோர் தமது அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் சட்டமா அதிபர் பாலித்த பெர்னாண்டோ ஆகியோரைக் குறிப்பிட்டிருந்தனர்.

32 உறுப்பினர்களைக் கொண்ட ஊவா மாகாண சபைக்கு, பதுளை மாவட்டத்திலிருந்து இதுவரை காலமும் 21 உறுப்பினர்களும் மொனராகலை மாவட்டத்திலிருந்து 11 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் பதுளை மாவட்டத்திலிருந்து இந்த முறை 18 உறுப்பினர்களே தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் குறைக்கப்பட்டுள்ள மூன்று உறுப்பினர்களின் எண்ணிக்கையும் மொனராகலை மாவட்டத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி மொனராகலை மாவட்டத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 11 இலிருந்து 14 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

CMYK

## முஸ்லிம் கலாசார உடைகளுக்கு அனுமதி வழங்க வேண்டும்

### பாடசாலைகளுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு.ஜூலை 26

முஸ்லிம் பெற்றோர் தமது கலாசார உடைகளுடன் பாடசாலைக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாடசாலைகளுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி பாலிகா வித்தியாலயத்துக்குள் முஸ்லிம் பெற்றோர் ஹிஜாப் அணிந்து செல்ல அனுமதிக்கப்படாமைக்கு எதிராகப் பெற்றோர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு நேற்றுமுன்தினம் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதியரசர் குழுவின் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தங்களது கலாசார உடைகளை அணிவது பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான உரிமை என பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

தேசிய பாடசாலைகள் உட்பட அனைத்துப் பொதுப் பாடசாலைகளிலும் முஸ்லிம் பெற்றோர் ஹிஜாப் அணிந்து செல்ல அனுமதி வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதே பாடசாலை அதிபர் அங்கு பயிலும் இரண்டு முஸ்லிம் மாணவிகள் அணிந்து சென்ற பஞ்சாபி உடையை அணிந்து பாடசாலைக்கு வரக் கூடாது என்று தெரிவித்திருந்தார். இது தொடர்பான வேறு ஒரு அடிப்படை உரிமை மனுவும் தாக்கல்செய்யப்பட்டுள்ளதுடன் அது எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ஒ)

## கோத்தா தலைமையில் நடந்த 'இப்தார் நிகழ்வு'



பாதுகாப்பு அமைச்சின் 'இப்தார்' நிகழ்வு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற போது.... (ஒ)

## அமைச்சர் சம்பிக்கவின் 'பேஸ்புக்' முடக்கம்

கொழும்பு.ஜூலை 26

முகப்புப் புத்தக (Face book) நிர்வாகத்தினர் எந்தவித முன்னறிவித்தலுமின்றி தனது முகப்புப் புத்தகப் பக்கத்தைச் செயலிழக்கச் செய்துள்ளனர் என தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் முகப்புப் புத்தக நிர்வாகத்துடன் தான் மின்னஞ்சல் (e-mail) மூலம் தொடர்பு கொண்டதாக வும் அந்தப் பக்கம் முடக்கப்பட்டதுக்கான காரணத்தை அவர்கள் தனக்கு ஓரிரு நாட்களில் தெரிவிப்பதாகப் பதிலளித்துள்ளதாகவும் அமைச்சர் சம்பிக்க கூறினார்.



சம்பிக்க ரணவக்க

எனது உத்தியோகபூர்வ முகப்புப் புத்தகத்தில் சுமார் 21 ஆயிரம் நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்னுடன் பல்வேறு கருத்துகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். எனினும், சமூக வலைத்தளத்தில் எனது பெயருக்குச் சமனான பெயரில் உருவாக்கப்பட்டுள்ள பக்கங்களில் எனது புகைப்படத்தை வெளியிட்டு என்னைப் பற்றித் தவறான தகவல்களை ஒரு சில விஷமிகள் வெளியிட்டு வருகிறார்கள்.

இதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் என்னைப் பற்றி தவறான அபிப் பிரா யங்கள் பரப்பப்படுகின்றன.

எனது உத்தியோகபூர்வ முகப்புப் புத்தகப் பக்கத்தில் நான் எந்தவொரு மதத்தையோ அல்லது கலாசாரத்தையோ நிந்திக்கும் வகையில் செய்திகளை வெளியிடுவதில்லை.

எனது பக்கம் இவ்வாறு செயலிழக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் சில விஷமிகள் செயற்பட்டுள்ளார்கள் என நம்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க. (ஒ)

## 83 ஜூலையில் கொல்லப்பட்ட தமிழர்களுக்காக அஞ்சலி செலுத்திவிட்டே நான் சபைக்கு வந்தேன்

கொழும்பு.ஜூலை 26

இலங்கையின் வரலாற்றில் ஜூலை மாதம் என்பது கருமையாகவே பதியப்பட்டு வருகின்றது என்று நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்த அமைச்சர் டிலான் பெரேரா 83 ஜூலை 23 இல் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்காக நான் நேற்று (கடந்த புதன்கிழமை) அஞ்சலி செலுத்தினேன்.



டிலான் பெரேரா

ஆனால் இந்தச் சபையில் இருக்கும் தமிழ் உறுப்பினர்கள் எவராவது 83 ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்காக அஞ்சலி செலுத்தினரா என்பதை இதயத்தைத் தொட்டுக் கூற வேண்டும் என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் தோற்றம் பெறுவதற்கும், ஜே.வி.பியின் ஆயுதம் ஏந்தியமைக்கும் புலம்பெயர்ந்தோர் சமூகம் (டயஸ் போரா) உருவாவ தற்கும் 83 கறுப்பு ஜூலையே வழி வகுத்தது என்றும் அமைச்சர் டிலான் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை அமர்வின் போது ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பண்டாரவால் கொண்டு வரப்பட்ட 80 களில் வேலை இழக்கச் செய்யப்பட்ட ஊழியர்கள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் டிலான் பெரேரா மேலும் கூறியதாவது:-

வட மாகாணத்தின் ஆளுநராக இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்திருப்பதால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற சுமந்திரன் உள்ளிட்டோர் சரத் பொன்சேகா இந்த நாட்டின் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று செயற்பட்டனர்.

அதேபோன்று தான் சரத் பொன்சேகா தமிழ் மக்களை இந்த நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகள் என வர்ணித்திருந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் யோகராஜன் போன்றவர்கள்கூட அவரை ஜனாதிபதியாக்குவதற்கு பாடுபட்டனர்.

ஜூலை 23 ஆம் திகதி அன்று தமிழ் மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். இதனைச் செய்தது ஐக்கிய தேசியக் கட்சி தான். பச்சைக் கொடி களைத் தாங்கிய குண்டர்கள் இதனைச் செய்தார்கள்.

ஆனால், இதனைப் பார்த்துக் கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன ஒரு வார காலப் பகுதிக்கு இராணுவத்துக்கு விடுமுறை அளித்திருந்தார். இதுதான் உண்மை -என்றார். (ஒ)

# கோப்பியில் கிரீம், சீனிக்குப் பதிலாக பட்டர்

கோப்பியில் கிரீம், சீனிக்குப் பதில் பட்டர் கலப்பது, அமெரிக்க வாடிக்கையாளர்கள் சிலர் இது சாத்தியம் என்கின்றார்கள். நல உணவு நிபுணர்கள் இது பசியை அடக்கவும், ஆற்றலை அதிகரிக்கவும் உதவும் என்கின்றனர்.
மக்கள் அதிக சக்தி உள்ளவர்களாக உணர்கின்றனர். மூளைத்திறன் அதிகரிப்பு, குறைவான பசி, நிறை குறைகின்றது- குறைப்பதற்கு கஷ்டப்படுபவர்களுக்கு. இதற்கெல்லாம் காரணம் பட்டரில் உள்ள ஆரோக்கியமான கொழுப்பு என்று பதிவு



செய்யப்பட்ட நல உணவு நிபுணர் ஹஸி பியோர்க் கூறியுள்ளார்.
இந்தக் கோப்பிக்குத் தேவையானவை:
2 குவளை சூடான கோப்பி, 2-மேசைக்கரண்டி உப்பில்லாத புல்லுண்ணும் பட்டர் மற்றும் 2-மேசைக்கரண்டி எம்.சி.ரி. எண்ணெய்-இது இயற்கையாக தேங்காய் எண்ணெயில் காணப்படும்.
புல்லுண்ணும் பட்டர் மற்றும் ஆரோக்கியமான எண்ணெய் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தவும், கொழுப்பை எரிக்கவும் அத்துடன் எச்சரிக்கையாக வைத்திருக்கவும் உதவும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது குறித்து வைத்தியர்கள் சந்தேகப்படுவதாகவும் கூறப்படுகின்றது.
கிரீம் மற்றும் சீனியுடன் ஒரு குவளை கோப்பியும் 2-பட்டர் குரொசான்சிற்கும் பதிலாக 2-அவுன்ஸ் பட்டருடன் ஒரு குவளை கோப்பி பருகுவது சாதகமானதாக இருக்க முடியும் என்று இலநோயிஸ் வடக்குவெஸ்ரன் பல்கலைக்கழக இதய நோய் மருத்துவர் கண்ணன் முத்தரசன் தெரிவித்துள்ளார். நான் யாருக்கும் இதை பரிந்துரைக்கமாட்டேன் எனவும் அவர் கூறியுள்ளார்.



# குளியலறை சவர்களால் நோய் பரவும் ஆபத்து

குளியலறையில் பயன்படுத்தப்படும் சவர்களில் பத்தில் ஒன்றால் பக்றீரியாக்களினால் ஏற்படுத்தப்படும் குறோன் வகை நோய் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனை லெய்செஸ்ரர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
அதாவது கால்நடைகளில் யோன் எனப்படும் நோயை விளைவிக்கும் பக்றீரியா வகைகளான மைக்ரோபக்றீரியம் மற்றும் பராரியூபர்குளோஸிஸ் ஆகியவையே மனிதனில் குறோன் வகை நோய்களை உண்டாக்குவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.
இந்த வகை பக்றீரியாக்கள் சவரின் உட்பகுதியில் காணப்படுவதால் குளிப்பதற்கு முன்னர் சிறிது நேரம் நீரை ஓடவிட்டு பின்னர் குளிப்பதன் மூலம் குறித்த பக்றீரியாக்களின் தொற்றுதலில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும். இதன் காரணமாக நோய்த்தாக்கத்தைத் தவிர்க்க முடியும் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# உங்கள் ஸ்மார்ட் கைபேசிகளை அன்லொக் செய்ய தொழில்நுட்பம்

'லொக்' நிலையிலுள்ள ஸ்மார்ட் கைபேசியை 'அன்லொக்' செய்வதற்கு டிஜிட்டல் டட்டூ தொழில்நுட்பத்தை மோரோ றோலா நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.
இந்தத் தொழில்நுட்பத்தைத் தனது புதிய ஸ்மார்ட் கைபேசியான மோரோ எக்ஸ் இல் இணைத்து அறிமுகப்படுத்துகின்றது.
எனினும் இந்த டட்டுவினை கூகுளின் அட்வான்ஸ் தொழில்நுட்பப் பிரிவுடனும், அதன் செயற்றிட்டக் குழுவுடனும் இணைந்து விவாலிங் என்ற நிறுவனம் உருவாக்கியுள்ளது.
இது 10 அலகுகளைக்-கொண்ட பொதியாக விற்பனை செய்யப்படுவதுடன், ஒவ்வொரு பொதியினதும் விலை 9.99 டொலர்களாக காணப்படுகின்றது.
இதேவேளை ஒவ்வொரு டிஜிட்டல் டட்டுக்களையும் 5 நாள்கள் நீரில் நனைய விடலாம். ஆனால் அதற்குமேல் நீரில் நனைந்தால் அவை பழுதடைந்து விடும்.





# கனடாவில் தோன்றியுள்ள பேட்மேன் வடிவ பனிப்பாறை

கனடாவில் உள்ள நியூ பவுண்லாண்ட் என்ற நகரில் தோன்றியுள்ள ஒரு பனிப்பாறை 'பேட்மேன்' வடிவில் உள்ளதை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்து வருகின்றனர். இந்த பேட்மேன் பனிப்பாறையின் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் மிகவேகமாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகின்றன.
கனடாவில் உள்ள நியூ பவுண்லாண்ட் என்ற இடத்தில் றவுண் லேக், ஒன்ரரியோ என்ற பகுதியில் தோன்றிய பனிப்பாறை அப்படியே அச்சுஅசலாக பேட்மேன் போலவே உள்ளது. பேட்மேன் முகமூடி அணிந்தால் எப்படி இருக்குமோ அதேபோன்று தற்செயலாக அமைந்துள்ளது. இதனை முதன்முதலில் பார்த்த லிட்டில் போய் நியூ பவுண்லாண்ட் என்ற பகுதியைச் சேர்ந்த மைக் பேசன் என்பவர், இந்த பேட்மேன் பனிப்பாறையைப் புகைப்படம் எடுத்து தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்துள்ளார். அந்தப் பதிவை நூற்றுக்கணக்கானோர் லைக் செய்தும் ஷேர் செய்தும் வருகின்றனர்.
அதுமட்டுமின்றி இந்த பேட்மேன் பனிப்பாறையை கூட்டம் கூட்டமாகப் பொதுமக்கள் வந்து பார்வையிடுவதாகவும் கூறப்படுகிறது. மைக் பேசன் ஏற்கனவே இதுபோன்ற அதிசயமான பல புகைப்படங்களை எடுத்து சமூகவலைத் தளங்களில் பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





# சாரதி இல்லாத கூகுள் ஸ்மார்ட் கார்

அமெரிக்காவின் கணினி மென்பொருள் மற்றும் இணையத் தேடுதல் நிறுவனம் கூகுள் ஸ்மார்ட் கார்களை உருவாக்கியுள்ளது. ஏற்கனவே டொயோட்டா போன்ற கார் நிறுவனங்களுடன் தானே ஓடும் கார்களை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் வேலையில் தானியங்கி கார் ஒன்றை கண்டுபிடித்து பரிசோதனையும் செய்திருக்கின்றனர். இந்தக் காருக்கு வழக்கமான கார் போல ஸ்டியரிங் ,அக்ஸிலேட்டர், பிரேக் என எவையும் இல்லை.
வெறும் ஸ்டார்ட் மற்றும் ஸ்டாப் பட்டன் மட்டுமே இருக்கும். இதன்மூலம் நீங்கள் விரும்பி இடத்துக்குச் செல்ல முடியும். இதில் உள்ள சென்சார் இரண்டு புட்பால் மைதானம் அளவுக்கு ஸ்கான் செய்து எந்த ஒரு விபத்தும் இல்லாமல் அதுவே உங்களை பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்க்கும்.
அது மட்டுமல்ல உங்கள் குழந்தைகளை பள்ளிக்கு புரோகிராம் செய்து ஏற்றி விட்டால் அதுவே கொண்டு போய் இறக்கி விட்டு வரும். இது கண் தெரியாதவர்களுக்கு பெரிய வரப்பிரசாதமாக அமையப் போகிறது. ஏன் என்றால் குரல் கட்டளை மூலமாகவும் இது இயங்கும் வகையில் அமைக்கபட்டிருப்பது தான். இதன் வேகம் 40 கிலோமீற்றரில் இருந்து 70 கிலோமீற்றர் வரை செல்லவும் முடியும்.

# 1738இல் உருவான ரோபோ வாத்து

கணினிக்கு முன்பே ரோபோ பற்றிய சிந்தனை உருவாகி விட்டது. ரோபோ உருவாக்குவதை கணினிகளின் வரவு எளிமையாக்கி மேம்படுத்தியது என்று கூறலாம். கி.மு.250 வாக்கிலேயே டெஸிபியஸ் என்ற கண்டுபிடிப்பாளர் நீர் அருந்தக்கூடிய சிலைகளை உருவாக்கியதாகப் பதிவுகள் உள்ளன. இதுவே ரோபோவுக்கான அடிப்படை விடயம்.
அதன்பின்னர், குறிப்பிடத்தக்க வகையில் 1700களில் பலவித விந்தைகள் செய்யக்கூடிய கருவிகளைச் செய்வதில் பலர் ஆர்வம் காட்டினர். இவற்றுக்கு 'ஓட்டோமேட்டான்' என்று பெயர். பியரி ஜேக்குவர்ட்ராஸ் என்ற கண்டுபிடிப்பாளர் மிகச்சிறந்த ஓட்டோ மேட்டான்களை உருவாக்கியிருக்கிறார். அவர் படைத்த நகரும் உருவங்கள் மக்களை ஆச்சரியம் கொள்ளச் செய்தன. பேனாவுக்கு மை ஊற்றி பிரெஞ்சு மற்றும் ஆங்கிலத்தில் 40 வார்த்தைகள் அடங்கிய பிரபல வாக்கியத்தை எழுதும் 'போய் ஓட்டோமேட்டான்' மிகப்புகழ் பெற்றது.
1738 இல் ஜாக்குவர்ட்டே வாக்கான்சான் உருவாக்கிய ஓட்டோமேட்டான்களும் முக்கியமானவை. உயிருள்ள வாத்துப் போலவே, நீர்வாழ் பூச்சிகளைத் தின்று, நீர் பருகி, கழிவுகளையும் அகற்றக்கூடிய இயந்திர வாத்து ஒன்றையும் இவர் உருவாக்கினார். அது "க்வாக் க்வாக்" ஒலி எழுப்பிக்கொண்டே நீந்தவும் செய் யும்!
ஆரம்ப கால ஓட்டோ மேட்டான்கள் இயந்திரங்களால் அதிகபட்சமாக என்னென்ன செய்ய முடியும் என்பதை அறியும் பரிசோதனை முயற்சியாகவே அமைந்தன. அரண்மனையில் வாழும் அரச குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்களாகவும் இவை பயன்பட்டன.
1920 இல் செக் எழுத்தாளர் காரேல் கேப்பக் எழுதிய ஒரு நாடகத்தில்தான், முதன்முதலாக 'ரோபோ' என்ற வார்த்தை உலகுக்கு அறிமுகமானது. பூமியில் வாழும் மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகக் கண்டுபிடிக்கப்படும் ரோபோக்கள் ஒரு கட்டத்தில் பூமியையே அழித்து விடும் கதை இது!



# வெட்டுக் கிளியை அழிக்க ஆயுதமாக பூஞ்சை



பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள எத்தியோப்பியா போன்ற ஆபிரிக்க நாடுகளுக்கு வெட்டுக் கிளிகளாலும் அதிக நாசம் ஏற்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் 10 கோடி வெட்டுக் கிளிகள் ஆபிரிக்க நாடுகளின் தானியங்களை உண்டு தீர்த்துள்ளன. அதன்விளைவு உணவுப் பற்றாக்குறை.

நவீனபூச்சி மருந்துகள் வெட்டுக் கிளிகளின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினாலும் அவற்றால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க முடியவில்லை.

ஆபிரிக்க மக்களின் குறையைத் தீர்க்கும் மருந்து ஒரு பூஞ்சை வடிவில் வந்துள்ளது. இதைக் கண்டறிந்தவர் பிரிட்டனைச் சேர்ந்த கிரீஸ்ப்ரியர் என்பவராவார்.

இந்த வகை பூஞ்சைகளைத் தானிய வகைகளின் மேல் தூவும்போது. இவற்றின் ஸ்போர்கள் வெட்டுக் கிளிகளின் உடலில் ஒட்டிக் கொள்கின்றன.

ஒரு வார காலத்தில் வெட்டுக் கிளியின் உடலுக்குள்ளே கிளை விட்டு பூஞ்சை வளர ஆரம்பிக்கிறது. முடிவில் வெட்டுக் கிளிகள் அழிகின்றன.

பூஞ்சை இயற்கையின் ஓர் அங்கம் என்பதால், சுற்றுச்சூழல் மாசுபட வாய்ப்பில்லை. பூஞ்சையை வளர்ப்பதற்கு அதிகளவில் பணச் செலவும் கிடையாது. எனவே இனிமேல் 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' என்பது போல 'பூஞ்சையும் ஆயுதம்' ஆகிறது.

# அன்றாட உணவில் முக்கிய பங்கு வகிக்கும் முட்டை

கொலஸ்ட் ரோல் நிறைந்த முட்டையை அதிகம் பயன்படுத்தி வந்தால் கல்லீரலானது கொலஸ்ட்ரோல் உற்பத்தியைக் குறைத்து விடும். இதனால் இரத்தத்தில் கொலஸ்ட் ரோலின் அளவு அதிகரிக்காமல் இருக்கும்.

நாம் அதிகமாக விரும்பிச் சாப்பிடும் முட்டை எமது அன்றாட உணவில் முக்கிய பங்கை வகிக்கிறது. முட்டையில் கொழுப்பு, புரதம், விற்றமின்கள், இரும்புச் சத்து என்பன உள்ளன. தினமும் ஒரு முட்டையைச் சாப்பிடுவது எமது உணவை முழுமையான உணவாக மாற்றுகிறது.

ஒரு முட்டையில் ஒளிந்திருக்கும் சத்து உடலுக்கு உகந்ததாக உள்ளது. ஆரோக்கியமாக இருப்பதில் முட்டை பெரும் பங்கை வகிக்கிறது. குழந்தைகளிடமும், பெரியவர்களிடமும், ஏன் எல்லோரிடமும் கூட ஊட்டச்சத்துக் குறைவால் சில உடல் உபாதைகள் ஏற்படுகின்றன.

முட்டையில் எவ்வளவு தான் கொலஸ்ட்ரோல் இருந்தாலும், அவை இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரோலின் அளவை அதிகரிக்காது.

எப்போது கொலஸ்ட் ரோல் நிறைந்த முட்டையை அதிகம் பயன்படுத்தி வருகிறோமோ, அப்போது கல்லீரல் கொலஸ்ட்ரோல் உற்பத்தியைக் குறைத்து விடும். இதனால் இரத்தத்தில் கொலஸ்ட்ரோலின் அளவு அதிகரிக்காமல் இருக்கும்.



முட்டையின் மஞ்சள் கருவில் லூடீன் மற்றும் ஜியாசாந்தின் என்னும் ஆன்டி-ஒக்ஸிடண்ட்டுகள் வளமாக நிறைந்திருப்பதால், அவை கருவிழியைப் பாதுகாத்து, கண் களில் பிரச்சினைகள் ஏற்படாமல் பாதுகாக்கும்.

பெண்கள் கர்ப்ப காலத்தில் தினமும் ஒரு முட்டையை நன்கு வேக வைத்துச் சாப்பிட்டால், வயிற்றில் வளரும் குழந்தைக்கு வேண்டிய சத்துக் கிடைத்து, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கலாம்.



# பெண்களை தொந்தரவு செய்யும் குதிக்கால் வலி

பெண்களுக்கு அதிகமான வலிகள் வந்தாலும், குதிக்கால் வலி அதில் முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இன்றைய தலைமுறையினரில் பெரும்பாலானவர்கள் இந்த வலியால் அவதிப்படுகின்றனர்.

பிளான்டார் பேஷியைடிஸ் எனப்படும் குதிக்கால் வலி, தூங்கியெழுந்தால் வலி உண்டாவதும் நடக்க நடக்க வலி குறைவதுமான விசித்திர பிரச்சினையாகும்.

பிளான்டார் பேஷியா என்று பாதத்தில் ஒரு தோல் போன்ற அமைப்புள்ளது. இது தட்டைப் பாதம் உள்ளவர்களுக்கும் அதிக எடை உள்ளவர்களுக்கும், பாத வளைவு அதிகப்படியாக இருப்பவர்களுக்கும் அதிக இறுக்கம் ஏற்பட்டு, குதிக்கால் வலியை ஏற்படுத்துகிறது.

சிலருக்கு குதிக்காலில் எலும்பு குருத்து வளர்ந்து வலி ஏற்படுகிறது. இது ஒரு சாதாரண பிரச்சினையே. 95 சதவீதத்தினருக்கு சாதாரண பயிற்சியே இதை சரி செய்யப் போதுமானது.

**அதிக எடை உள்ளவர்களுக்கும், பாத வளைவு அதிகப்படியாக இருப்பவர்களுக்கும் அதிக இறுக்கம் ஏற்பட்டு, குதிக்கால் வலியை ஏற்படுத்துகிறது.**



பயிற்சி

மிதமான வெண்ணீரில் கால் மணி நேரம் தினமும் பாதத்தை வைக்கவும். பின்னர் பாதத்தில் முன் பகுதியை 10-15 செ.மீ. உயரமான பொருளில் வைத்து ஸ்ட்ரெட்ச் செய்வது போல் அழுத்தவும்.

# மாதவிடாய் பிரச்சினைகளுக்கு பயனளிக்கும் பெருங்காயம்

உணவுக்குழாய் வாயுநிலை தடுப்பானாகவும், உணர்ச்சியைக் கிளறிவிடும் தடுப்பானாகவும், நுண்ணுயிர் கொல்லியாகவும், மலமிளக்கியாகவும், சளி நீக்கியாகவும் மற்றும் தூக்க மருந்தாகவும் பெருங்காயம் பயன்படுகிறது.

பெருங்காயம் அன்றாடம் சமைக்கும் உணவில் சேர்க்கப்படுகிறது. செரிமானப் பிரச்சினைகளான வயிற்று வலி, வாயு, குடல் புழுக்கள், வயிற்றுப் பொருமல், எரிச்சல் ஏற்படுத்தும் குடல் புண்கள் போன்ற சிலவற்றை குணப்படுத்த இது உதவுகிறது.

சிறிது பெருங்காயத்தை அரைக்குவளை தண்ணீரில் கரைத்துப் பருகினால், செரிமான தொந்தரவுகளில் இருந்து உடனடி பயன் கிடைக்கும்.

பெருங்காயத்தின் பயன்பாட்டால் பெண்களுக்கு மாதவிடாய் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளான வயிற்று வலி, சதைப் பிடிப்பு, ஒழுங்கற்ற மாதவிலக்குக் காலம் மற்றும் வாய்வுகளில் இருந்து பயன் கிடைக்கும்.

பெண்களுக்கு ஏற்படும் புண்களுக்கும், வெண் கசிவுகளுக்கும் இது சிறந்த மருந்தாக விளங்குகிறது. பெருங்காயத்தை தேன் மற்றும் இஞ்சியுடன் கலந்து குடித்தால் சுவாசக் கோளாறுகளான வறட்டு இருமல், ஆஸ்துமா, மார்புச் சளி போன்றவைகள் குணமாகும்.

பெருங்காயம் நீரிழிவு நோய்க்கு மிகவும் நல்லது. இரத்தத்தில் குளுக்கோசின் அளவைக் குறைக்க, பாகற்காயில் பெருங்காயத்தைச் சேர்த்துச் சாப்பிடலாம்.

இந்த வாசனைப் பொருள் நரம்பு உந்தியாக செயற்படும்.

எனவே இதை நரம்பு தளர்ச்சி நோய், தசை வலிப்பு, மயக்க நிலை மற்றும் இதர நரம்பு சீர்குலைவுகளுக்கு பயன்படுத்தலாம்.

பெருங்காயத்தை தண்ணீரில் கலந்து பருகினால் தலைவலி மற்றும் கடுமையான ஒற்றைத் தலைவலி நீங்கும். அதிலும் எலுமிச்சை பானத்துடன் ஒரு சிட்டிகை பெருங்காயம் கலந்து குடித்தால், பல் வலி நீங்கும்.

சந்தையில் கிடைக்கும் பல சரும பாதுகாப்பு பொருள்களில் பெருங்காயத்தின் மருத்துவ குணங்கள் இருப்பதால், சருமச் சிகிச்சைக்கு உகந்ததாக இது விளங்குகிறது. இதை சருமத்தின் மேல் நேரடியாகத் தடவினால், தோல் தடிப்பு மற்றும் தோல் காய்ப்பு நீங்கும்.



# துணுக்காய்ப் பிரதேசத்தில் தொடர்ந்து இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு

## பிரதேச செயலரிடம் மக்கள் முறைப்பாடு

துணுக்காய்.ஜூலை 26

துணுக்காய், ஐயன்கன் குளம், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களில் தொடர்ந்து நடைபெற்றுவரும் மணல் அகழ்வு தொடர்பாக துணுக்காய்ப் பிரதேச செயலரிடம் மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.



பழைய முறிகண்டியின் ஆற்றுப் பகுதி, ஐயன்கன் குளத்துக்கும் பழைய முறிகண்டி கிராமத்துக்கும் இடையிலான ஆற்றுப் பகுதி ஆகிய இடங்களில் பெருமெடுப்பில் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

பழைய முறிகண்டிக் கிராமத்தில் நான்கு ஆண்டுகளாக இயங்கி வரும் மணல் சேகரிப்பு நிலையத்தின் ஊடாக பெருமளவு மணல் வெளி இடங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுகின்றது.

ஐயன்கன்குளம் பொலிஸார் சட்டவிரோதமாக மணலை அகழ்தல், மரங்களை வெட்டுதல் ஆகிய தொழில்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

வெளி இடங்களைச் சேர்ந்தவர்கள் பழைய முறிகண்டிக் கிராமத்தில் தரித்து நின்று மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். மணல் அகழ்வு தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபர், வடமாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரிடமும் மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். (க-18)



நெடுங்கேணி பிரதேச செயலர் க.பரந்தாமன் முன்னிலையில் சேவாலங்கா நிறுவனத்தின் பிரதிநிதி இயந்திரங்களையும், வாகனத்தையும் கால்நடை அபிவிருத்திச் சங்கத்தினரிடம் வழங்குகிறார்.

# இயந்திரங்களும் வாகனமும் சேவாலங்காவால் கையளிப்பு

## நெடுங்கேணி கால்நடை வளர்ப்போர் சங்கத்துக்கு

முல்லைத்தீவு.ஜூலை 26

நெடுங்கேணி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்துக்கு சேவாலங்கா நிறுவனத்தினால் பால் பதனிடும் மற்றும் ஜூஸ் தயாரிக்கும் இயந்திரங்களும் வாகனமொன்றும் வழங்கப்பட்டுள்ளன.

நெடுங்கேணியில் கால் நடை வளர்ப்போரை ஊக்கப்படுத்தும் முகமாக பாலைக் கொள்வனவு செய்வதற்கு 9 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வாகனமும் 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பால் பதனிடும் மற்றும் ஜூஸ் தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் முன்னிலையில் கால்நடை அபிவிருத்திச் சங்கத்திடம் இவை கையளிக்கப்பட்டன. (க-435)

# விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் போதுமானதாக இல்லையென முறைப்பாடு

தமக்கு விநியோகம் செய்யப்பட்டு வரும் குடிதண்ணீர் தமக்கு தேவைக்குப் போதுமானதாக இல்லை யென மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் பல்வேறு இடங்களிலும் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

தற்போது நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக நீர்நிலைகள் வற்றியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.



நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், கொம்பறுத்தகுளம், வீரப்பிராயகுளம், பொன்னகர் ஆகிய பகுதிகளிலும் பாண்டியன்குளம், செல்வபுரம், பாட்டாளிபுரம் ஆகிய இடங்களிலும் குடி தண்ணீருக்கான தட்டுப்பாடு மோசமாகக் காணப்படுகின்றது. குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மாந்தை கிழக்குப் பிரதேச சபையினரால் குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் தமக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் போதுமானதாக இல்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். (க-55)



மன்னார் விடத்தல்தீவில் அமைக்கப்படவிருக்கும் கமநலசேவை நிலையத்துக்கான அடிக்கல்லை மன்னார் அரச அதிபர் வை.எம்.எஸ். தேசப்பிரிய நட்டு வைக்கிறார். (க)

# மண் அணைகளை அகற்றுமாறு குமரபுரம் விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி,ஜூலை 26

பரந்தன் குமரபுரம் பகுதியில் விவசாய நிலங்களைக் குறுக்கறுத்துச் செல்லும் இராணுவ மண் அணைகளை அகற்றித்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த காலப் போரின் போது விவசாய நிலங்களை ஊடறுத்து அவற்றைப் பாதிக்கும் வகையில் மண் அணைகள் போடப்பட்டிருந்தன.

இதில் குறிப்பிட்ட சில இடங்களில் உள்ள மண் அணைகள் இது வரை அகற்றப்படாமல் உள்ளன.

இந்த நிலையில் குமரபுரம் பகுதியில் உள்ள மண் அணைகளை அகற்றித் தருமாறு கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அந்தப் பகுதி விவசாய அமைப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், கிளிநொச்சி சாந்தபுரம், மலையாளபுரம் உள்ளிட்ட பகுதிகளிலும், குமரபுரத்திலும் உள்ள மண் அணைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு அதற்கான ஒப்பந்தங்கள் இராணுவத்தினருடன் செய்து கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். (க-55)

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் விரைவில் காணிக் கச்சேரி

கரணவாய்,ஜூலை 26

புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள மக்களின் நன்மை கருதி காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்குவது தொடர்பான காணிக் கச்சேரி ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 460 குடும்பங்கள் காணி அனுமதிப் பத்திரத்தை வழங்குமாறு விண்ணப்பித்திருந்தன.

அவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அனுமதி காணி ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் மல்லிகைத்தீவு, உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டுத் தெற்கு, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு மேற்கு, மந்துவில் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் இந்தக் காணிக் கச்சேரிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும்

இதனை நடத்துவதற்கு மாகாண காணி ஆணையாளரின் அனுமதி கிடைத்ததும் அதற்குரிய திகதிகள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஐ.பிரதாபன் தெரிவித்தார். (க-108)

# செல்வபுரம் கிராமத்தில் மாலைநேர வகுப்புகள்

முல்லைத்தீவு.ஜூலை 26

முல்லைத்தீவு செல்வபுரம் கிராமத்தில் அன்புக்கரங்கள் அமைப்பினால் பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

சுவிஸ் நாட்டின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்படும் அன்புக்கரங்கள் அமைப்பினால் கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஆசிரியர் சிறிகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதன், வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், அன்புக்கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் கி.சந்திரஜீவா ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கினர்.

செல்வபுரம் கிராமத்தில் வறுமை நிலையிலுள்ள மாணவர்களே அதிகளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# ஐயன்கன்குளம் பகுதியில் யானைகளால் தொல்லை

முல்லைத்தீவு.ஜூலை 26

துணுக்காய்ப் பிரதேசத்தில் உள்ள ஐயன்கன்குளப் பகுதியில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் தாம் பாதிக்கப்படுவதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் ஆகிய பகுதிகளில் கடந்த காலங்களைவிட தற்போது காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.




தற்போது நிலவும் கடுமையான வறட்சி காரணமாக நீர் நிலைகளில் நீர் வற்றிக் காணப்படுவதால் குடிப்பதற்கு நீர் தேடி அலையும் காட்டு யானைகள், ஐயன்கன்குளம் குடியிருப்புக்குள் நுழைந்து பெரும் பயிரழிவுகளையும் அச்சத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. அத்துடன் யானைகள் நடமாடுவதால் மாலை 6 மணியுடன் வீடுகளை விட்டு மக்கள் வெளியே செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

பிரதான வீதி ஊடாகவும் மக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதுடன் பெரும் அச்சத்துடன் தினமும் வாழ வேண்டியிருப்பதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-55)

# வாகனஙங்களை நிறுத்தத் தடை; பொலிஸாரின் அறிவிப்புக்கு எதிர்ப்பு

வவுனியா.ஜூலை 26

வவுனியாவில் ஹொறவப் பொத்தானை வீதி, தர்மலிங்கம் வீதி உட்பட பிரதான வீதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்தக்கூடாது என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளமைக்கு குறித்த பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கடந்த சனிக்கிழமை இராணுவத்தினரின் பவள் கவசவாகனமொன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த பெண் ஒருவர் காயமடைந்தார். குறித்த இராணுவ வாகன சாரதி மக்களின் எதிர்ப்பை அடுத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்த வேண்டாம் எனக் கூறினர். குறித்த விபத்து நடப்பதற்கு வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களே காரணமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் விபத்து நடந்த நேரத்தில் குறித்த பகுதியில் வாகனங்கள் எவையும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

பொலிஸாரின் இந்தத் திடீர் நடவடிக்கை காரணமாகவாடிக்கையாளர்களும் வர்த்தகர்களும் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கி யுள்ளதாகவும் உரியவர்கள் தலையிட்டு இந்தத் தடை உத்தரவை நீக்குவிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (க-402)

# புறாப்பொறுக்கிப் பகுதி வயல் காணியில் அனுமதியின்றி மதுபான நிலையக் கட்டடம்

## தடுத்து நிறுத்துமாறு பிரதேச சபை தவிசாளருக்கு கடிதம்

கரணவாய், ஜூலை 26

பருத்தித்துறை பிரதான வீதியில் புறாப்பொறுக்கிப் பகுதியில் வயல் காணியில் பிரதேச சபையின் அனுமதி இன்றி அமைக்கப்படும் கட்டட வேலைகளை உடன் தடுத்து நிறுத்துமாறு கரவெட்டிப் பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் கரவெட்டிப் பிரதேச சபை உறுப்பினர் க.பரஞ்சோதி.

புறாப்பொறுக்கி ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் மதுபான சாலையுடன் கூடிய தங்குமிடம் (ரெஸ்ட்ரோறன்ட்) ஒன்று அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன என்றும் - இந்தக் கட்டடம் அமைப்பதை அந்தப் பகுதி மக்கள் எதிர்க்கின்றனர் என்றும் - அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர் க.பரஞ்சோதி, பிரதேச சபைத் தவிசாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-


பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வீதியில் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் கட்டைவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கள்விற்பனைநிலையம்அமைந்துள்ளது. அந்தக் கிளைக்கு அருகில்நெல்விதைக்கும்வயல் காணியில் பெரிய கட்டடம் ஒன்று திடீரென அவசர அவசரமாக எழுப்பப்பட்டு வருகிறது.

இந்தக் காணியில் கட்டடம் அமைப்பதற்கு பிரதேச சபைத் தலைவராகிய தங்களால் அனுமதி வழங்கப்பட்டதா? கட்டடம் கட்ட அனுமதி பெறப்படாவிட்டால் உடனடியாக அந்த வேலைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில் இந்தக் கட்டடம் வியாபார நோக்கம் கருதி அமைக்கப்பட்டு வருவதாக அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளதுடன், தமது ஜீவனோபாய தொழிலாகிய சீவல் தொழிலும் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கின்றனர்.

எனவே, கட்டட வேலைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்- என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-108)

## காத்தோட்டிக்காய்க்கு கிராக்கி



யாழ்ப்பாணம், ஜூலை 26

ஆடி அம்மாவாசை தினத்தில் விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு காத்தோட்டிக் காய் முக்கியமானது. ஆனால் குடாநாட்டில் அதற்கு இம்முறை பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கடும் வறட்சி காரணமாக இம்முறை காத்தோட்டி செடிகள் போதியளவு காய்க்கவில்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆடி மாதத்திலேயே இந்தச் செடி காய்ப்பது வழமை என்றாலும் இம்முறை காத்தோட்டிக்காய் சந்தைகளுக்கு போதியளவு வந்து சேரவில்லை. இதனால் காய் ஒன்று நேற்று 10 ரூபா முதல் 15, 20 ரூபா வரை விற்கப்பட்டது. (ஓ-17)

# டெங்கு நோய்ப் பரம்பல் இம்முறை மிகக்குறைவு

## சுகாதார அமைச்சின் ஆய்வு மையத்தால் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்ட பரிசோதனை அறிக்கையில் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜூலை 26

இலங்கை சுகாதார அமைச்சின் டெங்கு ஆய்வு மையத்தால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட டெங்கு பரிசோதனையில் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்ப் பரம்பல் மிகக் குறைவு என்று ஆய்வு மையத்தின் ஏப்ரல் - மே மாத அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆய்வு மைய அதிகாரிகளால் யாழ்ப்பாணத்தில் 500 இடங்களில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் 29 இடங்களில் மட்டும் டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதாகவும் அவற்றை இல்லாதொழித்தால் யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த 29 இடங்களில் 44 வீதமானவை குடியிருப்பாளர்களால் வீசப்பட்ட கழிவுப் பொருள்களிலும் - 55 வீதமானவை தண்ணீர் தேங்கக் கூடிய இடங்களிலும் - காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை - வடமாகாணத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நிலையம் யாழ்ப்பாணத்தில் மட்டும் இயங்குவதாகவும் அதே போன்று மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் - நிலையங்கள் அமைக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல்வேண்டும் என்றும், அவற்றுக்கான மத்திய நிலையம் வடமாகாண சுகாதார அமைச்சில் உருவாக்கப்படல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனெனில் இந்த மாவட்டங்களில் டெங்கால் பாதிக்கப்பட்ட ஒருவர் மூலம் இரண்டு மணித்தியாலங்களில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு பரவக்கூடிய அபாயம் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

## உறவுகளால் தாக்கப்படுவோர் அதிகரிப்பு

### சாவகச்சேரி மருத்துவமனையில்

குடும்ப உறவுகளால் தாக்கப்பட்ட பலர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

தந்தை, சகோதரன், கணவன் மற்றும் பேரப்பிள்ளைகள், மகள்மார் ஆகியோரால் தாக்கப்பட்டதாகக் கூறி மருத்துவமனையில் நாளாந்தம்பலர்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

தாக்குதல் நடத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படாததாலேயே இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொது மக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் தந்தை, சகோதரனால் தாக்கப்பட்ட யுவதியொருவரும், பேரனால் தாக்கப்பட்ட வயோதிபரொருவரும், கணவனால் தாக்கப்பட்ட குடும்பப் பெண்ணொருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனைப் பொலிஸார் பாதிக்கப்பட்டவர்களிடம்அறிக்கை பெறுகின்ற போதிலும் உரிய நடவடிக்கை எடுப்பதில் தயக்கம் காட்டுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

அண்மைக்காலகமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோரில் விபத்துக்களால் காயமடைவோரை விட தாக்குதல் சம்பவங்களில் காயமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## குருநகரில் இன்று சிறுநீரக நோயாளரை இனங்காணும் இலவச மருத்துவ சோதனை

குருநகர் பிரதேச வைத்தியசாலையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிறுநீரக நோயாளர்களை இனங்காணும் இலவச மருத்துவப் பரிசோதனை நடைபெறவுள்ளது.

சிறுநீரக நோயாளர்களை இந்த மருத்துவ பரிசோதனையில் அவசியம் கலந்து கொள்ளுமாறு இந்த மருத்துவப் பரிசோதனையை இலவசமாக நடத்தவுள்ள தெரண ஊடக வலையமைப்பு அறிவித்துள்ளது.

இந்தப் பரிசோதனைக்கு இவ்வமைப்புக்கு சுகாதார அமைச்சைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் குழு அனுசரணை வழங்கியுள்ளது. (ஓ-51)

## மாசேரியில் நாளை டெங்கு ஒழிப்பு சிரமதானம்

டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாசேரி கிராம சேவையாளர் பிரிவில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மாசேரி கிராம முன்னேற்றச் சங்க முன்றிலில் சிரமதான வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப் படவுள்ளது.

பிரதேச கிராம சேவையாளர் தலைமையில் சிரமதானம் நடைபெறும். பொதுமக்களை சிரமதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கிராம சேவையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-122)

## குடாநாட்டு சந்தைகளில் மண் சட்டி விற்பனை நேற்று அமோகம்

### ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 26

ஆடி அமாவாசை விரதத்தை அனுஷ்டிக்கும் முகமாக குடாநாட்டு மக்கள் சந்தைகளில் மண் சட்டிகளை நேற்று கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டியிருந்தனர். தந்தையை இழந்தோர் பிதிர்க்கடன் நிறைவேற்றும் நோக்கில் இந்த விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தமிழரின் பாரம்பரியமான மண் சட்டி, பானைகளில் இந்த விரத தினத்தில் சமைப்பது மரபாகும். இந்த நிலையில் திருநெல்வேலி சந்தையில் மண்சட்டி வியாபாரம் களைகட்டிக் காணப்பட்டது. ஒரு மண்சட்டி 40 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டது. வன்னிப் பகுதியில் இருந்து அதிகமான மண் சட்டிகள் எடுத்து வரப்பட்டிருந்தன. (வ-17)



# மாடுகளுக்கு காதுகளில் இலக்கமிடல் ஆரம்பம்

அச்சுவேலி, ஜூலை 26

யாழ்.மாவட்டத்தில் மாடுவளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்களைப் பதிவு செய்து மாடுகளுக்கு காதில் இலக்கம் இடும் வேலைத்திட்டம் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு வாரியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் செப்ரெம்பர் மாத இறுதிக்கு முன்னர் நிறைவுசெய்யப்பட வேண்டும் என்ற உத்தேச இலக்குடன் மேற்கொள்ளப்படும் "பண்ணையாளர் பதிவு மற்றும் மாடுகளுக்கு இலக்கம் இடும் வேலைத் திட்டம்" குறிப்பிட்ட முன்னறிவித்தலுடன் கிராமம் கிராமமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாடுகளுக்கான இலக்கத் தகடு மாடுகளின் இடது பக்க காதில் இணைப்புச் செய்யப்படுகின்றது. மாவட்ட இலக்கம், பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம், பண்ணையாளர் இலக்கம், மாட்டுக்கு உரிய இலக்கம் என்பன இலக்கத் தகட்டில் இடம்பெற்றுள்ளன. மஞ்சள் நிறம்கொண்ட பிளாஸ்ரிக்கிலான இந்த இலக்கத் தகடு மாடுகளின் இடப்பக்க காதில் இணைக்கப்படுகின்றது.

18 மாத வயதுக்கு மேற்பட்ட அனைத்து மாடுகளுக்கும் இத்தகடு இணைப்புச் செய்யப்படுகின்றது.

இலக்கம் பொறிக்கப்பட்ட மாடுகளை விற்கும்போது கைமாறும்போது அது தொடர்பாகப் பதிவு செய்த பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அறிவிப்பதோடு மாட்டைக் கொள்வனவு செய்வோர் மாடு வளர்க்கப்படும் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அறிவித்து, புதிய இலக்கத் தகட்டை பொருத்திக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் மாடுகள் காணாமற் போனால் மற்றும் களவு போனால் குறித்த மாட்டின் இலக்கம் மற்றும் பண்ணையாளரின் இலக்கத்தோடு தொடர்பான முறையிலேயே பொலிஸில் முறைப்பாட்டைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

இந்த வருடம் முழுமையாக பதிவுகள் செய்யப்பட்ட பின்னர் பதிவு செய்யப்படாமல் இலக்கத்தகடு இல்லாமல் இருக்கும் மாடுகளின் உரிமையை உறுதிப்படுத்துவதில் இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டும்.

மாடுகளின் இலக்கத்தகடு மற்றும் பண்ணையாளரின் பதிவு நடவடிக்கை தொடர்பான திருத்தமான புள்ளி விவரங்களை ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் முடிவதற்கு முன்னர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாவட்ட பணிப்பாளருக்கு பிரதேச கால்நடை வைத்தியர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

எதிர்காலத்தில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மற்றும் பண்ணையாளர் மற்றும் மாடு வளர்ப்போருக்கான நலனோம்பு வேலைத் திட்டங்கள் மற்றும் நிவாரணங்கள் என்பவை இந்தப் பதிவுகள் மற்றும் இலக்கங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-19)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அவமானத்தை துடையுங்கள்

தமிழ்ச் சமூகத்தினுள் யாழ்ப்பாணம் என்பது கல்வியின் அடையாளம். அதற்கு முக்கியமான காரணிகள் இரண்டு. முறைப்படுத்தப்பட்ட கல்வியை ஆங்கிலேயர்கள் இங்கு பரப்பத் தொடங்கியபோது அதனை இறுகப்பற்றிப் பிடித்து கல்வியில் முன்னோடியானமை முதலாவது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இரண்டாவது காரணம். தமிழர் தாயகப் பரப்பில் உருவாக்கப்பட்ட முதல் உயர் கல்விக்கூடம் அது. உயர் கல்வியை வழங்கும் முன்னேடியாகவும் யாழ்ப்பாணத்தை மாற்றியது அது.

யாழ்ப்பாணத்தின் அந்தப் பெருமை இப்போது களங்கப்பட்டுக் கிடக்கிறது. எந்த நிறுவனம் பெருமையைத் தேடித்தந்ததோ, அதுவே இன்று யாழ்ப்பாணத்தின் அவமானமாகவும் மாறிக் கொண்டிருப்பதைச் சகிக்க முடியவில்லை; ஏற்கவும் முடியவில்லை.

30 வருட கொடும் போருக்கு மத்தியில்கூட நிமிர்ந்து நின்ற யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கடந்த சில ஆண்டுகாலச் செயற்பாடுகள் நாகரீகமடைந்த சமூகத்திற்கு முன்னுதாரண மானவை அல்ல. பாலியல் குற்றச்சாட்டுக்கள் முதல் ஊழல் மோசடிகள் வரை மலையாகக் குவியும் குற்றப்பட்டியல் பல்கலைக்கழகத்தை சாக்கடையாக மாற்றி நிற்கின்றது. விசாரணைகள் இல்லை, சீரிய நிர்வாகம் இல்லை என்ற சீரழிவுகள் வேறு.

இங்கு மாணவர்களுக்கு உயர் விழுமியங்களும் மேற்கல்வியும் போதிக்கப்படுவதற்குப் பதில், சுயநலமும் பதவி ஆசையும், ஒருவரை ஒருவர் கருவறுப்பது எப்படி என்பதும், ஆட்சியாளர்களுக்குச் சலாம் போடுவது எப்படி என்பதும், பதவியைப் பிடிப்பதற்காக எந்த வரைமுறையையும் தாண்டி எவர் காலிலும் விழுவது எப்படி என்பதும் தான் முன்னுதாரணங்களின் மூலம் போதிக்கப்படுவதாகத் தோன்றுகின்றது. நேர்மை, கடமை, அர்ப்பணிப்பு, கண்ணியம், கட்டுப்பாடு என்றால் என்ன என்பதை பல்கலைக்கழக வளா கத்திற்குள் நூலக அகராதிகளில் இருந்து மட்டும் தான் அறிந்து கொள்ள முடியும் என்பதுதான் இன்றைய யதார்த்தம்.

இவற்றையெல்லாம் கண்டறிந்து திருத்தி பல்கலைக் கழகத்தைச் சீராக வழிநடத்தியிருக்க வேண்டிய பேரவையில் அரசியல் விசம் கலந்து விட்டதால் நிலைமையோ படுமோசம்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், விஞ்ஞான ஆசிரியர் சங்கம், கல்வி சாரா ஊழியர் சங்கம் என்பன இலங்கை ஜனாதிபதிக்கும் உயர் கல்வி அமைச்சருக்கும் அனுப்பி வைத்துள்ள மனு, பல்கலைக் கழகப் பேரவையின் சீத்துவக்கேட்டை சமூகத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது.

"அரசியல் கட்சியின் ஆதரவுடன் நியமிக்கப் பட்ட கடந்த சில பேரவைகள் தொடர்பான அதிருப்தி பல்கலைக்கழக மட்டத்திலும் பொது மக்களிடையேயும் நிலவுகின்றது. அப்படியான தவறான பேரவையின் நியமனமானது பல்கலைக்கழக நிர்வாக மற்றும் கல்விசார் நடவடிக்கை களின் மீது பேரவை கொண்டிருக்கவேண்டிய மேற்பார்வையில்,தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. போதனைசார் மற்றும் போதனை சாரா ஊழியர்கள் நியமனத்திலும் பெரும் முறைகேடுகளுக்கும் சலுகை காட்டுதல்களுக்கும் வழி கோலியுள்ளது. இது பல்கலைக் கழகத்தின் தரத்தைக் குறைப்பதுடன் சமூகத்தை வளப்படுத்துவதில் அதன் பங்கைப் பாதிக்கும்" என்று நச்செென நடுமண்டையில் குட்டுவது போன்று எடுத்துக் காட்டியிருக்கின்றன தொழிற் சங்கங்கள்.

உண்மையை மிகத் துலாம்பரமாக எடுத்துக் காட்டியிருக்கின்றது அந்தக் கருத்து. உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க இந்த விடயத்தில் அக்கறை எடுத்து, சமூகத்தில் அக்கறை உள்ள ஒரு மனிதராக நடந்துகொள்ளவேண்டும். பல்கலைக் கழக மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சியை வழங்குவது மட்டும்போதாது சரியான முன்னுதாரணங்களும் வழிகாட்டிகளும்கூட அவசியம். அமைச்சர் புரிந்துகொண்டு, அடுத்த பேரவையையாவது சமூகத்திலும் பல்கலைக்கழ கத்திலும் அக்கறை கொண்டவர்களைக் கொண்டு நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# நெருப்புடன் விளையாட முனையக் கூடாது

சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரி.

முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க ஜனாதிபதிப் பதவியினின்றும் ஓய்வுபெற்ற பின்னர் தமக்கு நெருங்கிய அரசியல் நண்பர்கள் சிலரிடம் தென்மாகாண சபையுடன் மோதப் போனதாலேயே தாம் ஓரங்கட்டப்பட நேர்ந்ததாக அடிக்கடி தெரிவித்ததுண்டு. உண்மையில் நாட்டின் தென்பகுதி பொதுவாக ஐ.தே.கட்சிக்கு அரசியல் ரீதியில் இலாபகரமான பகுதியாக அமைந்த தொன்றல்ல. அந்த உண்மையை டி.பி. விஜேதுங்க தமது ஜனாதிபதிப் பதவியின் இறுதிக் காலத்தில் தெளிவாக உணர்ந்து கொண்டிருந்தாரில்லை.

போரொன்றின்போது கூட தமக்கு வாய்ப்பான பிரதேசத்துக்கு எதிரிகளை வரவைத்துப் போர் புரிவதேயல்லாமல், தமக்கு வாய்ப்பற்ற பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து எதிரிகளைச் சந்திக்க முயல்வது மடமைத்தனமாகும் என்பது பொதுக்கருத்து. ஜனாதிபதி மஹிந்த தற்போது அத்தகையதொரு தவறான அணுகுமுறையைக் கடைக் கொள்ளத் தயாராகிறார். அதாவது வடமாகாணசபையுடன் மோதிக் கொள்ள முயன்று வருகிறார். வடமாகாண ஆளுநரான ஓய்வுபெற்ற இராணுவ உயரதிகாரியை அந்தப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு ஓய்வுபெற்ற சிவில் அதிகாரியொருவரை அந்தப் பதவிக்கு நியமிக்குமாறு வடமாகாண சபை முதலமைச்சர் விடுத்த கோரிக்கையைப் புறம்தள்ளி முதலமைச்சரை மோதலுக்குள் இழுத்து விட்டுள்ளார். இந்தப் புறமொதுக்கல் காரணமாக தாம் தமது முதலமைச்சர் பதவியைத் துறக்க எண்ணுவதாக வடமாகாணசபை முதலமைச்சர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

1983 கறுப்பு ஜூலை சம்பவத்துக்குப் பின்னர், நாட்டில் பிரிவினைகோரும் கருத்துக்குத் தடை விதிக்கும் அரசமைப்புத் திருத்தத்தை ஜே.ஆர் கொண்டுவந்த போது அந்த வேளை யில் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த அமிர்தலிங்கம் தமது பதவியைத் துறந்ததுடன் அவர் சார்ந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உறுப்பினர்களும் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்தனர். அதனையடுத்தே விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட்ட தமிழ் ஆயுதக்குழுக்கள் பலம் பெற்றதுடன் நாட்டில் அழிவுகளும் தலை தூக்கின. பொதுமக்களது வாக்குகளின் ஆதரவுடன் மாகாண முதலமைச்சர் அதிகாரத்தைப் பெற்றதன் பின்னர் மாகாண ஆளுநரால் அந்தப் பதவிக்குரிய அதிகாரம் நலிவுபடுத்தப் படும் வேளை குறிப்பிட்ட அந்த முதலமைச்சருக்கு மட்டுமன்றி அவர் சார்ந்த கட்சிக்கும் எத்தகைய வேதனை, சங்கடம், ஆத்திரம் ஏற்படுமென்பது குறித்த அனுபவம் ஜனாதிபதி மஹிந்தவுக்கு முன்னர் ஏற்பட்டதுண்டு. 1993 ஆம் ஆண்டின் தென்மாகாணசபைத் தேர்தலில் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மைப் பலம் பொ.ஐ. முன்னணிக்குக் கிட்டியிருந்தது. ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் வற்புறுத்தலின் பேரில் அந்த வேளையில் தென்மாகாண ஆளுநர், பொ.ஐ. முன்னணி மாகாணசபையை நிறுவ இயலாத விதத்தில் இடையூறுகளை ஏற்படுத்தியவேளை, அரசின் அத்தகைய நியாயமற்ற செயற்பாடுகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வெற்றிகண்டவர், அந்த வேளையில் சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக எதிர்க்கட்சியில் செயற்பட்டு வந்த இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவார்.

தென்மாகாணத்தைச் சேர்ந்த பிரபல்யம் மிக்க ஐந்து அரசியல்வாதிகள் தென் மாகாண சபைத் தேர்தலின் பின்னர் ஐ.தே.கட்சி அரசு பொதுஜன முன்னணிக்கு மாகாணசபையை நிறுவுவதற்கு வாய்ப்பளிக்காமல் பலதரப்பட்ட இடையூறுகளை விளைவித்த சம்பவங்கள் குறித்தும் அவற்றுக்கு எதிராக அந்த வேளையில் எதிர்க்கட்சியில் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக விருந்த மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட துணிச்சலான செயற்பாடுகள் குறித்தும் மஹிந்தவின் ஆளுமை குறித்த நூலொன்றில் சுவாரஸ்யமாக விவரித்திருந்தமை இந்த வேளையில் நினைவில் கொள் ளத் தக்கவையாகும். அந்த வேளையில் பிரேமதாசவின் அரசுக்கு எதிராக பாதயாத்திரை செயற்பாடுகளை முன்னெடுத்து மஹிந்த பொது மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தார். பிரேமதாச அரசு இருந்தாற்போலிருந்து தென்மாகாண சபையைக் கலைத்துப் புதிதாகத் தேர்தலை நடத்தியது. அந்தத் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு 26 ஆசனங்களும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 27 ஆசனங்களும் கிடைத்தன. 27 ஆசனங்கள் கிட்டியபோதிலும் மாகாணசபையை அமைப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாய்ப்பு வழங்காது அரசு காலத்தை இழுத்தடித்து வந்ததால் அதற்கெதிராக நீதிமன்றத்தில் முறையிட்டதன் பேரில் பொ.ஐ. முன்னணி அதி கூடிய ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளதால் மாகாண சபையை நிறுவ பொ.ஐ. முன்னணிக்கே வாய்ப்பு வழங்கப்பட வேண்டு மென நீதிமன் றம் உத்தரவிட்டது.

நீதிமன்றத் தீர்ப்பு வெளியானதையடுத்து தென்மாகாண ஆளுநர் திடீரென தலைமறைவாகிவிட்டார். இத னால் பதவிப் பிரமாணம் செய்து கொள்ள இயலாத நிலை தென் மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஏற்பட்டது. கடைசியில் தென் மாகாண ஆளுநர் பாகீர் மாக்கார் மாத்தளையில் தங்கியிருப்பதாக அறிந்த பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பாகத் தெரிவான மாகாண சபை உறுப்பிர்கள் சிலர் ஆளுநரைச் சென்று சந்தித்ததன் பேரில் குறிப்பிட்ட தொரு நாளில் ஆளு நரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் புதிதாகத் தெரிவான தென் மாகாண சபை உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் ஒப்புக்கொண்டார்.

ஆயினும் குறிப்பிட்ட தினத்துக்கு முதல் நாள் தொடக்கம் ஆளுநரின் உத்தி யோகபூர்வ வாசஸ்தலம் அமைந்திருந்த பகுதி பொலிஸாரின் கடும் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டது. வெளியார் எவரும் காலி கோட்டைப் பகுதிக்குள் உட்செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. இதன் மூலம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தென் மாகாண சபை உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் தயாராகவிருந்தும் குறிப்பிட்ட தினத்தன்று உறுப்பினர்கள் அந்த நிகழ்வுக்குச் சமுகமளிக்காததால் தென் மாகாண சபையை உருவாக்குவதைத் தள்ளிப்போட நேர்ந்தது என்றதொரு தோற்றத்தை உருவாக்கிக் காட்ட அரசு திட்டமிட்டுச் செயற்பட்டது. அதே வேளை பொ.ஐ. முன்னணிக்குக் கிட்டியிருந்த ஒரேயொரு மேலதிக உறுப்பினர் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்த, அந்தத் தரப்பிலிருந்து ஒரு உறுப்பினரைக் கட்சி மாறவைத்து ஐ.தே.கட்சிக்கு இழுத்துக் கொள்ள திரைமறைவில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அந்த விதத்திலாவது ஐ.தே. கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களின் எண் ணிக்கையை ஒன்றால் அதிகரிக்க வைத்து, பெரும் பான்மையை நிரூபித்து ஐ.தே.கட்சி சார்பாக தென் மாகாண சபையை நிறுவும் உரிமையைக் கோருவதே அதன் நோக்கமாக அமைந்தது.

ஆளுநரால் திகதி, நேரம் குறிப்பிடப்பட்ட தினத்தன்று பெருமளவான தென் மாகாண பொது மக்கள் காலி கோட்டை வளாகத்தில் திரண்டிருந்தனர். காலி கோட்டைக்குள் எவரும் பிரவேசிக்க இய லாதவாறு பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

நிலைமை குறித்து புதிதாகத் தெரிவான பொ.ஐ. முன்னணி மாகாண சபை உறுப்பினர்கள் மஹிந்தவுக்கு எடுத்துக் கூறி எந்தவிதத்திலாவது தாம் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள உதவுமாறு கோரியிருந்ததையடுத்து குறிப்பிட்ட தினத்தன்று மஹிந்த அந்த இடத்தில் சமுகமளித்திருந்தார்.

குறிப்பிட்ட வேளையில் மஹிந்தவின் தலைமையில் ஆளுநரின் வாசஸ் தலத்துக்கு மாகாண சபை உறுப்பினர்கள் செல்ல முயன்றபோது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

தாம் ஒரு வழக்கறிஞர் எனவும், காலி கோட்டை வளாகத்துக்குள் இருக்கும் நீதிமன்றத்துக்குத் தாம் செல்ல வேண்டியிருப்பதாகவும் பொலிஸ் அத்தியட்சகரிடம் மஹிந்த தெரிவித்தார். அப்போதும் அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து, மஹிந்தவின் தலைமையில் தடையையும் மீறி உள் நுழைந்து ஆளுநரின் அலுவலகத்தை அடைந்தனர் மாகாண சபைக்குத் தெரிவான உறுப்பினர்கள். ஆளுநரின் அலுவலகக் கதவுகள் பூட்டப்பட்டிருந்தபோதும் மஹிந்தவின் தலைமையிலான அந்தக் குழுவினர் வலோற்காரமாகக் கதவைத் திறக்க வைப்பித்து ஆளுநரைப் பதவிப் பிரமாணம் செய்து வைக்குமாறு வற்புறுத்தினர்.

எதுவுமே செய்ய இயலாத ஆளுநர் பதவிப் பிரமாணப் பத்திரங்களை எடுத்து வந்த போது, முதலாவது பத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்ட மஹிந்த, ஆளுநர் முன்னிலையிலேயே 'அமரசிறி தொடங் கொட ஆகிய நான் இன்று ஜனநாயக ரீதியிலான' எனத் தொடங்கி அமரசிறி தொடங்கொடவுக்கான பதவிப் பிரமாண வாசகங்களை உரத்து வாசித்தார். எதுவுமே செய்ய இயலாத ஆளுநர் அமரசிறி தொடங்கொட என்பவர் தென் மாகாண சபையின் முதலமைச்சராக எனது முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் எனக் கையெழுத்திட்டு வழங்கினார். அன்று மக்களது பலத்தை, உரிமையை நிலைநாட்ட ஒரு மாகாண ஆளுநருடன் முரண்பட்டு, போராடி வெற்றியீட்டிய அதே மஹிந்த ராஜபக்ஷ, இன்று மாகாண ஆளுநர் ஒருவரைப் பாதுகாப்பதற்கு முயல்வது ஆச்சரியம் அளிக்கும் ஒன் றாகும்.

பொதுமக்களது உரிமைகளைப் புறக்கணித்து மாகாண ஆளுநர்மூலம் தென் மாகாணசபையின் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ள ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க அன்று முயன்றதன் மூலம் நாட்டு மக்களால் புறக்கணிப்புக்கு உள் ளாக நேர்ந்தது. அது தென்பகுதி. இன்று சிக்கல் ஏற்பட்டிருப்பதோ வடபகுதியில். வடபகுதி தென்பகுதியைப் போன்ற ஒன்றல்ல. வடபகுதியின் அரசியல் நிலை, அங்கு இடம்பெறும் அரசியல் செயற்பாடுகள் குறித்து முழு உலகமுமே இன்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் இன்று அர சுக்கும், வடமாகாண முதலமைச்சர் விக் னேஸ்வரனுக்கும் இடையே முரண் பாட்டை ஏற்படுத்தி விக்னேஸ்வரனை முத லமைச்சர் பதவியிலிருந்து தாமாகவே வெளியேற வைக்க தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அதன் பின்னர் சாத்வீக வழிப்போராட்டத்தை அந்த அமைப்புக்கள் முன்னெடுக்க முயலும் போது அரசு அதனைப் படைபலம் கொண்டு அடக்கி ஒடுக்க முயலும். அதன் பலாபலன் மீண்டும் நாட்டில் குழப்பமும் சிக்கலுமே ஏற்பட நேரும். அத்தகைய குழப்பங்களால் தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழக்க நேர்ந்தால் அதைச் சாட்டா கக் கொண்டு சர்வதேச நாடுகளின் தலையீடு வலுப்பெறும். மொத்தத்தில் டி.பி. விஜேதுங்க தென்பகுதியில் தண்ணீருடன் தான் விளையாட முயன்றார். ஆனால் மஹிந்தவோ வடபகுதியில் நெருப்புடன் விளையாட முயல்கிறார். என்றே கருத வேண்டியுள்ளது.



# அசாஞ்சே செய்த குற்றம் என்ன?

நன்றி-த கார்டியன்

எம்மில் பலர் பகல் பொழுதில் காற்று வாங்குவதற்காக நடந்து செல்வதை விரும்புவார்கள். சிலரால் அப்படிச் செய்ய முடியாமல் இருப்பதற்குச் சில காரணங்களும் இருக்கலாம். அதாவது, அவர்கள் பார்க்கும் வேலையின் காரணமாக அப்படிச் செய்ய முடியாமல் போகலாம் (சுரங்கத் தொழிலாளிகள், நீர்மூழ்கிக் கப்பலில் இருப்பவர்கள்). அல்லது சூரிய ஒளி உடலில் பட்டால் உயிருக்கே ஆபத்து என்ற விசித்திரமான நோயைக் கொண்டவர்களாலும் அப்படிச் செய்ய முடியாது. காற்றுவாங்குவதற்காக நடப்பதற்குச் சிறைவாசிகளுக்குக் கூடத் தினமும் அனுமதி உண்டு.

**அசாஞ்சே செய்தது என்ன?**

கடந்த 19ஆம் திகதியுடன் ஜூலியன் அசாஞ்சேவுக்கு இந்த உரிமை பறிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. லண்டனில் உள்ள ஈக்குவடோர் நாட்டின் தூதரகம் இருக்கும் அடுக்ககத்தில் அவர் நிரந்தரமாகத் தன் வாழ்நாளைக் கழிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கிறார். அந்த அடுக்ககத்துக்கு வெளியே அவர் கால் வைத்தால் அடுத்த நொடியே கைதுசெய்யப்படுவார். அப்படி அசாஞ்சே செய்த குற்றம்தான் என்ன? வேறொன்றுமில்லை. அசாஞ்சேவும் அவரது சகாக்களும் தேசத் துரோகிகளாக அடிக்கடி குற்றஞ்சாட்டப்படுகின்றனர்.

"மக்களுக்கான உளவாளி" என்று அசாஞ்சே தன்னை அழைத்துக்கொண்டார். "மக்களுக்காக உளவுபார்ப்பது" என்பது சாதாரணமான துரோகம் அல்ல. ஒரு நாட்டின் இரகசியங்களை எதிரிகளிடம் விற்பது என்று அதற்கு அர்த்தம். அது மிகவும் புரட்சிகரமானது. இப்படிச் செய்வதன் நோக்கமே ரகசியங்கள் மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதுதான். எனவே, உளவுபார்த்தல், ரகசியம் என்ற கருத்தாக்கம் ஆகியவற்றின் அடிப்படை அர்த் தத்தையே இது கேள்விக்குள்ளாக்குகிறது. வங்கிகள், புகை யிலை, எண்ணெய் நிறுவனங்கள் போன்ற தனியார் நிறு வனங்களின் சட்டவிரோத நடவடிக்கைகளை அரசுத் தரப்பு களுக்கு அம்பலப்படுத்தியவர்கள் என்று விக்கிலீக்ஸுக்கு உதவியவர்களையெல்லாம் இனிமேல் கருத முடியாது; உண்மையில் அரசுத் தரப்புகளைத்தான் மக்களிடம் அவர்கள் அம்பலப்படுத்தியிருக்கிறார்கள்.

நாம் கற்பனை செய்திராத எதையுமே விக்கிலீக்ஸிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவில்லை. ஒன்றைப் பற்றிப் பொதுப்படையாக அறிந்திருப்பது என்பது வேறு; அதைப் பற்றிய நிதர்சனமான தகவல்களை அறிந்திருப்பது என்பது இதற்கு முற்றிலும் வேறுபட்டது. ஒருவருடைய இணை, வேறு பலருடன் உறவு வைத்திருப்பது குறித்து ஒருவருக்கு முன்னமே தெரிந்திருந்தாலும், புகைப் படங்கள் போன்ற சில ஆதாரங்கள் கிடைக்கும் போதுதான் அவருடைய வேதனை அதிகமாகும்; அதைப் போன்றதொரு உணர்வுதான் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்திய தகவல்கள் மூலம் நமக்கும் கிடைத்தது.

**அமெரிக்கர்கள் எப்படி எதிர்கொண்டார்கள்?**

இந்த உண்மைகளையெல்லாம் எதிர்கொண்டபோது கண்ணியமான அமெரிக்கக் குடிமக்கள் அனைவரும் மிகவும் கூனிக்குறுகிப் போனார்களா? இப்போதுவரை, சராசரி குடிமக்களின் அணுகுமுறை கபடமும் பொறுப்பின்மையும் கூடியதாக உள்ளது. உளவு நிறுவனங்கள் செய்த அசிங்கமான காரியங்களை மறந்துபோவதையே நாம் விரும்பினோம். இனியும் நமக்கு எதுவும் தெரியாது என்று நாம் பாவனை செய்ய முடியாது.

அமெரிக்காவுக்கு எதிரான நிகழ்வாக மட்டுமே விக்கிலீக்ஸைப் பார்த்தால் போதாது. சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் அமெரிக்காவைவிட அடக்குமுறையான நாடுகளாக இருக்கின்றன. ஈராக் போரில் அமெரிக்கா செய்ததையெல்லாம் அம்பலப்படுத்திய செல்சியா மேனிங் போன்ற ஒருவருக்கு சீனத்தின் நீதிமன்றங்களில் என்ன நடந்திருக்கும் என்று கற்பனை செய்துபாருங்கள்! அநேகமாக, வெளிப்படையான விசாரணையே இருந்திருக்காது; அந்தப் பெண் திடீரென்று காணாமற் போயிருப்பார், அவ்வளவுதான்.

**பெரும் அச்சுறுத்தல்**

அமெரிக்கா அதுபோலவெல்லாம் கைதிகளைக் கொடூரமாக நடத்துவதில்லை. ஏனென்றால், அதற்குத் தொழில்நுட்பம்தான் முன்னுரிமை. எனவே, வெளிப்படையாகக் கொடூரமாக நடந்துகொள்ள வேண்டிய அவசியமே அதற்கு இல்லை. நமது சுதந்திரத்துக்கு சீனாவைவிட அமெரிக்காதான் பெரும் அச்சுறுத்தல் என்பதற்கு இதுதான் காரணமே: அமெரிக்காவின் கட்டுப்பாட்டு வழிமுறைகள் வெளிப்படையாகத் தெரியாது; ஆனால், சீனத்தின் கொடூரமான அணுகுமுறை வெளிப்படையாகவே தெரியக்கூடியது.

சீனாவைப் போன்ற ஒரு நாட்டில் சுதந்திரத்துக்கு இருக்கும் எல்லைகள்குறித்து அனைவருக்குமே தெளிவாகத் தெரியும். யாருக்கும் அதைப் பற்றிய பிரமைகள் இல்லை. அமெரிக்காவிலோ, முறைப்படியான சுதந்திரத்துக்கு அனைவருக்கும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

அதன்மூலம் பெரும்பாலான மக்கள் தாங்கள் சுதந்திரமாக வாழ்கிறோம் என்று உணர வைக்கப்படுகிறார்கள். கூடவே, எந்த அளவுக்கு அரசாங்கத்தின் கரங்களால் அவர்கள் கட்டுப்படுத்தப்படுகிறார்கள் என்பது தெரியாத நிலையிலும் அவர்கள் இருக்கிறார்கள்.

**நாமெல்லாம் எலிகள்தானா?**

2002ஆம் ஆண்டு மே மாதத்தில், நியூயோர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அறிவியலாளர்கள் ஒரு சாதனையை நிகழ்த்தினார்கள். எலியின் மூளையில் ஒரு கணினிச் சில்லை இணைத்ததன் மூலம் சில அடிப்படையான சமிக்ஞைகளை எலியின் மூளைக்குக் கடத்தி, எலியின் இயக்கங்களைத் தங்கள் தொழில்நுட்பத்தின் மூலம் கட்டுப்படுத்தினார்கள். தொலை இயக்கியைக் கொண்டு பொம்மைக் காரைச் செலுத்துவது போன்ற செயல்முறைதான் அது. ஒரு பிராணியின் தன்னிச்சையான வாழ்க்கையை முதன்முறையாக ஒரு கருவி ஆக்கிரமித்துக்கொண்டது.

வெளியிலிருந்து கட்டுப்படுத்தப்படும் தனது செயற்பாடுகளை எப்படி உணர்ந்திருக்கும் பாவப்பட்ட அந்த எலி? தனது இயக்கங்கள் வேறொருவரால் தீர்மானிக்கப்பட்டதை அது முழுவதும் உணராமலேயே இருந்திருக்குமா? சீனக் குடிமக்களுக்கும் மேற்குலகின் சுதந்திர நாடுகளின் சுதந்திரக் குடிமக்களுக்கும் இருக்கும் வேறுபாடு இதுதான். சீன எலிகளுக்குத் தாங்கள் கட்டுப்படுத்தப்படுவது தெரியும். முட்டாள் எலிகளான நாமோ நமது அசைவுகள் எப்படிக் கண்காணிக்கப்படுகின்றன என்பதை யெல்லாம் உணராமலேயே காலாற நடந்துகொண்டிருக்கிறோம்.

சாத்தியமே இல்லாத ஒரு கனவை விக்கிலீக்ஸ் பின்தொடர்கிறதா? நிச்சயமாக இல்லை. அதன் அம்பலப்படுத்தல்களால் உலகம் ஏற்கெனவே மாறுதலுக்கு உள்ளாகியிருப்பது கண்கூடு. அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகளின் சட்டவிரோத நடவடிக்கைகளை நாம் தெரிந்துகொண்டது மட்டுமல்ல; உளவு நிறுவனங்களின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் விதத்திலான சட்டங்களை இயற்றக் காரணமாக இருந்தது மட்டுமல்ல; விக்கிலீக்ஸ் அவற்றையெல்லாம்விட அதிகமாகச் சாதித்திருக்கிறது. கோடிக் கணக்கான மக்கள் தாங்கள் வாழும் சமூகத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றிருக்கிறார்கள். சமீப காலம் வரை பிரச்சினை ஏற்படுத்தாதது என்று நாம் நினைத்துவந்த சமூகம், உண்மையில் பிரச்சினைக்குரியதுதான் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். அதுதான் விக்கிலீக்ஸின் பெரிய சாதனை.

இதனால்தான் பெரும் தீங்கு செய்தவராகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார் அசாஞ்சே. உண்மையில், விக்கிலீக்ஸ் எந்த வன்முறைப் பாதையையும் மேற்கொள்ளவில்லை. கார்ட்டூன் படங்களில் தொன்றுதொட்டு வரும் ஒரு காட்சி நமக்கெல்லாம் நன்கு பரிச்சயமானது; கார்ட்டூன் கதாபாத்திரமொன்று ஒரு இடத்தின் உச்சிப் பகுதியில் ஓடிக்கொண்டே இருக்கும்; தரைப் பகுதியைத் தாண்டியும் அந்தரத்தில் ஓடிக்கொண்டே இருக்கும், கீழே தரையே இல்லை என்பதை உணராமலேயே. கீழே குனிந்து பார்த்தபின்னரே, தான் ஓடிக்கொண்டிருப்பது அந்தரத்தில் என்பது தெரிந்து, அதன் பிறகுதான் அந்தப் பாத்திரம் கீழே விழத் தொடங்கும். கீழே குனிந்துபாருங்கள் என்று அதிகாரத்தில் இருப்பவர்களுக்குச் சொன்னதுதான் விக்கிலீக்ஸ் செய்த காரியம். விக்கிலீக்ஸின் அம்பலங்களுக்குப் பெரும்பாலான மக்கள் ஆற்றிய எதிர்வினையானது, ஊடகங்கள் செய்த மூளைச் சலவையால் உருவானது. மக்களின் எதிர்வினையை 'நாஷ்வில்' என்ற திரைப்படத்தின் இறுதிப் பாடலின் வரிகளோடு பொருத்திப் பார்க்கலாம்: நான் சுதந்திரஜீவி இல்லையென்று நீ சொல்லலாம், அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. விக்கிலீக்ஸ் நம்மைக் கவலைகொள்ள வைக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, நம்மில் பெரும்பாலானோர் அப்படிக் கவலை கொள்வதை விரும்புவதில்லை.

## வெளிவாரி இறுதியாண்டுப் பரீட்சை நடைபெறுவது எப்போது?

வாசகர் திருமுகம்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவினரால் நடத்தப்படும் இறுதியாண்டுக் கலைப் பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை கடந்த சித்திரை மாதம் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பல்கலைக்கழக விரிவுரையாளர்களது வேதனப் பிரச்சினை காரணமாக பரீட்சை நடைபெறாது இழுபறி நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தின் வெளிவாரி மாணவர்களின் விடைப் பத்திரத்தைத் திருத்துவதற்கு வழங்கப்படும் படிகள் குறைவாக வழங்கப்படுவதே இதற்கான முக்கிய காரணமாகும். பத்திரம் திருத்துவதற்கான வேதனக் கொடுப்பனவை அதிகரித்துத் தரும் பட்சத்திலேயே பகுதி ஒன்றுக்கான விடைப் பத்திரத்தைத் திருத்திக் கொடுப்பது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதி வியாபார வணிக கற்கை நெறிக்கான பரீட்சைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அறியப்படுகின்றது. ஆனால் இந்தப் பரீட்சையில் அண்ணளவாக 150 மாணவர்கள் மட்டுமே பரீட்சை எழுதவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இறுதியாண்டுப் பரீட்சையில் 1500 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பரீட்சை எழுதக் காத்திருக்கின்றனர். எது எவ்வாறு இருப்பினும், இறுதியாண்டுப் பரீட்சை முதலில் நடைபெற்ற பின்பே மற்றைய பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்பது வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகினால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வரும் நியதி என்பதும் இங்கு குறிப்பிட்டுக் கூறத்தக்கது.

எனவே இதற்கு உரிய தரப்பினர் சுமுகமான தீர்வை மேற்கொண்டு கால தாமதமின்றி எமது பரீட்சையை நடத்துவதற்குரிய ஆயத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்பது பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியாகி நிற்கும் இறுதியாண்டு மாணவர்களாகிய எம்மவர்களது தயவான கோரிக்கை ஆகும்.

*பாதிக்கப்பட்ட மாணவர்கள்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் இருக்கும். ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் மற்றும் விவசாயிகளுக்கு சாதாரண பயன்கள் கிடைக்கும். செலவுகளைத் திட்டமிட்டுச் செய்வது நல்லது.

**இடபம்**: புதிய காரியங்களை செய்யத் தொடங்குவதற்கு முன் நல்ல நேரம் காலம் பார்த்துச் செய்வது நல்லது. வேலையில் இருந்த பளு சிறிதளவு குறையும். அதில் இருந்து வந்த தாமத நிலையும் மாறும்.

**மிதுனம்**: வேலை இல்லாதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். பல துறைகளில் இருப்பவர்களுக்கும் பொன்னான நாள். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

**கடகம்**: கலைத்துறையினருக்கு நன்மைகள் ஏற்படும். சினிமா, நாடகம், நாட்டியம் போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**சிங்கம்**: அலைச்சல்கள் கூடும். தீப்புண் காயம் ஏற்படலாம். கவனமாகச் செயற்படவும். இயந்திரங்களாலும் சிற்சில காயங்கள் ஏற்படலாம். மாணவர்கள் உற்சாகமாகக் கானப்படுவார்கள்.

**கன்னி**: எதிர்வரும் இடையூறுகளைத் தகர்ப்பீர்கள். பெரும்பாலான பிரச்சினைகளில் தெளிவுகள் தென்படும். அதேநேரம் போட்டிகள் அதிகரிப்பதால் தொழிலில் சற்று குழப்பமான நிலை இருக்கும். உத்தியோகத்தர்கள் கடினமாக உழைக்க வேண்டி இருக்கும்.

**துலாம்**: புதிய இட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். பொதுவான விடயங்களில் தலையிடுவோருக்கு உங்கள் கருத்துக்களை மற்றவர்கள் ஆமோதிப்பார்கள். பெண்களால் இருந்த தொல்லைகள் மறைந்து நிம்மதி பிறக்கும்.

**விருச்சிகம்**: பணத்தேவைகள் பூர்த்தியாகும். அயலாரின் ஆதரவு கிடைக்கும். குறுகிய பயணங்கள் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு சாதகமான முன்னேற்றம் ஏற்படப்போவது உறுதி. அந்நியருடைய தொடர்பால் ஆதாயம் உண்டு.

**தனுசு**: கூட்டுத்தொழில் செய்பவர்கள் கவனம் தேவை. அலுவலகத்தில் பொறுப்பும், சுமையும் அதிகரிக்கும். சகிப்புத் தன்மையுடன் உழைக்க வேண்டியிருக்கும். சோம்பலால் கடமையைப் புறக்கணித்தால் நட்டம் ஏற்படலாம்.

**மகரம்**: திடீர்க் கோபம் ஏற்படும். தேவையற்ற வீண் செலவுகளும் உண்டாகும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். விருப்பமான நபரை சந்திப்பதன் மூலம் மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படலாம். திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் இலாபம் பெற முடியும்.

**கும்பம்**: முக்கியமான தருணத்தில் முறையாகப் பேசமுடியாத ஒரு தடை ஏற்படலாம். இதனால் காரியத்தடை ஏற்படக்கூடும். மாணவர்களுக்கு கேளிக்கையில் நாட்டம் அதிகரிக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது தனிக்கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்**: வெற்றிகள் தேடி வரும். பதற்றத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். சிற்சில விரயங்கள் ஏற்பட்டாலும் அவை யாவுமே சுபச்செலவுகள்தான் என்பதை உணருங்கள். உங்கள் தன்னம்பிக்கை, திறமை என்பன அதிகரிக்கும்.

## நாளை

**ஆடி-11 ஞாயிற்றுக்கிழமை | 27.07.2014**

திதி: பிரதமை முழுவதும
நட்சத்திரம்: பூசம்
மா.06.56 வரை

சுபநேரம்: 09.02-10.32 வரை
இராகுகாலம்: 04.32-06.02 வரை


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### தவத்தின் மூலம் பிரமத்தை அடைய முயலுங்கள்

ஆசை இருக்கும் வரை பந்தமும் கூடவே இருக்கும். குறை நிலையில் இருப்பவனே இன்பத்தை அனுபவிக்கிறான். ஏனெனில், ஆசை நிறைவேறுவதையே இன்பம் என்கிறோம். ஜீவான்மா, இயற்கையை நுகர்ந்து இன்புறுகிறது. இயற்கை, ஆன்மா, இறைவன் இந்த மூன்றுக்கும் அடிப்படையாக இருப்பது பிரமம்; முயன்று பிரமத்தை நாம் வெளிக்கொணராத வரை, அதை நாம் காண முடியாது. எப்படி உராய்வின் மூலம் நெருப்பை வெளிக்கொணருகிறோமோ, அதேபோல உராய்வின் மூலம்தான் பிரமத்தை நாம் வெளிக்கொணர முடியும். நமது உடல், அடியில் இருக்கும் கட்டை; ஓம் என்னும் மந்திரம் மேலே இருக்கும் கட்டை, தியானத்தின் மூலம் இருகட்டைகளையும் உராய்ந்தால் பிரம்ம ஞானம் என்னும் ஒளி திடீரென ஆன்மாவில் வெளிப்படுகிறது. தவம் செய்வதன் மூலம் பிரமத்தை அடைய முயல். நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு புலன்களை மனதில் ஆகுதி செய்து விடு. ஐம்புலன்கள் உள்ளே இருப்பவை; ஐம்பொறிகள் வெளியே இருப்பவை. அவற்றை மனதில் செலுத்தி, ஒருமைப்படுத்தித் தியானம் செய். பாலில் வெண்ணெய் பரவி இருப்பதைப் போல, பிரபஞ்சத்தில் பிரமம் பரவி இருக்கிறது. பாலைக் கடைந்தால் வெண்ணெய் ஓரிடத்தில் திரள்கிறது. அதே போல, தியானம் செய்வது, பிரம்ம ஞானத்தை ஆன்மாவில் வெளிப்படுத்துகிறது.

## கீ போர்ட் இல்லாமல் டைப் செய்ய கையுறை!



150 வருடத்துக்கு மேலாக நாம் உபயோகிக்கும் கீ போர்ட் இன்றுவரை மாறாமல் அது டைப் ரைட்டரில் இருந்து சூப்பர் கணினி வரை அதே மாதிரி இருக்கும் காலகட்டத்தில் இப்போது கீ போர்ட்டே இல்லாமல் நீங்கள் டைப் செய்ய ஏதுவாய் ஒரு கையுறை யைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இதைக் கையில் அணிந்து கொண்டு கீ போர்ட் இல்லாமலே ஐ பேட் முதல் உங்கள் கணினி - லப்ரொப் என எதில் வேண்டுமானாலும் டைப் செய்ய இயலும்.

இந்த கையுறையை அணிந்து கொண்டால் வெறும் தரை - அல்லது மேசை மேல் கையை டைப்ரைட்டிங் ஸ்கில் தெரிந்தால் அதே மாதிரி வார்த்தைகளை டைப் செய்யும் ஒரு அற்புத கண்டுபிடிப்பு- அது போக - நீங்கள் விரும்பும் வகையில் உங்கள் கீபோர்ட்டை உங்கள் கைகளுக்கு ஏற்ற மாதிரிக் கூட மாற்றி அமைக்க முடியுமாம்.

அதுபோக இந்த கையுறை மூலம் ஸ்பெல்லிங் மிஸ்டேக் - வோர்ட்ஸ் பிரடிக்ஷன் எல்லாம் கூட செய்ய முடியும் என்பது கூடுதல் தகவல்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 6 | | | 1 |
| | | 6 | 3 | | 8 | | 9 | 2 |
| | 7 | | | 4 | | | | 3 |
| 3 | | 9 | 5 | 1 | 7 | | 8 | |
| | | 4 | | | | 1 | | |
| | 5 | | 4 | 6 | 2 | 3 | | 9 |
| 8 | | | | 5 | | | 3 | |
| 2 | 3 | | 6 | | 9 | 5 | | |
| 6 | | | 7 | | | 2 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 6 | 3 | 7 | 4 | 9 | 5 | 2 |
| 2 | 5 | 7 | 8 | 9 | 6 | 4 | 3 | 1 |
| 9 | 4 | 3 | 5 | 2 | 1 | 7 | 8 | 6 |
| 1 | 3 | 2 | 7 | 5 | 9 | 6 | 4 | 8 |
| 6 | 7 | 9 | 2 | 4 | 8 | 5 | 1 | 3 |
| 5 | 8 | 4 | 1 | 6 | 3 | 2 | 7 | 9 |
| 3 | 6 | 5 | 4 | 1 | 2 | 8 | 9 | 7 |
| 4 | 2 | 8 | 9 | 3 | 7 | 1 | 6 | 5 |
| 7 | 9 | 1 | 6 | 8 | 5 | 3 | 2 | 4 |

# உதைபந்தாட்டம் சமநிலையில்

வலி.வடக்கு, ஜூலை 26

யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகமும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் உதைபந்தாட்ட வெளிவாரி சேவை நிறுவனமும் இணைந்து நடத்திய உதைபந்தாட்ட வீரர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் நிறைவில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநாகல் தெரிவு அணியும் யாழ்ப்பாணம் தெரிவு அணியும் மோதிக்கொண்டன.

ஒரு அணி மற்றைய அணிக்குச் சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபிக்கும் வகையில் போட்டியில் இரு அணிகளும் கடுமையாக இறுதிவரை போராடின.

முதல் பாதி ஆட்டத்தில் குருநாகல் தெரிவு அணி ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடும் எதிர்பார்ப்பின் மத்தியில் களமிறங்கி மோதிக் கொண்டன. இதன் போது யாழ்ப்பாணம் தெரிவு அணி ஒரு கோலைப் பெற்று ஆட்டத்தை சமநிலைப் படுத்தியது. (த-86)



அணி வீரர்கள் பிரதம விருந்தினர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர்.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 18 ஆவது தாச்சி சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23-288)



## உதைபந்து தொடர் 2ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 26

மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மன்னார் நட்புறவு சங்கம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

சுற்றுத் தொடரில் 20 விளையாட்டுக்கழக அணிகள் பங்குபற்றவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-23)



# பலாலி விண்மீன் - திக்கம் இளைஞர் இறுதியாட்டத்தில் மோதுவதற்குத் தகுதி

கரணவாய், ஜூலை 26

உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதியாட்டத்துக்கு பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம், திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் என்பன தெரிவு செய்யப் பட்டுள்ளன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது.

அதன் அரையிறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் முதலிடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும், கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் யங் கம்பன்ஸ் அணியினர் தம் மைத் தயார் நிலைக்குக் கொண்டு வருவதற்குள் விண்மீன் கழகவீரர் காண்டீபன் 3 ஆவது மற்றும் 5 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது. யங் கம்பன்ஸ் அணியினர் தமது உச்சத் திறன்களையும் பயன்படுத்தி கோல் அடிப்பதற்குக் கடுமையாகப் போராடினர்.

ஆனாலும் எதிரணி வீரர்கள் அவர்களின் முயற்சியை முறியடித்த வண்ணமிருந்தனர். இதனால் முதற்பாதி ஆட்டத்தில் அவர்களால் கோல் எதனையும் போட முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின்னர் இரு அணியினரும் சில மாற்றங்களுடன் களம் புகுந்து கடுமையாக முட்டி மோதினர். இதனால் பந்து அலையில் அகப்பட்ட படகு போல அங்குமிங்கும் நகர்ந்த வண்ணமிருந்தது.

இரு அணியினருக்கும் கோல் அடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் பல கிடைத்தபோதும் அதனை அந்த அணியின் பின்கள வீரர்கள் தடுத்துக்கொண்டே இருந்தனர்.

இப்பாதியில் இரு அணியினரும் கோல் போடாத நிலையில் 2:0 என்ற கோல் அடிப்படையில் வென்று விண்மீன் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அடுத்து இடம்பெறவிருந்த மற்றைய அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும், திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோத இருந்தன.

ஆனால் இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் வராத காரணத்தால் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது. (த-108)

# பாடும்மீன், மேரிஸ் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 26

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம் பெற்ற வருகின்றன.

நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

## உருத்திரபுரம் அணி சம்பியன்

கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக்கழகம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த 8 ஆம் திகதி முதல் கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வந்த மேற்படி சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 40 வில்ளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன. விலகல் முறையில் இடம்பெற்ற இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜெயந்தி நகர் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில், உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சம்பியனான அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும், கேடயமும். 2 ஆம் இடம் பெற்ற அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் கேடயமும் வழங்கப்பட்டன. (த)

# முள்ளியவளை வளர்மதி கரப்பந்துத் தொடர்

## வித்தியா, வளர்மதி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 26

முள்ளியவளைவளர்மதிவிளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்துக்கு முள்ளியவளை வித்தியா விளையாட்டுக்கழகம் மற்றும் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழக அணி என்பன தகுதி பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை முள்ளியவளைவளர்மதிவிளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலாவது அரையிறுதியாட்டத்தில் முள்ளியவளைவித்தியாவிளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து முள்ளியவள்ளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதியது.


3 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் முள்ளியவளை வித்தியா விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் அல்கிஜிர விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து முள்ளியவளைவளர்மதிவிளையாட்டுக்கழக அணி மோதியது.

3 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)



வடக்கு மாகாண பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு ஆண்கள் அணிகளுக்கிடையே நடைபெற்ற மேசைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற ஆனைக் கோட்டை றோ.க.த.க. பாடசாலை அணி வீரர்கள், கோட்டக் கல்வி பணிப்பாளர், பாடசாலை முதல்வர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன். (ற-23)



சாரா டேவிஸ்

# பொதுநலவாயப் பளு தூக்குதலில் பங்குபற்றும் முன்னாள் அழகுராணி

இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னாள் அழகுராணியொருவர், தற்போது நடைபெறும் பொதுநலவாய விளையாட்டு விழாவில் பளுதூக்கும் போட்டியில் பங்குபற்றுகிறார்.

21 வயதான சாரா டேவிஸ் என்ற இந்த யுவதி, லீட்ஸ் பிராந்திய அழகுராணியாக 2012 மார்ச் மாதம் முடிசூட்டப்பட்டவர். ஆனால், பார்வைக்கு மாத்திரம் உடல் அழகாக இருந்தால் போதாது என எண்ணிய சாரா டேவிஸ் உடற்பயிற்சியிலும் தீவிர கவனம் செலுத்திவந்தார். பளுதூக்கும் பயிற்சியிலும் அவர் ஈடுபட்டார்.

பின்னர் பளுதூக்குதல் போட்டிகளிலும் சாரா டேவிஸ் பங்குபற்ற ஆரம்பித்தார். இந்த விளையாட்டில் படிப்படியாக முன்னேறிய அவர், தற்போது ஸ்கொட்லாந்து கிளாஸ்கோ நகரில் நடைபெறும் பொது நலவாய விளையாட்டு விழாவில் இங்கிலாந்து சார்பாக பளுதூக்குதல் போட்டியில் பங்குபற்று கிறார்.

இங்கிலாந்தின் பளுதூக்குதல் போட்டியாளர்களுக்கான தகுதிகாண் போட்டிகளில் ஜேர்க் பிரிவில் 107 கிலோகிராம்களையும் ஸ்னெட்ச் பிரிவில் 83 கிலோகிராம்களையும் தூக்கியதன் மூலம் பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கு சாரா டேவிஸ் தகுதி பெற்றார்.

பாடசாலையொன்றில் முழுநேர உடற்கல்வி ஆசிரியையாக இவர் பணியாற்றுகிறார். பளுதூக்குதல் விளையாட்டில் ஈடுபடுமாறு தனது காதலர் ஜெக் ஒலிவர்தான் தனக்கு ஆலோசனை வழங்கியதாகச் சாரா கூறுகிறார்.

20 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கு மாத்திரமல்லாமல் எதிர்வரும் நவம்பர் மாதம் கஸகஸ்தானில் நடைபெறவுள்ள பளுதூக்குதல் உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கும் சாரா டேவிஸ் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அழகுராணி போட்டிகளையும் சாரா மறந்துவிடவில்லை. எதிர்காலத்திலும் தான் அழகுராணி போட்டிகளில் பங்குபற்றவுள்ளதாக அவர் கூறுகிறார். இருதுறைகளிலும் தன்னால் கவனம் செலுத்த முடியும் என சாரா டேவிஸ் நம்புகிறார்.

'வழக்கமான அழகுராணிகளிலிருந்து நான் வெகுவாக மாறுபட்டுள்ளேன் என்பதால், பட்டினி கிடப்பதன் மூலம் உடல் அழகைப் பெற முடியாது என்பதை இளம் சமூகத்தினர் உணர்ந்துகொள்வர் என நம்புகிறேன்' என்கிறார் சாரா டேவிஸ்.

1970களுடன் ஒப்பிடும்போது அழகுராணி போட்டிகள் வெகுதூரத்துக்கு மாறியுள்ளன எனக் கூறும் சாரா டேவிட்ஸ், ஏனைய அழகுராணிகளும் உடற்பயிற்சி ஆலோசனைகளுக்காக தன்னை நாடுவர் என நம்புவதாகக் கூறுகிறார்.

இப்போது வலிமைதான் புதிய அழகு என எண்ணுகிறேன் என்கிறார் சாரா டேவிஸ். (த)

# ஜேம்ஸ் ரொட்ரிக்கஸை 648 கோடி ரூபாவுக்கு வாங்கியது ரியல் மட்ரிட்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் அதிக கோல்கள் போட்டவரான (6கோல்கள்) கொலம்பியா வீரர் ஜேம்ஸ் ரொட்ரிக்கஸுடன் 6 ஆண்டுகால ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது ரியல் மட்ரிட் அணி. அவரை ரூபா 648.9 கோடிக்கு வாங்கியிருக்கிறது ரியல் மட்ரிட். இதன் மூலம் அதிக விலைக்கு வாங்கப்பட்ட உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவராக உருவெடுத்திருக்கிறார் ரொட்ரிக்கஸ்.



முன்னதாக மொனாக்கோ அணிக்காக விளையாடி வந்தார் ரொட்ரிக்கஸ். அவருடைய அணி மாறுதல் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள மொனாக்கோ நிர்வாகம், உதைபந்தாட்ட வரலாற்றில் ரொட்ரிக்கஸின் இடமாற்றம் அணிக்கு மிகப்பெரிய இழப்பாகும் எனக் குறிப்பிட்டுள்ளது.

சமீபத்தில் முடிந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் தங்கக் காலணி விருதை வென்றவரான ரொட்ரிக்கஸ், மட்ரிட் அணியுடனான ஒப்பந்தம் குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார்.

அதில், ரியல் மட்ரிட் அணிக்காக விளையாட வேண்டும் என்ற கனவு இருந்தது. அது நனவாகியிருக்கிறது. உலகின் தலைசிறந்த அணியான மட்ரிட்டில் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். (த)

# இலங்கை சைக்கிள் ஓட்ட வீரர்களை நிறுத்திய ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸ்

பொதுநலவாய நாடுகளின் போட்டிகளுக்காகச் சென்ற சைக்கிள் ஓட்ட வீரர்கள், ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸாரால் தடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நான்கு பேரைக் கொண்ட இலங்கை சைக்கிள் ஓட்ட வீரர்கள், ஸ்கொட்லான்ட்யாட்டின் மிகவும் நெரிசல் மிக்க வீதியில் பயணித்துள்ளனர்.

இது தொடர்பில் தகவல் அளித்துள்ள ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸார்,


குறித்த நான்கு பேரும் எம் 77 வீதியின் மதர்வெல் மற்றும் ஹமில்டன் வெளிச்செல்லும் இடத்தில் வைத்து தடுக்கப்பட்டனர். இதன்போது குறித்த வீரர்கள் வீதி ஒழுங்கை மீறியதாக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அவர்கள் வீதியில் இருந்து அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சைக்கிள் ஓட்ட வீரர்கள் தடுக்கப்பட்ட இடம் எதிர்வரும் வியாழக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ட்ரைலதன் (நீண்ட தூர ஓட்டம், நீச்சல் மற்றும் சைக்கிளோட்டம்) போட்டிகள் இடம்பெறவுள்ள இடத்துக்கு அருகில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, 2002 ஆம் ஆண்டு மான்செஸ்டர் விளையாட்டுப் போட்டிகளின்போது இரண்டு கென்ய சைக்கிளோட்ட வீரர்கள், போக்குவரத்து நெரிசல் மிக்க எம் 61 வீதியில் பிரவேசித்திருந்தனர்.

இந்த வீரர்களையும் பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்தனர். (த)



டோனி

# பணக்கார வீரர்கள் வரிசையில் டோனியின் இடம் தெரியுமா?

உலகின் பணக்கார விளையாட்டு வீரர்களை போர் பஸ் பத்திரிகை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறது. வீரர்கள் போட்டி மூலம் பெறும் பணம், விளம்பரம் மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றை வைத்து இந்த பட்டியலை அந்தப் பத்திரிகை வெளியிடுகிறது.

2013ஆம் ஆண்டில் அதிக பணம் சம்பாதித்து உள்ள விளையாட்டு வீரர்கள் வரிசையில் உலக அளவில் இந்திய அணித் தலைவர் டோனி 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அவர் 126 கோடி இந்திய ரூபா சம்பாதித்துள்ளார்.

உதைபந்தாட்டப் பிரபலங்களான ரொனால்டோ, லியானல் மெஸ்சியை விட கடந்த ஆண்டில் டோனி அதிக பணம் சம்பாதித்து உள்ளார்.

17 கிராண்ட்சலாம் பட்டங்களை வென்ற ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), கோல்ப் வீரர் டைகர் உட்ஸ் ஆகியோர் முதல் இடத்தில் உள்ளனர். (த)

# உலகக் கிண்ணத்தை சேதமாக்கியவர் யார்?

## விரைவில் விசாரணை

உலகக் கிண்ணத்தில் சேதம் ஏற்படுத்திய ஜேர்மனி வீரர் யார்? என விசாரணை நடத்தப்படவுள்ளது.

பிரேஸிலில் சமீபத்தில் முடிந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில், ஆர்ஜென்ரீனாவை வீழ்த்திய ஜேர்மனி அணி சம்பியன் பட்டம் வென்றது.


உலகக் கிண்ண மாதிரியுடன் தாயகம் திரும்பிய இந்த அணியினருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் அணித்தலைவர் பிலிப் லாம், குளோஸ் உள்ளிட்டோர் திறந்த வெளி பஸ்ஸில் உலா வந்தனர்.

உலகக் கிண்ண மாதிரியை வீரர்கள் முத்தமிட்டு மகிழ்ந்தனர். இந்த நிலையில், இந்தக் கிண்ணத்தில் சேதம் ஏற்பட்டு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து ஜேர்மனி உதைபந்தாட்டக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

உலகக் கிண்ண மாதிரியில் சேதம் ஏற்பட்டுள் ளது உண்மைதான். தவிர ஒரு இடத்தில் வெட்டப்பட்டுள்ளது. இதற்காக யாரும் அச்சப்பட வேண்டாம். இதை யார் செய்தார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



# தென்னாபிரிக்கா தடுமாற்றம்



இலங்கையுடனான 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி தடுமாறி வருகின்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் அனைத்து இலக்குகளையும் இழந்து 421 ஓட்டங்களைக் குவித்தது. தனது சொந்த மைதானத்தில் வழமை போன்று அசத்திய மஹேல ஜெயவர்த்தன ஆறு, 17 நான்குகள் அடங்கலாக 165 ஓட்டங்களைக் குவித்தார். அறிமுக ஆட்டத்தில் விளையாடிய நிரோசன் டிக்வெல்ல சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 72 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். அணித்தலைவர் மத்தியுஸ் 63 ஓட்டங்களையும் கௌசல் சில்வா 44 ஓட்டங்களையும் பெற்றிருந்த நிலையில் ஏனைய வீரர்கள் பெரிதளவில் சோபித்திருக்கவில்லை. பந்து வீச்சில் ஸ்ரெய்ன், பிளான்டர், டுமினி ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களை தொடக்கத்திலேயே இழந்து தடுமாறியது. பின் மூன்றாவது இலக்குக்காக ஜோடி சேர்ந்த டு பிளசிஸ் அம்லா ஆகியோர் 58 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டிருந்த போது டு பிளசிஸ் 36 ஓட்டங்களுடன் வெளியேறினார். நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது தென் னாபிரிக்க அணி 3 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அம்லா 46 ஓட்டங் களுடனும், டீ வில்லியரஸ் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் சுரங்க லக்மால், ரங்கண ஹேரத், தில்ருவான் பெரேரா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினைக் கைப்பற்றியிருந்தனர். 221 ஓட்டங்களுக்குள் தென்னாபிரிக்க அணியைக் கட்டுப்படுத்தும் பட்சத்தில் பலோ-ஒன் முறையில் தென்னாபிரிக்க அணியை இரண்டாவது இனிங்ஸிலும் ஆடச்செய்வதன்மூலம் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை அதிகரித்துக்கொள்ள முடியும். அதேவேளை ஆட்டம் நடைபெறும் கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் மஹேல ஜெயவர்த்தன சதம் அடித்த எந்தவொரு போட்டியிலும் இலங்கை அணி தோல்வியடைந்திருக்கவில்லை என்பதும் குறிப்பித்தக்கது.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

## 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

அன்னை அணைப்பில்
26 . 02 . 1961



இறைவன் அழைப்பில்
26 . 06 . 2014

### அமரர் சிவகுரு செல்வராசா (செல்வம்)

*திதி: சதுர்த்தசி*

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் இறப்புச் செய்தி கேட்டு புலம்பெயர் நாடுகளில் இருந்தும், தொலை தூரங்களில் இருந்தும், தொலைபேசி மூலமும் தந்தி மூலமும், மின்னஞ்சல் மூலமும் மற்றும் இறுதி மரணச் சடங்கில் நேரில் வருகை தந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மரணச் சடங்கில் எமக்கு ஆதரவு தந்து தோளோடு தோள் தந்து ஆறுதலாக இருந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (26.07.2014) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மீசாலை கிழக்கு, மீசாலை.*

தகவல்:
**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள மகேந்திரா பிக்கப் NP PR xxxx விற்பனைக்குண்டு

**T.P: 075 039 5688** (56313) (10)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொதுச் சபை பிரதிநிதியாகிய

### ஜெராட் ஜொய்ஸ்லி பயஸ் பத்திநாதர்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், நெறியாளர் குழு உறுப்பினர்கள்,
பொதுச்சபை பிரதிநிதிகள், பணியாளர்கள்.
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/15233) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பிகை சுந்தரலிங்கம்



தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் (24.07.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான A.R.P வைத்திலிங்கம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை, முருகேசம்பிள்ளை மற்றும் லீலாவதி, காலஞ் சென்ற அரசரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கமலலோஜினி, செல்வராணி (ஆஸ்திரேலியா), தியாகலிங்கம் (இலங்கை வங்கி- வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் மகாலிங்கம் (அமெரிக்கா) மாலினி (வவுனியா) ஞானலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், சின்னத்தம்பி, சூரியகுமார் (ஆஸ்திரேலியா), சகுந்தலை, மாதினி (அமெரிக்கா), சுகிர்தகுமார் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா), புவனேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சிறீசொரூபன்-தெய்வதர்ஷினி (கனடா), சிறீஸ்கந்தன்-றீனா (கனடா), சிறீறங்கன்-வில்வகலா (பிரதேச செயலகம், சங்கானை), சிறீ றமணன்-சுபாஜினி (பிரதேச செயலகம்-காரைநகர்), சிவசரண் (ஆஸ்தி ரேலியா), சாய்கரன் (ஆஸ்திரேலியா), சேந்தன் (H.N.B மல்லாவி), பரதன் (சுழி/விக்றோறியாக் கல்லூரி), அபினி (அமெரிக்கா), லுமிந்தன் (வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சக்திகா, நீலன், ரிஷி சாமுவேல், அன்றியா, டர்சிகா, சிறீநிகேஷ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்த மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.**
**T.P: 077 082 9763**

(50306) (10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி வள்ளியம்மை வேலாயுதம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளியம்மை வேலாயுதம் நேற்று (25.07.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வேலாயுதத்தின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் (மணியம்-புத்தூர்) இந்திராதேவி, குலமணிதேவி, ராசன் (லண்டன்), சிவனேஸ்வரன் (சிவம்-நீர்வேலி), சிலோன் மணிதேவி, ஞானதீபம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது மகனின் இல்லத்தில் (''ரோஜாவனம்'' நீர்வேலி கிழக்கு, நீர்வேலி) வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் (31.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் (''ராஜபவனம்'' புத்தூர் மேற்கு, புத்தூர்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 796 5852 (மணியம்)**
**077 959 6750 (சிவம்)**

(50312)(10)

தகவல்:
**பிள்ளைகள்,**

## சாரதி தேவை

**யாழ்ப்பாணம் - கொழும்பு**
**அனுபவமுள்ள கனரக வாகன சாரதி தேவை (A).**
**வயதெல்லை - 35 வயதுக்கு மேற்பட்டவர்கள்.**
**தொடர்புகொள்ளவும்:**
**077 573 6003** (50303) (10)

## J.C.B (பைக்கோ) வாடகைக்கு

**குறிப்பு:**
**போக்குவரத்து கூலி அறவிடப்பட மாட்டாது**



**தொடர்பு இல: 021 224 1466 யாழ்ப்பாணம்**
**077 771 2482 கன்னாகம்**
**077 984 7285 பருத்தித்துறை**

**இல. 207,**
**புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்,**
**K.K.S. றோட், கன்னாகம்.** (50310) (10)

## மரண அறிவித்தல்



அருட்சகோதரி

### மொறின் கொலின்ஸ் - தி.கு

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி மொறின் கொலின்ஸ் (24.07.2014) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

இவரது பூதவுடல் (28.07.2014) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியின் பின்னர் யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**121, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்**
**மாகாணத் தலைவி.**

(50309) (10)

# தாக்குதலில் ஈடுபட்ட மாணவர்கள் பொதுமக்களால் ஓட ஓட விரட்டியடிப்பு

## வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் சம்பவம்

வவுனியா, ஜூலை 26

வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு முன்பாக வைத்து பாடசாலை மாணவன் ஒருவரைத் தாக்கிய பாடசாலை மாணவர்கள் சிலரை பொது மக்கள் ஓட ஓட விரட்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது; தாக்குதலுக்கு உள்ளாகியவரும், தாக்குதலில் ஈடுபட்டவர்களும் ஒரே பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் குறித்த கல்வி நிலையத்தில் வகுப்புக்கள் நிறைவு பெற்றதும் வீடு செல்வதற்கு பிரபல பாடசாலையொன்றைச் சேர்ந்த அந்த மாணவன் தயாராகிக் கொண்டிருந்த போது அங்கு வந்த அதே பாடசாலையில்கல்விகற்கும்மாணவர்குழுவொன்று அவரை மோசமாகத் தாக்கியுள்ளது. கீழே விழுந்த அந்த மாணவன் மீது ஏறி நின்று கொண்டு அந்த மாணவர் குழு அராஜகம் புரிந்தது. இவற்றையெல்லாம் அந்தக் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிலர் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அங்கு வந்த சிலர் கேட்டபோது குறிப்பிட்ட ஆசிரியர்கள் கல்வி நிலையத்துக்கு வெளியே சம்பவம் இடம் பெறுவதால் தம்மால் எதுவுமே செய்ய முடியாதெனக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அங்கு நின்றவர்களும் வீதியால் சென்ற சிலரும் இணைந்து தாக்குதலில் ஈடுபட்டவர்களை நன்கு கவனித்து ஓட ஓட விரட்டி அடித்ததாகக் கூறப்படுகின்றது. (க-402)

**HYUNDAI Accent CAR விற்பனைக்கு**



NP HC-xxxx, Silver Colour, A/C, Power Shutter, Auto, 1500cc, CD/MP3/Radio/wp Player, Sub woofer, Leather Seat in good Conditioned car for sale. Price-1, 160, 000/= (1.16 million) Negotiable
Contact: Somasundaram Avenue, Chundikuli, Jaffna.
(சி/14688)(4.6.3) T.P: 077 790 3090

## 45ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

**அமரர் சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன்** (ஜெகன்)

[முன்னாள் பஸ் உரிமையாளரும், வடமராட்சி சிற்றூர்திச் சங்க உறுப்பினரும்]

பிறப்பு 18.01.1981 இறப்பு 12.06.2014



எமது குடும்பத்தின் குலவிளக்கு அமரர் சின்னத்தம்பி ஜெகதீஸ்வரனின் 45ஆம் நாள் நினைவு தினமும் அந்தியேட்டிக் கிரியையும் இன்று (26.07.2014) சனிக்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலைக் கடலில் கரைக்கப்படும்.

மறுநாள் (27.07.2014 )ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு : இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யார்க்கரு, கரவெட்டி கிழக்கு. குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா பற்றிய கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் இந்த ஆலயத்தின் திருவிழாவில் ஆர்வமுள்ள மக்களை கலந்து கொள்ளுமாறு யாழ்.பேராலயப் பங்குத் தந்தையும் யாழ். மறைக்கோட்ட முதல்வருமான வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் கேட்டுள்ளார். (ஓ-51)

## விளையாட்டுப் போட்டிகள்

கோப்பாய், ஜூலை 26

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பாலர் பகல் விடுதி விளையர்ட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. க.பரமானந்தராசா தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக க.கமலதாசன், க.விமலநாதன், இ.தெய்வேந்திரம், பா.செந்தூரன், பொ.நிஷாந்தன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)

◆ ◆ ◆

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் அ.நடராசா தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

◆ ◆ ◆

கரணவாய் தெற்கு விபுலானந்தர் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாலர் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கு.லோகேஸ்வரன் தலைமையில் இடம் பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் பொ. வியாகேசு கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா கலந்து கொள்வார். (க)

## நெஞ்சை விட்டகலா...

## நான்காம் ஆண்டு நினைவு



செல்வி **சேவியர் சுபாஜனா**

(உ/த மாணவி-யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்)

தோற்றம் 04.12.1992 மறைவு 26.07.2010

கண்ணீரில் வாடும் நிலைதந்து கண்மணியே
மண்ணக வாழ்வறுத்து விரைந்து
நீ சென்றதேனோ?
பொன்மகளே உந்தன்
பூமுகங் காணாது
புவிதனிலே யாம்படும்
வேதனையை அறியாயோ!

குடும்பத்தினர்.
கதீசன் காட்வெயார்,
சின்னக்கடை, குருநகர்,
யாழ்ப்பாணம். (50277)(4.3.6)

## மரண அறிவித்தல்



### தம்பையா சிவராசா

புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வள்ளிபுனம் பாடசாலை அண்மையைத் தற்போதைய முகவரியாகவும் கொண்ட முன்னை நாள் புதுக்குடியிருப்பு தேவிபுரம், வள்ளிபுனம் கிராம அலுவலருமான தம்பையா சிவராசா 24.07.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கோடீஸ்வரன் (தேவிபுரம் சந்தி- புதுக்குடியிருப்பு), சிங்கேஸ்வரன் (கனடா), இலங்கேஸ்வரன் (பிரான்ஸ்), குகனேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயந்தினி (சுவிஸ்), குமுதினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(41332)(4.6.3) தகவல்: குடும்பத்தினர்.


## கணித பாட பரீட்சை புதனன்று

யாழ்ப்பாணம், ஜூலை 26

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கடந்த 21 ஆம் திகதி நடத்தப்படவிருந்த கணித பாட பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை நடத்தப்படவுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## மரண அறிவித்தல்

### லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம் J.P



4ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்காலிமாக கச்சாய் வீதி, சாவகச்சேரியில் வசித்து வந்தவருமான லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம் நேற்று (25.07.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-அமராவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், தர்சினியின் அன்புக் கணவரும், ரவிசங்கர், தினேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.7.2014) ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் றோட், சப்பச்சி மாவடி,
கோயில் வீதி, சாவகச்சேரி.
தகவல்: குடும்பத்தினர்.
077 833 0151
(50274)(5.6.3)




**வாடகை** மூன்று அறைகளுடன் மேல் மாடி வீடு வாடகைக்கு. 5/1, கடுவப்புலம் வீதி (பிரதேச சபை வீதி) கோணாவளை, கொக்குவில் கிழக்கில் வாடகைக்கு உள்ளது. (யாழ். மருத்துவக் கல்லூரி முன்னால் உள்ள ஆரியகுளம் ரோட்டில் தொடங்கும் ரோட் ஆகும்)
தொடர்பு: 077 732 8370/071 829 6065

**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=
(Attached Bathroom)
Hotel Villa City
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 2222

**மணமக்கள் தேவை**
- 81 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 28¾ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற MSC IT முடித்த சைவபோசன மணமகனுக்கு சைவபோசனமுள்ள பட்டதாரி மணமகள் தேவை.
- 69 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 27 பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகனுக்கு 76 இல் பிறந்த ஆங்கில அறிவுள்ள மணமகள் தேவை.
- 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 39¾ பாவமுடைய MSC BIO கெமிஸ்ரிமுடித்து ஜெனடிற் ஆராய்ச்சியாளராகப் பணிபுரியும் சைவபோசனமுள்ள மணமகளுக்கு சைவபோசனமுள்ள Dr, இஞ்சினியர் மணமகன் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி
077 607 0862

# தொழிலின்றி தவிக்கும் மீனவருக்கு மானியம் வழங்க வேண்டும் அரசு

## அட்டாளைச்சேனை பிரதேச அறபா கிராமிய மீனவ சங்கம் கோரிக்கை

அம்பாறை, ஜூலை 26

அம்பாறை மாவட்டதில் கடந்த நான்கு மாதங்களாக கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள மீனவர்கள், வருடத்தில் காலாண்டுப் பகுதியில் எந்தவித வருமானம் இன்றித் தவிக்கும் மீனவ தொழிலாளர்களுக்கு அரசு மானியம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அட்டாளைச்சேனை பிரதேச அறபா கிராமிய மீனவ சங்கத்தின் தலைவர் எம்.ஏ.ஜப்பார்,

"அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட 7 மீனவர் சங்கங்கள் உள்ளன. அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களில் 2 ஆயிரத்து 250 மீனவர் குடும்பங்கள் கடற்றொழிலை நம்பியே தமது ஜீவனோபாயங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில் கரவலை மற்றும் ஆழ்கடல் மீனவர்கள், காலநிலை மாற்றம், ஆழ்கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம், கடலில் அதிகளவிலான டொல்பின் மீன்களின் அச்சுறுத்தல், பெரியளவிலான மீன்பிடி படகுகளின் ஆதிக்கம் போன்ற காரணங்களினால் கடந்த 4 மாதங்களாக எந்தவித தொழிலுமின்றி பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதன் பின்னர் குறிப்பாக கரைவலை மீன்பிடியாளர்கள் தொழிலிழந்துள்ளனர்.

அரசால் வழங்கப்பட்டு வந்த எரிபொருள் மானியமும் கடந்த 3 மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளது.

அதனால் மிகுந்த சிரமங்களையும், கஷ்டங்களையும் இந்த மீனவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த மீனவர்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் முறையாக மீன்பிடியில் ஈடுபடுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற)



# இடர் முகாமைத்துவ முதலுதவி செயலமர்வு

அம்பாறை, ஜூலை 26

இடர் முகாமைத்துவ முதலுதவி செயலமர்வு ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.ஜெகதீசன் தலைமையில் ஆரம்பமான செயலமர்வில் அம்பாறை மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் எ.எஸ்.எம். சியாத், மற்றும் என்.சசிகரன், உள்ளீட்டோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 45 மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு இடர் காலங்களில் முதலுதவியாளர்களாக செயற்பட வேண்டிய முறைகள் பற்றி பயிற்சி பெற்றனர்.

இடர்கள் மற்றும் மனித வாழ்க்கையில் அன்றாடம் நிகழும் விபத்துக்கள் உட்பட்ட சம்பவங்களின் போது பின்பற்ற வேண்டிய தற்காப்பு நடைமுறைகள், மற்றும் முதலுதவிகள் தொடர்பாகவும் சுவாச மற்று பாதிக்கப்பட்ட வர்களுக்கு மூச்சு வழங்குதல், மயக்கம் ஏற்பட்டவர்களுக்கான முதலுதவி, அதிர்ச்சி அடைந்தவர்களைசுயநினைவுக்குகொண்டு வருதல், மாரடைப்பால் பாதிக்கப்படவர்களுக்கான முதலுதவி, முறிவுகள் ஏற்பட்டவர்களுக்கான முதலுதவி வழங்குதல் போன்றவற்றுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ற)


### சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன் விழா மண்டபம்

### உணவு வழங்குநர்களைப் பதிவு செய்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொன் விழா நகர மண்டபம், பொதுமக்களினால் கோரப்படும்போது திருமண வைபவம் பூப்புனித நீராட்டு விழா மற்றும் ஏனைய விழாக்களை நடத்துவதற்கு வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. இந்த வைபவங்களை எமது மண்டபத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்படும் போது அந்த நிகழ்வுகளுக்கான தரமான சிற்றுண்டி வகைகள், தேநீர், குளிர் பானம், மதிய உணவு, காலை உணவு, இரவு உணவு என்பன வழங்குவதற்கு விரும்புகின்ற உணவக உரிமையாளர்களும், தனியார்களும் எமது நகராட்சி மன்றத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவு செய்பவர்கள் சைவ, அசைவ உணவுகளை வழங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். பதிவுகளை மேற் கொள்பவர்களது உணவின் தரம் பரிசீலிக்கப்பட்டு, உணவு தயாரிக்கும் இடமும் பார்வையிடப்பட்டே வழங்குநர்கள் தெரிவு செய்யப்படுவர். உணவு விநியோகம் செய்வதற்கான வாகன வசதி தங்களாலேயே ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். பதிவுகளை மேற்கொள்ள வேண்டிய கடைசித் திகதி 10.08.2014 ஆகும்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
25.07.2014

(C/15231)(10.6)

இ. தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்.
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.


# தாகசாந்தி நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூலை 26

சின்னக் கதிர்காமம் எனப் போற்றப்படும் மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தின் தாந்தாமலை முருகன் ஆலய உற்சவத்துக்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி எதிர் வரும் 9 ஆம் திகதி மாபெரும் தாகசாந்தி நிகழ்வு ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று திக்கோடை சிவகலா மன்றத்தின் தலைவர் தங்கத்துரை கரன் தெரிவித்துள்ளார்.

திக்கோடை பிர தான வீதியில் அமைந்துள்ள அப்பாறைப் பிள்ளையார் ஆலயத்தின் முன்பதாக சாந்தி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


## கண்ணீர் அஞ்சலி



### ஜெராட் ஜொய்ஸ்லி பயஸ் பத்திநாதர்

2014.07.24 அமரத்துவமடைந்த ஜெராட் ஜொய்ஸ்லி பயஸ் அவர்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் அன்பு மகளும், எமது நண்பியுமாகிய செல்வி கரோலின் (மாணவி- உயர்தர கணிதப்பிரிவு, யா/வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை) அவர்களுக்கும், அவரது குடும்ப உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

நண்பர்கள்,
கணித உயிரியல் பிரிவு
(ஆங்கில மொழி மூலம்)- 2015

(50308)
(10)



## மரண அறிவித்தல்



### ஜெராட் ஜொய்ஸ்லி பயஸ் பத்திநாதர்

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெராட் ஜொய்ஸ்லி பயஸ் (இந்திரன்) நேற்றுமுன்தினம் (24.07.2014) வியாழக்கிழமை விபத்துக்குள்ளாகி இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்திநாதர் மற்றும் நேசம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், சுஜிதாவின் (சுட்டி) அன்புக் கணவரும், கரோலின், டினேஜா (யா/வேம்படி மாணவிகள்), ஜெனிற்றா, டனிஸ்ரன் (ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) லியோனிஸ் (குளமங்கால் R.C) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறின்ஸ்லி பயஸ் (பிரான்ஸ்), அருட்சகோதரி மேரி விநோதா A.C (குளமங்கால் R.C), வினிவிறேற் றொபல்னா, அருட்சகோதரி வேஜினி பப்ரிஸ்ரா H.C (பரந்தன் திருச்சிலுவை வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற நாகேஸ்வரியின் மருமகனும், எடித் அன்றியா, அலோசியஸ், சுபாஜினி காலஞ்சென்ற சுஜிகலா ஆகியோரின் மைத்துனரும், றொபின், பிறவின், யூலியட் ஆகியோரின் சிறியதந்தையும், மெல்வின், டிலூசன், கிளொடியா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.07.2014) சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

(50305)(10)

தகவல்: தாய், மனைவி,
அருட்சகோதரி மேரி விநோதா A.C.
021 300 2613



## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை சகாதேவன்

(உரிமையாளர்-V.S.S. மன்னம்பிட்டி)

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சகாதேவன் 23.07.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகநாதன், மற்றும் சந்திரமோகன், சண்முகலிங்கம், சரஸ்வதிதேவி (ஜேர்மனி), சகுந்தலாதேவி, சசிகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீபாலகிருஸ்ணன் (ஜேர்மனி), சிவசுப்பிரமணியம், மனோன்மணி, லலிதாகுமாரி, சுவர்ணா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ் சென்றவர்களான இரத்தினம், ஐயாத்துரை, கந்தவனம், துரைசிங்கம், பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மயூரி (ஜேர்மனி), மயூரன் (ஜேர்மனி), மதிசன் (ஜேர்மனி), மகிழ் ராஜ், நிசாந்தன் சரணியா, சந்தியா, சாணுகா, சண்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு நீர்வேலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
T.P: 021 490 7847

(50301) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.



BIT தகவல் தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டப்படிப்பு

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு

2014/15ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்படுகின்றன

ESOFT
Shaping Lives, Creating Futures.

இடமிருந்து மட்டுமே

தொடர்ச்சியான 6 வருட தங்கபதக்கங்களை பெற்ற மாணவர்கள்

DIT

- விசேட அம்சங்கள் -

- கொழும்புப் பல்கலைக்கழக டிப்ளோமா, உயர் டிப்ளோமா, பட்டப்படிப்புச் சான்றிதழ்
- அரசாங்க, தனியார் நிறுவன உத்தியோகத்தர்களுக்கு சிறப்புச் சலுகைகள்
- பல்கலைக்கழக மாணவர்களுக்கு சிறப்புச் சலுகையாக 50% கட்டணச்சலுகை
- ரூபா 100,000 பெறுமதியான இலவச சர்வதேச கற்கைநெறிகள்

- யாருக்காக? -

அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தங்கள் பதவியுயர்வு, சம்பள உயர்விற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் IT டிப்ளோமாவினை யாழ் ESOFT கிளையின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்




UGC Approved

Limited Seats

Commencement on 31st July 2014

ESOFT
Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna (On to of HSBC)
Telephone : 021 222 4142

in island wide 45 Branches www.esoftlk Hotline : 077 309 9 308

# கொழும்பு சென்ற ஊடகவியலாளர்கள் ஓமந்தையில் பொலிஸாரால் தடுப்பு

## அவர்களது வாகனத்தில் கஞ்சா இருந்தது எனக் கூறுகின்றது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜுலை 26

தனியார் நிறுவனம் ஒன்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயிற்சிப்பட்டறைஒன்றில்கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த 6 ஊடகவியலாளர்களும் அவர்களது வாகனச் சாரதியும் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்வதற்காக 16 ஊடகவியலாளர்கள் இரு குழுக்களாக கொழும்பு நோக்கிப் பயணித்திருந்தனர். இரவு 8.45 மணியளவில் அவர்களது வாகனங்கள்மாங்குளம்பகுதியில்வைத்து இராணுவப் பொலிஸாரால் மறிக்கப்பட்டு கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டது. ஆனையிறவு இராணுவக் காவலரணில் வாகனத்தை நிறுத்தாது பயணித்தமையாலேயே சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று இராணுவப் பொலிஸாரால் காரணம் கூறப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் இரவு 10.10 மணியளவில் ஓமந்தை சோதனைச் சாவடியை அடைந்த நிலையில், ஒரு குழுவினர் சோதனைகளுக்குப் பின்னர் பயணத்தைத் தொடர, ஒரு குழுவினர் சென்ற வாகனம் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் கடும் சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டது. அதன்போது சாரதியின் இருக்கைக்குப் பக்கத்தில் இருந்து கைப்பற்றிய சிகரெட் பெட்டியினுள் கஞ்சா இருந்தது என்று அங்கிருந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிகரெட் பெட்டியை இராணுவச் சிப்பாய் ஒருவரே சாரதி இருக்கைக்கு அருகே போட்டார் என்றும், அதைத் தாம் கண்டனர் என்றும் வாகனத்தில் இருந்த ஊடகவியலாளர்கள் கூறுவதுடன், அதுகுறித்து பொலிஸாரிடம் தெரிவித்தபோது, அவர்கள் தம்மைத் தாக்க முற்பட்டதுடன், தகாத வார்த்தைகளாலும் ஏசினர் என்றும் கூறுகின்றனர்.

சிகரெட் பெட்டியைக் கைப்பற்றிய பொலிஸார், ஊடகவியலாளர்களின் அடையாள அட்டைகள், கைபேசிகள் என்பவற்றைப் பறிமுதல் செய்ததுடன், அவர்களை அங்கு அமைந்துள்ள தற்காலிக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டனர் என்றும், அதன்பின்னர் அவர்களை ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஓமந்தைப்பொலிஸ்நிலையபொலிஸாரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"குறித்த வாகனத்தின் சாரதி கஞ்சா வைத்திருந்தமைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த வாகனத்தில் பயணித்த ஏனையோர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் சில மணி நேரங்களில் அவர் விடுவிக்கப்படுவார்கள்" - என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி.5.55.402)

# தொடர்ச்சிகள்

## நின்ற

போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். வாடகைக்கு சென்ற மற்றொரு வாகனம் பழுதடைந்தமையினால் அதன் உதவிக்கு என்று அனுப்பப்பட்ட ஹைஏஸ் வாகனமே விபத்தில் சிக்கியது என்று கூறப்பட்டது. வான் உரிமையாளர் பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர். சாரதியான இ.சரவணனுக்கு இடதுகால் முறிந்தது.

இறப்பு விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் சாவு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (உ-10)

## சிறிய

வில் பாடசாலைக்கு நடந்து சென்ற சிறுமியொருவரை காரைநகரிலுள்ள முருகன் கோயிலுக்கருகில் வைத்து புலிகளின் சீருடை போல் சீருடை அணிந்திருந்த நபரொருவர் அருகிலுள்ள காட்டுக்குள் தூக்கிச் சென்றுள்ளார். இதன்போது அங்கு வந்த கடற்படைச் சிப்பாய் இதனைக், கண்டுவிட்டு விசாரிக்க முற்பட்டபோது அந்நபர் சிறுமியை கைவிட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

அதன்போது தாயார், மகள் நேரகாலத்துடன் பாடசாலை விட்டு வந்தமை தொடர்பில் அதிபரிடம் வினவியுள்ளார். தினமும் மகள் இவ்வாறு வருவதாகவும் கூறியுள்ளார். ஆனால், அந்தச் சிறுமி அந்தக் காலப் பகுதியில் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை என பாடசாலை அதிபர் கூறியுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில் அச்சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் அச்சிறுமி வல்லுறவுக்குட்படுத்தப்பட்டது தெரியவந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். வைத்தியசாலைப் பொலிஸார் ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். நீதிமன்றத்துக்கும் தெரிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 9 கடற்படைச் சிப்பாய்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எனினும், இரண்டுபேர் விடுமுறை எடுத்திருந்ததால் 7 பேரே அடையாள அணிவகுப்பில் உட்படுத்தப்பட்டனர்.

எனினும், இவர்களில் எவரையும் சம்பந்தப்பட்டவர் அடையாளம் காட்டவில்லை. அதன் பின்னர்அவர்கள்பிணையில்விடுவிக்கப்பட்டனர். நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

உலகெங்கும் பாலியல் வன்முறைகள் தினமும் இடம்பெறுகின் றன. ஆனால், காரை நகரில் இடம்பெற்ற ஒரு சிறு சம்பவத்தை பெரிதுபடுத்தி காட்டுவதற்கு கூட்டமைப்பு முயற்சிக்கின்றது" - என்று தெரிவித்துள்ளார்.(ற-சி)

## மதுக்

காரணத்தால் மதுபான நிலையங்கள் அன்றைய தினம் மூடப்படுவது இல்லை என்பதே இதுவரையில் இருந்து வந்த நடைமுறை. எனினும் ரம்ழான் புனிதப் பெருநாளாக் கொண்டாடப்படுவதால் மது பான நிலையங்கள் மூடப்படுமா என்று ஆணையாளரிடம் கேட்டபோது, "இந்த வரு டம் ரம்ழான் பெருநாளை முன்னிட்டு நாடு முழுவதும் மதுபானக் கடைகள் மூடப்படும். அனைத்துக் கடை உரிமையாளர்களும் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டும். இது தொடர்பான அறிவித்தல் மதுவரித் திணைக்களங்களுக்கு விரைவில் அனுப்பப்படும். ரம்ழான் பெருநாளான 29ஆம் திகதி சகல மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும்" எனத் தெரிவித்தார். (உ-14)

## சீட்டுப்

அவரிடம் சீட்டுப் பிடித்து வந்தனர். கடந்த சில ஆண்டு களாக சீட்டு பிடிப்பு ஒழுங்காக நடந்து வந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த வர்த்தகர் தலைமறைவாகிவிட்டார். விசாரித்ததில் தனது வர்த்தகம் மற்றும் வீடு என்று எல்லாவற்றையும் விற்றுவிட்டு சொல்லாமல் கொள்ளாமல் அவர் வெளியேறிவிட்டார் என்பது தெரியவந்தது. இதனால் அதிர்ந்து போயிருக்கிறார்கள் அவரிடம் சீட்டுப் பிடித்தவர்கள்.

பூட்டிக்கிடக்கும் கடையையும் வர்த்தகரின் வீட்டையும் அவரிடம் சீட்டுப் பிடித்தவர்களும் அவருக்குக் கடன் கொடுத்தவர்களும் நாளாந்தம் வந்து பார்த்துச் செல்கிறார்கள்.

பல கோடி ரூபாய்களைச் சுருட்டிக்கொண்டு அந்த வர்த்தகர் தலைமறைவாகிவிட்டார் என்று கூறப்டுகிறது. எனினும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

## உதயன்

செய்யும் வரையில் விசாரணைகளைக் கிடப்பில் போடுகிறேன்" என்று நீதிவான் அறிவித்தார்.

முன்னதாக, இந்த வழக்கில் மேலதிக விசாரணைகளை நடத்துவதற்குத் தமக்குக் கால அவகாசம் வேண்டும் என் றும் பொலிஸார் நீதிவானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

2013 ஜூன் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து வடமராட்சிக்கு 'உதயன்' பத்திரிகைப் பிரதிகளை எடுத்துச் சென்ற விநியோகப் பணியாளர் பிரதீபன் மாலிசந்திப் பகுதியில் வைத்து அடையாளம் தெரியாதவர்களால் தாக்கிக் காயப்படுத்தப்பட்டார். அவரது மோட்டார் சைக்கிள் 'உதயன்' பத்திரிகைப் பிரதிகளுடன் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

இது தொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடந்து வருவதாகவும் சந்தேகநபர் களை இனங்காண தமக்கு மேலதிக கால அவகாசம் வேண்டும் என்றும் கேட்டார்.

சந்தேகநபர்களைக் கைது செய்யும் வரை விசாரணைகளைக் கிடப்பில் போட்ட நீதிவான், சந்தேகநபர்களை கைது செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (உ-109)

## கிராமத்தினுள்

யது. இதில் காயமடைந்த மூவர் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பயனின்றி கதிர்காமத் தம்பி நடராஜா (வயது- 61) உயிரிழந்தார்.

பவளசிங்கம் பூபாலரத்தினம் (வயது- 39), கேதாரம் அமிர்தலிங்கம் (வயது- 21) ஆகிய இருவரும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நடராஜாவின் வீட்டு வளவுக்குள் புகுந்த யானை, அவரைக் கண்டபடி தாக்கியதுடன் துதிக்கையால் தூக்கி மரத்துடனும் மோதியடித்தது என்று நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

யானை ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்வதாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவித்தபோதும் அவர்கள் 4 மணி நேரம் தாமதமாகவே வந்தனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டினர். இதனால் திணைக்கத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த மக்கள் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இராணுவத்தினர் தலையிட்டே பிரச்சினையை சுமுகப்படுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## ஆட்சி

சுட்டதடா கை விட்டதடா என்ற பரிதாப நிலையில் இன்று முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது என்பது வெளிப்படை. சட்டி அகோரமாகச் சுட்டும் அதை முஸ்லிம் காங்கிரஸ் கைவிடாமல் இருப்பது அந்தக் கட்சிக்கு மட்டுமேயான அடிப்படைச் சுயநலமாகும்.

தமிழர் விடுதலை போராட்ட அரசியலில் தமிழரும் முஸ்லிம்களும் கடந்த காலங்களில் இணைந்தே செயற்பட்டனர். சில முஸ்லிம் அரசியல் வாதிகளின் பேராசையாலும், சில தமிழ் அரசியல்வாதிகளின் பிற்போக்கான சிந்தனைகளாலும் மட்டுமே இந்த உறவு பாதிக்கப்பட்டது; கீறல் விழுந்தது. பின்னர் ஆயுத இயக்கங்களின் கண்மூடித்தனமான போக்கினால் இக்கீறல்கள் பெருவெடிப்பாக மாறியது. இதன் காரணமாக இரு சமூகங்களும் குறிப்பாக முஸ்லிம் சமூகம் பெரும் இழப்பைசந்தித்ததுடன் இலங்கை அரசுக்கு துணை போகவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது.

ஆயுத போராட்டம் முடிவுற்று மீண்டும் ஜனநாயக ரீதியிலான இன்றைய போராட்டக் காலத்தின்போது முஸ்லிம்களும், தமிழர்களும் இரு இனங்களினதும் ஒற்றுமை பற்றிச் சிந்திப்பது தவிர்க்க முடியாததாகும். முஸ்லிம்களை இஸ்லாமியத் தமிழர்கள் என்று சொல்வதைவிட்டு இன்று முஸ்லிம்கள் தனியான இனம் என்று கூட்டமைப்பு போன்ற பெருங்கட்சிகள் அங்கீகரித்திருக்கின்றன. அதனாலேயே தமிழ் பேசும் மக்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகின்றது. இது தமிழ், முஸ்லிம் உறவுக் குப் பலம் சேர்க்கிறது. கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலின்பின் இத்தகைய உறவு வலுப்பெற சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. உலமா கட்சியின் கோரிக்கையை ஏற்று ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருந்தால் இன்று சிங்கள பேரினவாதத்தின் கோரப்பல் உடைந்திருக்கும். அந்த சந்தர்ப்பத்தை முஸ்லிம் காங்கிரஸ் மத்தியில் அமைச்சுப் பதவியையும் மற்றும் சில பதவிகளையும் தக்க வைப்பதற்காக கைவிட்டு விட்டது மு.கா.

அன்று நாம் சொன்னது இன்று உணரப்படுவதன் மூலம் உலமா கட்சி எப்போதும் சமூகத்துக்கான அரசியல் வழி காட்டலை மிக சிறப்பாகவே செய்கிறது என்பது தெளிவாகியுள்ளது - என்று தெரிவித்தார். (உ-10)

## வாக்காளர்

டத் தேர்தல்கள் திணைக்களத்தில் அல்லது கிராம உத்தியோகத்தர்களிடம் யு.ஈ. நியூ (UE New) என்ற படிவத்தைப் பெற்று அல்லது அதனையொத்த படிவமொன்றை www.slelections.gov.lk என் னும் இணைய தளத்திலிருந்து பதி விறக்கம் செய்து அதனைப் உரியமுறையில் பூர்த்தி செய்து கிராம அலுவலரின் பரிந்துரையுடன் 2014.08.21ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில்ஒப்படைக்கவேண்டும்.

வாக்காளராகத் தங்களைப் பதிவு செய்து கொள்வதை ஒவ்வொருவரும் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தேர்தல்கள் திணைக்கள பொது அலுவலகத்தின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் யூ.அமரதாச அவர்கள் அனைத்து உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் ஊடாக அறிவித்துள்ளார். (உ-102)

## கோண்டாவில்

மாணவனான ரவீந்திரன் சுகிர்தன் (வயது - 20) என்பவரே வாள் வெட்டில் உயிரிழந்தார். உயிரிழந்த மாணவர் தரப்பினருக்கும் அவரை வாளால் வெட்டிய தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட சிறு பிரச்சினை பின்னர் கொலையில் முடிந்தது. (உ-4)

## நெல்லியடியில்

என முகாமையாளர் தெரிவித்திருந்த நிலையில் 12 இற்கும் மேற்பட்ட குழுவினர் கடனுக்காக விண்ணப்பிருந்தனர். ஆனால் நீண்ட நாள்களாகியும் கடன் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் நிலையத்தின் முகாமையாளர் பண மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் இடைநிறுத்தப்பட்டார் என்று கூறப்படுகிறது. அத்துடன் நிலையத்தின் நடவடிக்கைகள் நெல்லியடியில் நிறுத்தப்பட்டு அவை யாழ்ப்பாணக் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

கடனுக்காக விண்ணப்பித்த தாம் நிலையத்தின் தொலைபேசி இலக்கத்துடன் பல தடவைகள் தொடர்பினை ஏற்படுத்தியபோதும் தொடர்புகொள்ள முடியாதுள்ளதால் என்ன செய்வது என்று தெரியாது அந்தரித்துத் திரிகின்றனர் என்று கூறினர். இது தொடர்பாக நிறுவனத்தின் யாழ். கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"நெல்லியடியில் செயற்பட்ட வியாபார நிலையம் தற்போது யாழ். கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மக்களுக்காக சேவைகள் இங்கு இடம்பெறும் எனவே வாடிக்கையாளர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு மேலதிக சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்" எனத்தெரிவித்தார். (உ-14.9)

## இராசபுரம்

களில் உள்ள மக்களை குடியேற்றவென காடழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தநிலையில் நேற்றுமுன்தினம் கனரக வாகனங்களின் துணையுடன் இராசபுரம் கிராமத்தில் உள்ள மக்களின் வாழ்விடங்களுக்குள் சென்ற அதிகாரிகள் மக்களின் குடியிருப்புக்களை அழிப்பதற்கு முயன்றிருக்கின்றனர்.

அவ்வேளை அங்கு குடியமர்ந்துள்ள மக்கள், தாம் 1985 ஆம் ஆண்டு காடுவெட்டி குடியேறினர் என்றும், அந்தக் கிராமத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றமையால் தமது நிலத்தினை அபகரிக்க வேண்டாம் என்றும் மன்றாட்டமாகக் கேட்டுள்ளனர்.

அதனை விடவும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் முரண்பாடுகளுக்கு பின்னரான அரச காணிகளின் பிணக்குகளைத் தீர்க்கும் துரித வேலைத்திட்டத்தில் 2013ஆம் ஆண்டு பதிவுகளை மேற்கொண்டமை தொடர்பிலான ஆதாரங்களையும் மக்கள் அந்த அதிகாரிகளிடம் சமர்ப்பித்திருக்கின்றனர்.

இருப்பினும் அந்தப் பகுதிக்குச் சென்ற அரச அதிபர், அந்த மக்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்கவில்லை. சம்பவ இடத்துக்குச் சென்று அரச அதிபருடன் நீண்ட நேர வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டதன் பின்னர், இராசபுரம் கிராம மக்களுக்கு வேறு இடங்க ளில் காணிகள் இல்லையேல் அவர்களது காணிகளை திரும்பவும் ஒப்படைக்கப்படும் என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்."- என்று தெரிவித்தார். (ற)

## திரைப்படம்

பின்பற்றியே திரைப்படத்தை ராஜா திரையரங்கில் திரையிட தாம் நடவடிக்கை எடுத்தார் என்றும் அவர் கூறினார்.

"படம் தொடங்குவதற்கு குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாகவே திரையரங்கில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் குவிந்திருந்தனர். பரவாயில்லை திரையிடுங்கள் என்றுகூறி விட்டுச் சென்றனர். ஆனால் படம் ஓடத் தொடங்கிய 5 ஆவது நிமிடத்தில் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பொலிஸார் உடனடியாகப் படத்தை நிறுத்துமாறு கூறினர். அடுத்த சில நிமிடங்களில் திரையரங்குக்கு வந்து விட்டனர்" என்றார் இயக்குநர். மாலை இரவு 9 மணி வரையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் அமர்ந்திருந்து 'மாறுதடம்' படத்தைப் பார்த்தனர்.

இந்தப் படம் புலம்பெயர்ந்த இரண்டு தலைமுறைத் தமிழர்களின் வாழ்வையும் தாயகத்தில் வாழ்பவர்களின் கதையையும் கூறும் ஒன்றே தவிர, எந்த வித அரசியலையும் நேரடியாகப் பேசும் படம் அல்ல என்று அதன் இயக்குநர் கூறினார்.

திரைப்படத்தை பார்வையிட்ட பின்னர் படத்தை திரையிடுவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கி உள்ளனர் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (உ-4,14)

## சர்வதேச

மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பாராக்கிரம பரணகம தெரிவித்தார்.

வெளிநாட்டு நிபுணர்கள் சுதந்திரமான முறையில் தமது ஆலோசனைகளை வழங்குவார்கள். எனினும் பொது அமர்வுகளிலோ விசாரணைகளிலோ தலையிடுவதற்கான ஆணை அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார். (உ-5)

## காங்கேசன்

யில் மட்டும் நிரந்தரப் பாதுகாப்பு வேலிகள் அகற்றப்பட்டு, புனரமைப்பு பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் காங்கேசன்துறை ரயில் நிலையத்தையும் புனரமைப்பதற்கு இராணுவத்தினர் அனுமதியளித்துள்ளனர். இதற்கமைய காங்கேசன்துறை ரயில் நிலையக் கட்டடங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (உ-5)

## காரைநகர்

இரண்டு சிறுமிகளும் பாடசாலை செல்லும் நேரத்தில் கடற்படைச்சிப்பாயால் அழைத்துச் செல்லப்பட்டு வன்புணர்வுக் குட்படுத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. 11 நாள்களாக மாணவியொருவர் அவ்வாறு வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (உ-4)

## விவசாய

கோரப்பட்டு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)

## கிராம

உங்களை கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

இதற்கு கிராம அலுவலர், தான் அவ்வாறு களவான அடையாள அட்டை எதுவும் தயாரித்து வழங்கவில்லை என வாதிட்டுள்ளார். இதனை அவர் ஏற்றுக்கொள்ளாதவராக தொடர்ந்து மிரட்டியுள்ளார். கிராம அலுவலரின் நன்மை கருதியே பொலிஸ் நிலைய அலுவலக தொலைபேசியிலிருந்து அழைப்பை எடுக்காது தனது சொந்த தொலைபேசியிலிருந்து எடுக்கிறார் எனவும் கூறியுள்ளார்.

குறித்த பிரச்சினையை பெரிதாக்காமல் அமுக்கிவிடுவதற்கு 75,000 ரூபா பணத்தை தான் அனுப்பும் பொலிஸ் உத்தியோகத்தரிடம் வழங்குமாறும் இதுகுறித்து எவரிடமும் முறையிடவோ எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் எனவும் அழைப் பினை ஏற்படுத்தியவர் கூறியுள்ளார்.

மிரட்டப்பட்ட கிராம அலுவலர் பிரதேச செயலாளரிடமும் அரச அதிபரிடமும் தகவலை தெரியப்படுத்திய பின்னர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார். (உ-102)

# அடையாள அணிவகுப்பில் உண்மையான குற்றவாளிகள் எவரும் நிறுத்தப்படவில்லை

## காரைநகர் சம்பவம் குறித்து சபையில் சம்பந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு. ஜூலை 26

காரைநகர் சிறுமிகள் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பில் உண்மையான குற்றவாளிகள் அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்படவில்லை என நேற்று குற்றஞ்சாட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன். குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் உடன் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று காரைநகர் சம்பவம் தொடர்பில் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு பெண்களினதும், சிறார்களினதும் பாதுகாப்பு பற்றிப் பேசவேண்டியுள்ளது. குறிப்பாக, காரைநகர் ஊரி எனும் பகுதியில் 11 வயது சிறுமியொருவர் பாலியல் ரீதியாக பல தடவைகள் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை உத்தியோகத்தர்களாலேயே இவ்வாறான துஷ்பிரயோகம் நடத்தப்பட்டது என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், 10 வயது சிறுமியும் துன்புறுத்தப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. இது மிகவும் கொடூரமான குற்றம். இதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதுடன், இவ்வாறான சம்பவங்கள் மேலும் இடம்பெறாமல் இருப்பதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

வடக்கில் இராணுவமயமாக்கல் பற்றி பல தடவை வலியுறுத்தியிருக்கின்றோம். இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே இந்தச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது. காரைநகர் சம்பவம் தொடர்பிலான பாதுகாப்பு தரப்பு நடவடிக்கை திருப்திகரமாக இல்லை. இந்தப் பிரச்சினை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு உண்மையான குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா? உண்மையான குற்றவாளிகளை விடுத்து ஏனையவர்களை நிறுத்தினால் எவ்வாறு அடையாளம் காண முடியும் - என்றார். (ற-சி)

## அகதிகளை ஏற்றிச்சென்ற படகின் உரிமையாளர்கள் கைது

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்கு அகதி களை ஏற்றிச்சென்ற படகின் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஞ்சனி, ராஜு, சஞ்சீவ் ஆகியோரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக புதுச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். மீன்பிடி சுற்றுலாவுக்காக விஜயன் என்ற இலங்கை அகதி கடந்த 11 ஆம் திகதி படகை வாடகைக்கு கேட்டுப் பெற்ற தாக மஞ்சனி தெரிவித்துள் ளார்.

இருப்பினும், பிரச்சினை


கோப்புப்படம்

மிகவும் தீவிரமானது என்பதால் தொடர்ந்து விசாரித்து வருவதாக புதுச்சேரி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழகக் காவல் துறையும் தனியாக விசாரணை நடத்தி வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் 157 அகதிகளை ஏற்றிச் சென்ற படகை ஆஸ்திரேலிய அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

அந்தப்படகு இந்தியாவிலிருந்து சென்ற நிலையில், படகில் சென்ற அகதிகள் குறித்து இந்திய மத்தியரசு அக்கறை கொண்டுள்ளது.

இந்நிலையில் படகில் சட்ட விரோதமாகச் சென்ற, புகலிடக் கோரிக்கையாளர்களுடன் தமது தூதரக அதிகாரிகள் தொடர்பு கொள்ள இந்திய அரசு அனுமதி கோரியுள்ளமை யும் குறிப்பிடத்தக்கது. (வ)

## பெரும் அவலத்தில் கிறிஸ்மஸ் தீவு முகாம்கள்

கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடக் கோரிக்கையாளர்கள், குறிப்பாக தாய்மார் மற்றும் பிள்ளைகள் பெரும் துன்பத்தை எதிர்நோக்குவதாக ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.


ஆஸ்திரேலியாவில் கட்டாயப்படுத்தித் தடுத்து வைக்கப்பட்டுள்ள புகலிடம் கோரும் பிள்ளைகள் பற்றிய தேசிய மட்ட விசாரணையின் ஒரு கட்டமாக ஆணைக்குழுவின் தலைவி கில்லியன் ட்ரிக்ஸ் கடந்த வாரம் கிறிஸ்மஸ் தீவுக்கு பயணம் செய்தார்.

தாம் 4 மாதங்களுக்கு முன்னர் அங்கு சென்றபோது இருந்த நிலைமை இன்று மிகவும் மோசமான தாக மாறியிருக்கின்றது என்று பேராசிரியர் ட்ரிக்ஸ் அம்மையார் தெரிவித்தார்.

கிறிஸ்மஸ் தீவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளின் புகலிடக் கோரிக்கையாளர்களின் பிள்ளைகளில் பெரும்பாலும் அனைவரும் நோய்வாய்ப் பட்டவர்களாக மற்றும் மன அழுத்தம் உள்ளவர்களாக காணப்படுகின்றனர். என்று அவர் கூறினார்.

கிறிஸ்மஸ் தீவில், 174 பிள்ளைகள் அடங்கலாக 1,102 புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளனர். தாம் கடந்த மூன்று தினங்களில் நூற்றுக்கணக்கானவர்களை பேட்டி கண்டதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவி தெரிவித்தார். (வ)




நல்லூர் உற்சவத்தையொட்டி பருத்தித்துறை வீதியில் பாரதியார் சிலைக்குச் அண்மையாக உள்ள அரசடி வீதியை 'காப்பெற்' வீதியாக மாற்றும் பணிகள் இடம்பெறுவதைக் காணலாம். (ஒ-7)

# நடுக்கடலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த அகதிகளைக் கொண்டுசெல்கிறது ஆஸி.

## உறுதி செய்துள்ளார் அந்நாட்டு குடிவரவுத்துறை அமைச்சர்

கொழும்பு, ஜூலை 26

ஒரு மாதகாலத்திற்கு மேலாக நடுக்கடலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 153 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களும் ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.


குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள சுங்கத் திணைக்களத்திற்குச் சொந்தமான படகு கொகோஸ் தீவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்று நேற்றுக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கொகோஸ் தீவில் இன்று தரையிறக்கப்படும் புகலிடக் கோரிக்கையாளர்கள் அங்கிருந்து விமானம்மூலம் ஆஸ்திரேலியப் பெருநிலப்பரப்பில், ஒதுக்குப்புறமாக உள்ள கேட்டின் குடி வரவுத் தடுப்புமுகாமுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளனர் எனவும் நேற்றுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆஸ்திரேலியா கொண்டு செல்லப்படுவதை அந்நாட்டு குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொறிசன் உறுதி செய்துள்ளார்.

ஆஸ்திரேலிய நிலப்பரப்பில், இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்களை இந்தியத் தூதரக அதிகாரிகள் பார்வையிட்டு விசாரணை நடத்துவர். அவர்களில் இந்தியக் குடிமக்கள் இருந்தால், அவர்களைத் திருப்பியழைக்க இந்திய அரசு இணங்கியுள்ளது. எனினும், இந்தியாவில் குடியுரிமை பெறாத இலங்கைத் தமிழர்களை மீளத் திருப்பி அழைப்பது குறித்து ஆராயவும் இந்தியா இணங்கியுள்ளது என்றும் ஆஸ்திரேலியா குடிவரவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஆஸ்திரேலியப் பெருநிலப்பரப்புக்குக் கொண்டு வரப்படும் அகதிகளுக்கு எத்தகைய [illegible]ழைவிசைவு வழங்குவது எ[illegible]பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (ற-சி)


வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த தேர்த்திருவிழாவில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். இன்று ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ற-10)

# ரஜரட்ட மாணவர்களை மன்னிக்கவும்; ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 26

ரஜரட்ட மாணவர்களுக்கு மன்னிப்பளித்து பல்கலைக்கழகத்தை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட, பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரஞ்சித் விஜயவர்தனவுக்கே ஜனாதிபதி மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

உப-வேந்தர் உள்ளிட்ட விரிவுரையாளர்களை, பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த வாரம் ஒருநாள்முழுவதும் சிறைப் பிடித்து வைத்திருந்தனர். இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'பல்கலைக்கழகத்தை மூடியமையால் 95 சதவீதமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சட்டத்தை கையிலெடுப்பதற்கு மாணவர்களுக்கு அனுமதியளிக்கமுடியாது. அவர்கள் கற்க வேண்டும். தவறிழைப்பது மனிதனின் இயல்பு. மன்னிப்பது தெய்வத்தின் செயல். ஆகையினால் அந்த மாணவர்களுக்கு மன்னிப்பளித்து பல் கலைக் கழகத்தை விரைவாக திறக்கவும்" என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தவறிழைத்த சுமார் 200 மாணவர்களுக்கு ஜயவர்தன புர பல்கலைக்கழக உப-வேந்தர் மன்னிப்பளித்திருந்தார். (ற)

# வெற்றியீட்டிய மாணவிகள் கௌரவிப்பு

கழுதாவளை, ஜூலை 26

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தமிழ் பாட கருத்தரங்கில் தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய களுதாவளை மகா வித்தியாலய மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த முறை உயர்தரப் பரீட்சை தோற்றவிருக்கும் பட்டிருப்பு வலயத்தைச் சேர்ந்த மாண வர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு பட்டிருப்பு கல்வி வலயத்துக்கான உத விக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்) எஸ். நகராசா தலைமையில் களுதாவளை மகா வித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். மனோகரன் கிழக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) கலாநிதி. எஸ். சிவநித்தியானந்தா, கிழக்கு மாகாண தமிழ் பிரிவுக்கான இணைப்பாளர் க.விக்னராசா, பட்டிருப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ஞானராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதன்போது தமிழ்த்தினப் போட்டிகளில், கவிதை ஆக்கத் தில் முதலாமிடம் பெற்ற மாணவி செல்வி து. வுகாரி மற்றும் எழுத் தாக்கத்தில் மூன்றாமிடம் பெற்ற மாணவி செல்வி க.ஹிப்றதா ஆகியோருக்கு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரால் பரிசுத் தொகை வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஓ)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு (யாழில் 1976 முதல்) FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், விரைவான பேச்சாற்றல், அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS


இன்றே அனுமதிகளை பெறுங்கள் ஆரம்பம் 03.08.2014

61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

## மரண அறிவித்தல்

### கந்தையா அருந்தவநாதன்

(முன்னாள் C.T.B. சாரதி)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருந்தவநாதன் 23.07.2014 புதன் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளிநாயகி (அன்னம்மா - கனடா) தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கந்தையா (பரியாரியார்) - இராசம்மா தம்பதியரின் மருமகனும் தவரஞ்சிதத்தின் (கனடா) கணவரும் பரிபூரணம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் யோகநாதன் (கனடா), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரனும் சபேசன் (கனடா), உமாந்தினி (U.K.), உஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீரங்கன் (U.K.), தாரணி (கவிதா - கனடா) ஆகியோரின் மாமனும் தனுஸ்கா, ரஸ்வின், ஆரதி, அனிஷா, ஏரகன், சஞ்சி, சாம்பவி, சாணு ஆகியோரின் அன்புப் பேரனும் நவரஞ்சிதம் (கனடா), தில்லைநாதன், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), மைதிலி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை அவரின் மைத்துனர் தில்லைநாதனின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

பிள்ளையார் வீதி, அளவெட்டி மத்தி.
021 205 9648

(சி-15230)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில் அல்லது கோண்டாவில் பிரதேசத்தில் நல்ல சூழலில் நல்ல நிலையிலுள்ள வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. மேலதிக விவரங்களுக்கு தொலைபேசி இலக்கம் - 0777481696, 0776622981

Mega Sale

ARPICO DAMRO Piyestra Nilkamal

ஆடி தள்ளுபடி
10% → 50% வரை
அமோக விலை குறைப்பு
ஞாயிற்றுக்கிழமை திறக்கப்படும்

மங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8366 0777 286 069

## கணினி மலிவு விற்பனை

Hp Full set
24, 750/=
ஒருவருட உத்தரவாதம்
Free கமரா H.Phone

சகல விதமான Laptop கணினிகள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
சகல விதமான Laptop பற்றறிகளும் எம்மிடம் உண்டு

St.Antony's
187, K.K.S. Road,
Jaffna Town

021 222 4865, 0750698608

16 ஆவது வருட சேவையில்

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!!

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் மீண்டும் 25 பேருக்கான வெற்றிடம் உடனடியாக காணப்படுகின்றது

Trolley Boys - 25 பேர் 800 + OT + Tips தங்குமிடம், மருத்துவம் என்பன இலவசம். கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்துக்குள் பயணம்.

உடன் தொடர்பு கொள்ள
Lankavoice Hotline
யாழ்ப்பாணம் - 0779527575, மன்னார், வவுனியா - 0766697789
E-mail : Lankavoice@job4u.com
Air trust

Goverment Approval Human Resource consultants
SIBFE Licence No - 2490
No - 945
Marudana Road, Colombo - 08

Join Sri Lanka's #1 ESOFT
Shaping Lives, Creating Futures.

Vacancies @ ESOFT

Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people

Positions are available in Jaffna Campus & Kilinochchi

### Lecturers

- Areas of expertise include Networking, Software Engineering, Web Engineering, Programming with JAVA/C#/ASP.NET & DBMS knowledge, Mathematics, Computer Science etc..
- Working week will be 5 and a Half days including week end
- Experience would be an added advantage

### Marketing Executive

- Result oriented individual with strong communication skills
- Willing to travel and meet clients
- identify potential markets to promote company products
- implementing, engage and monitoring promotional activities for the branch
- Assist to achieve branch monthly targets

### Student Counselors

We are looking for goal oriented, energetic young ladies to work at ESOFT front office. You will be responsible for handling enquires from customers including students and parents and guiding them in selecting the correct acdemic or professional study programme that matches their requirement

You will be provided with the necessary training about the programmes that we offer. Basic computer literacy is expected and we will also train you to use our enquiry and registration systems

Work time will be according to a duty roster consisting of a five and a half day working week including the weekend, which is our busiest time.

### How to Apply

Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself. Please state the position applied as the subject line of the email


Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

ESOFT METRO CAMPUS
137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142, Hotline: 077 309 9 308
Web: http://www.esoft.lk Email: jaffna@esoft.lk

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17 . 04 . 1966

மறைவு
26 . 07 . 1989

## அமரர் இராமசாமி ஸ்ரீபத்மநாதன்

(ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவன்)

அன்பின் சொரூபம் – நீ
பண்பின் பதக்கம் – நீ
பாசத்தின் பொக்கிஷம்
பார்வையில் நீ என்றும்
அணையா விளக்கு

கழியலாம் இருபத்தைந்து ஆண்டுகள்
கழியவில்லை எள்ளளவும்
உன் நினைவுகள் எம் உள்ளத்திலிருந்து
காலமெல்லாம் உனை நினைத்து
உன் காலடியில் செலுத்துகின்றோம் அஞ்சலி (48658)(4.6.3)

என்றும் நினைவுடன்
பாசமிகு சகோதர சகோதரிகள்
மற்றும் உற்றார், உறவினர்.

குரும்பசிட்டி,
புலோலி தெற்கு, புலோலி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.07.2014 இல் அச்சிட்டு